கண்ணன் அருளிய கீதை

நாகராஜன் முரளி

கண்ணன் அருளிய கீதை

நாகராஜன் முரளி

2022

முகவுரை

எதை நான் கொடுப்பேன் கண்ணா எனக்கொரு கீதை-நீ சொல்ல என வேண்டினேன். கேட்டதும் கொடுப்பவனல்லவோ கண்ணன், உன் மனதை எனதாக்கி எழுதிடு எனப் பணித்தான்.

மகாகவி பாரதியின் உரைநூல் இருபத்தைந்து வருடங்களாக அலமாரியை அலங்கரித்து இருந்தது. பலமுறை படித்திருந்தாலும் அதன் அருஞ்சுவை இன்னதென்று தெரியாமல் இருந்தது. அதையே வழிகாட்டியாய் கொண்டு, வலைதளத்தில் ஸ்லோகம்.ஆர்க் மூலம் சமஸ்கிருத ஸ்லோகங்கள் சொல்லக் கேட்டும், வார்த்தைக்கு வார்த்தைப் பொருள் படித்தும் எழுதிட முனைந்தேன்.

கவியுமில்லை , கவிதை இலக்கணத்தில் பழக்கமுமில்லை. சந்தத்தை மையமாகக் கொண்டு நான்கு வரிகளாக ஒவ்வொரு ஸ்லோகத்தையும் அமைத்துள்ளேன். இது எந்த இலக்கண அமைப்பிலும் வராது எனில் அதிலொன்றும் ஆச்சரியமில்லை.

ஒன்றை மட்டும் முக்கிய கவனத்தில் கொண்டேன் - கீதையில் இருப்பதை அப்படியே சொல்ல முயற்சி செய்தேன். வழக்கத்தில் உள்ள சொற்களையே பெரும்பாலும் உபயோகித்துள்ளேன் அதனால் இதனைப் படிப்பது மிகவும் எளிதாய் இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

மகாகவி பாரதி, சிறுகுழந்தையைக் கைபிடித்து அழைத்துச் செல்வதுபோல் என்னை அழைத்துச் சென்றார். சமயங்களில் ஓடித்தான் பார் என கைகளை விட்டார். வெகுவாக விலகி ஓடவில்லை, மீண்டும் அவர் அருகே வந்து நடந்தேன். அந்த ஞான சீலன் துணை கண்ணன் கொடுத்த பிரசாதம்.

இதை எழுதும்போது அர்ஜுனனின் கேள்விகளின் தெளிவு என்னை வியப்பில் ஆழ்த்தியது. கண்ணனின் உபதேசம் மேலும் மேலும் கிடைக்கப் பெற காரணமான அக்கேள்விகளை கவனமாகப் படித்தால் கண்ணனின் உபதேசம் இன்னும் ஆழமாய் அகத்திலமரும்.

கீதையை நம்பிக்கைக் கொண்டு கேட்பாரும், படிப்பாரும் விடுதலைப் பெற்று புண்ணியவான்கள் அடையும் நல்லுலகங்கள் எய்துவர் என கண்ணன் சாற்றுகிறான். வேறேது வேண்டும் நமக்கே இந்த உறுதியைக் காட்டிலும், ஒரு முறையேனும் படித்திடுவோம்.

நாகராஜன் முரளி
2022

பொருளடக்கம்

கடவுள் வாழ்த்து	i
1. அர்ஜுன விஷாத யோகம்	1
2. ஸாங்கிய யோகம்	9
3. கர்ம யோகம்	20
4. ஞான கர்ம சந்யாச யோகம்	27
5. சந்யாச யோகம்	34
6. தியான யோகம்	39
7. ஞான விஞ்ஞான யோகம்	47
8. அக்ஷர பிரஹ்ம யோகம்	53
9. ராஜ வித்தியா ராஜ குஹ்ய யோகம்	58
10. விபூதி யோகம்	64
11. விசுவ ரூப தரிசன யோகம்	71
12. பக்தி யோகம்	80
13. க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்	84
14. குணத்ரய விபாக யோகம்	90
15. புருஷோத்தம யோகம்	95
16. தெய்வாசுர சம்பத் விபாக யோகம்	99
17. சிரத்தா-த்ரய விபாக யோகம்	103
18. மோக்ஷ சந்நியாச யோகம்	108

கடவுள் வாழ்த்து

விநாயகர் துதி

வினையறுக்கும் விநாயகனே
எனக்கொரு வரம்வேணுமே
வேதமுனிக் கெழுதியதுபோல்
கண்ணனின் கீதையாய்
என்னுள் புகுந்தென்னை
எழுதிட வைப்பாயே.

சரஸ்வதி துதி

வெண் தாமரை அகத்தாள்
வெண் மதி முகத்தாள்
என் மதி ஒளிர
நல் அருள் புரிவாள்.

கண்ணன் துதி

சுவைத்து கனி கொடுத்தாள் சபரி
தவித்து பிடிஅவல் கொடுத்தான் சுதாமன்
உரித்து தோல் கொடுத்தான் விதுரன்
பணிந்து சிரம் கொடுத்தான் மாபலி
அணிந்து பூமாலை கொடுத்தாள் கோதை
எதை நான் கொடுப்பேன் கண்ணா
எனக்கொரு கீதைநீ சொல்ல.

பணிவுரை

குழலூதும் கண்ணன் கொடுத்த கீதையின்
எழிலான பாரதியினுரை தழுவி - கற்றதை
அழகான தமிழில் எழுதிடத் துணிந்தேன்
பிழைகள் பொறுத்திட வேண்டுகிறேன்.

1. அர்ஜுன விஷாத யோகம் (அர்ஜுனன் வேதனை நிலை)

1. திருதிராஷ்டிரன் கேட்கிறான்: அற நிலமான
குருநிலமதில் போரை விரும்பி நிற்கும்
நம்மவரும் பாண்டவரும் செய்வது என்னவென
நானறிய சொல்வாய் சஞ்சயா.

2. சஞ்சயன் சொல்கிறான்: ராஜா துரியோதனன்
சமர்செய்ய அணிவகுத்து நிற்கும் பாண்டவர்
சேனை கண்டு ஆசாரியர் துரோணரிடம்
சென்று வசனங்கள் கூறலானான்.

3. பார்த்தீரா குருவே உம்முன் இருக்கும்
பாண்டவர் படை வியூகம் அதனை
பாங்காக அமைத்த நிபுணன் நும்சீடன்
பாஞ்சாலன் துருபதன் மகனே.

4. சூரரான வில்லாளிகளும் போர் வீரத்தில்
தீரத்தில் வீமனையும் பார்த்தனையு மொத்த
வீரரான யுயுதனன் விராடன் மற்றும்
மகாரதனான துருபதனும் இருக்கிறார்கள்.

5. திருஷ்டகேது சேகதானன் மாவீரன் காசிராஜன்
புருஜித் குந்திபோஜன் சைவியன் என
அருமை மிகுந்த மானிடருள் சிறந்த
வீரர்கள் இங்கு இருக்கிறார்கள்.

6. வலிமையான யுதாமந்யு உத்தமௌஜா மெனும்
வீரன் சுபத்திரை மகன் பாண்டவவது
திரௌபதி மக்கள் இவர்கள் எல்லோருமே
மகாரதர் வீரர்கள் அன்றோ.

7. இனி எனதுபடை நாயகர் பற்றி
இருமுறை பிறப்பாரி லுயர்ந்தோனே உனக்கு
குறிப்பால் நான்கூற அவர்களை நீ
தெறிந்து கொள்ள விழைகிறேன்.

8. மேன்மையுடைய நீவிர் பீஷ்மர் கர்ணன்
வென்றிடவே பிறந்த கிருபன் அசுவத்தமன்
விகர்னன் மற்றும் சோமதத்தன் மகன்
வியூகம் வகுத்து நிற்க,

9. சூரர் பலர் இன்னும் என்
பொருட்டு வாழ்வை துறந் திங்கும்
பெரும் ஆயுத அம்புகளில் நிபுணரும்
போர் புரிய இருக்க,

10. நிகரில்லா நம்படை பலம் பிதாமகர்
பீஷ்மரின் தேர்ந்த காவலில் இருந்தும்
பீமனின் காவலிலுள்ள பாண்டவர் படை
நிகரோ எனத் தோன்றுதே.

11. தத்தம் வியூகப்படி நீங்கள் நின்றாலும்
எந்தன் பிதாமகர் பீஷ்மர் நலமே
சித்தமென கொண்டு அவரை தாங்களும்
அத்தனை வீரரும் காத்திடுவீர்.

12. துரியோதனன் மனம் மகிழ அப்போது
கீர்த்தி மிக்க கௌரவர் படைதலை
பிதாமகரும் சங்கெடுத்து ஓங்கி ஊத
களமதிரும் சிங்கநாதம் ஒலித்ததே.

13. அதோடு சங்குகள் பலவும் பேரிகைகளும்
சேர்ந்து தம்பட்டம் பலவும் கொம்புகளும்
கலந்து திடீரென அங்கே ஒலித்திட
களமெல்லாம் பேரோசை யாயிற்று.

14. தொடர்ந்து வெண்நிற குதிரைகள் பூட்டிய
பெருந்தேரில் அமர்ந்திருந்த மாதவனும் கூட
நின்றிருந்த பார்த்தனும் தத்தம் தேவ
சங்குகள் எடுத்து ஊதினர்.

15. பாஞ்சஜன்ய சங்கை ருஷுகேசன் ஊத
தனஞ்ஜயன் தேவதக்த சங்கை ஒலித்தான்
அஞ்சும்செயலும் அகோரபசி கொண்ட பீமன்
பெருஞ்சங்கு பௌன்டரமதை ஊதினான்.

16. குந்தி மகன் ராஜா யுதிஷ்டிரன்
அநந்த விஜய சங்கை முழங்க
நகுலன் சுகோஷம் சங்கை ஊத
சகாதேவன் மணிபுஷ்பகம் ஊத

17. வித்தகனாம் வில்லில் சிறந்த காசிராஜன்
எத்தனை எதிரிகளௌனிலும் வென்றிடும் சிகன்டி
துருபதன் மகன் திருஷ்டாத்யுமன் விராடன்
வெல்லப்படாத வீரன் ஸத்யகி

18. பாஞ்சால மன்னன் துருபதன் மற்றும்
பாஞ்சால புத்திரி திரௌபதி மக்களும்
பேராயுதம் ஏந்திய சுபத்திரை மகனும்
புவியரசே, தத்தம் சங்குகளூதினர்.

19. அந்த ஒலிகள் ஒன்றாய் பெருமுழக்கமிட
அன்ட வெளியும் புவியு மதிர
அரசன் திருதராஷ்டிரன் புத்திரரும் படையும்
அதிர்ந்து நெஞ்சொடிந்து நடுங்கினரே.

20. அம்புகள் இருபுறத்திலும் பறந்திட துடிக்க
ஆஞ்சனேயன் கொடி கொண்ட தேரிலே
அர்ஜுனன் திருதராஷ்டிர கூட்டம் நோக்க
அதன்பின் ருஷுகேசனிடம் சொல்கிறான்,

21. அர்ஜுனன் சொல்கிறான்: திரண்டு நிற்கும்
இரண்டு படைகளின் நடுவே எனது
இரதத்தைக் தயவு செய்து கொண்டு
நிறுத்திட வேண்டுகிறேன் அச்சுதா,

22. இப்போர் களத்தில் சமரை நாடி
இப்போது அணிவகுத்து நிற்போர் யாவரென
பார்த்து நான் யாருடன் போரிட
உள்ளேனென அறிய விழைகிறேன்.

23. துர்மதி கொண்ட துரியோதனன் பெருமை
தூக்கி நிறுத்திட போரை விரும்பி
திரண்டு நிற்கும் இவர்களை நான்
சற்றே காண வேண்டும்.

24. சஞ்சயன் சொல்கிறான்: பரதன்வழி வந்தவா
தனஞ்சயன் இங்ஙனம் கேட்க ருஷீகேசனும்
தன்னிகரற்ற ரதமதை படைகள் இரண்டின்
நடுவில் கொண்டு நிறுத்தினான்.

25. பிதாமகர் பீஷ்மர் ஆசாரியர் துரோணர்
வேந்தர் பலர் முன்னே தேரதனை
நிறுத்தி பார்த்தாயோ பார்த்தா இங்கு
நிற்கும் கௌரவரை என்றான்.

26. அங்கேதன் தந்தைமார் பாட்டன்மார் குரு
அண்ணன் தம்பி உறவும் மாமன்மாரும்
அன்பு மக்களும் பேரர்களும் தோழர்களும்
பார்த்தன் நிற்பது கண்டான்.

27. அங்ஙனமே மாமன்களும் நண்பரும் உறவும்
அணிகள் இரண்டிலும் நிற்கக் கண்டு
குந்தி மகன் பார்த்தன் இரக்கமுற்று
துயர் மிகுந்திட சொல்கிறான்,

28. அர்ஜுனன் சொல்கிறான்: இங்கு போர்
புரிய துடிக்கும் எண்ணமாய் அனைத்து
சுற்றமும் திரண்டு வந்து நிற்பதைக்
காணும் பொழுது, கிருஷ்ணா,

29. நடுங்குகிறது எனது அவயங்கள் எல்லாம்
உலர்கிறது எனது வாய் உடலெல்லாம்
நடுங்க எனதுடல் மேலுள்ள ரோமங்கள்
அனைத்தும் சிலிர்த்து நிற்கிறது.

30. எனது கைகளிலிருந்து காண்டீவம் நழுவுகிறது
எனது உடல் எரிதழலாய் எரிகிறது
எனது கால்கள் நிற்க மறுக்கிறது
எனது மனமே சுழலுகிறது.

31. கேசவா நான் காணும் பல
சகுனங்கள் விபரீதமாக படுதே போரிலே
சுற்றம் அனைத்தும் மடிப்பதிலே எனக்கு
சுகமோ நன்மையோ தோன்றிலையே.

32. கிருஷ்ணா, வெற்றியை நான் விரும்புகிலேன்
பெரும் ராஜ்யம் இன்பங்கள் விரும்புகிலேன்
கோவிந்தா, ராஜ்யத்தால் இன்பங்களால் ஆவதென்ன?
கொண்ட உயிர்வாழ்வாலும் ஆவதென்ன?

33. யாருக்கு இந்த ராஜ்யமும் போகமும்
யாருக்கு என்ன மகிழ்ச்சி இனிமேலே
யாவரும் உயிரும் செல்வமும் துறந்து
போரிட வந்து நிற்கையிலே.

34. ஆசான் பலரும் தந்தையரும் மக்களும்
பாட்டன் பலரும் மாதுலரும் மாமன்மாரும்
பேரரும் மைத்துனரும் சம்பந்திகளும் இங்கு
போரிட வந்து நிற்க,

35. இவர்களை நான் வதைத்திட விழையேன்
இவர்கள் என்னை வதைத்தாலும், மதுசூதனா
இப்புவி ஆளவோ இதனை செய்வேன்?
மூவுலகு ஆட்சியெனினும் வேண்டேன்.

36. திருதராஷ்டிரன் மக்களை மரணிப்பதால் ஆவதென்ன
திருப்திதான் அடைவோமோ நாம் ஜனார்த்தனா
திருந்தா மூடமதி கொண்டோரை கொல்வதால்
தீராபாவம் சேராதோ நம்மை.

37. கௌரவர் மக்கள் நம்சுற்றங்கள் எனவே
கொல்வது நமக்கு தகாத செயலன்றோ
கொல்வதில் ஏது பெருமை மாதவா
கொல்வதால் இன்பம் அடைவோமோ.

38. இவர்கள் அறிவை பேராசை அழித்து
இவர்கள் உள்ளக் கண்களை மறைத்ததே
குலமும் சுற்றமும் நண்பரும் அழியும்
கொலை பாவம் அறிந்திலர்,

39. நாமோ அறிவோம் குலநாசம் குற்றமென
நாமே பின் இவ்வழிவை தேடலாமோ
நாம் இப்பாவ வழியினை விடுத்து
நல்வழி காண்போமே ஜனார்த்தனா!

40. குல நாசத்தால் குலவழக்கம் ஒழிந்திடுமே
குல நாசத்தால் குலதர்மமும் ஒழிந்திடுமே
என்றும் உள்ள தர்மம் அழிந்தால்
என்றும் நிறையாதோ அதர்மமே!

41. அதர்மம் அகிலம் சூழ, கிருஷ்ணா!
மாதர் நிலை மாண்பும் அழிந்திடுமே
விருஷினி குல தோன்றலே, வர்ணக்கட்டும்
மாறிடுமே மாதர் நிலையழிய.

42. வர்ணம் திரிந்த வழிவந்தவர் அதன்
காரணம் ஆனவர் வாழ்வும் நரகமாகுமே
பிண்டம்-நீர் படைக்கும் வழக்க மொழிய
பிதுர்க்களும் வீழ்ச்சி பெறுவரே.

43. குலநாச மிழைத்த குற்றம் புரிந்தோரால்
குலவம்ச வழிகள் கலந்து திரிந்து
குலமறியா மாந்தர் வழக்கம் மறந்திட
குலதர்ம பழக்கமும் ஒழிந்திடுமே!

44. தொன்று தொட்டு சொல்லக் கேட்டோம்
ஜனார்த்தனா, குலதர்மம் ஒழித்த மாந்தர்
அனர்த்தம் நிறைந்த நரக வாழ்வில்
அன்றாடம் உழன்றிடுவர் என.

45. அந்தோ! என்ன விந்தை இது
அரும்பெரும் ராஜ்ய பரிபால மோகத்தால்
அனைத்து சுற்றத்தை அழிக்கும் பாவம்
ஆற்ற முனைந்து நின்றோமே.

46. ஆயுதமன்றி எதிர்ப்புமின்றி நிற்கும் நான்
ஆயுதமேந்தி காழ்ப்போடு நிற்கும் கௌரவர்
ஆயுள் இழக்க செய்திடினும் நானதை
ஆவலுடன் ஏற்பதே நன்மையே.

47. சஞ்சயன் சொல்கிறான்: இங்ஙனம் பேசி
அர்ஜுனன் வில்லையும் அம்பையும் விடுத்து
ஆழ்ந்த வேதனையில் தேர் பீடமதில்
அமர்ந்து மனம் கலங்கினான்.

அர்ஜுன விஷாத யோகம் (அர்ஜுனன் வேதனை நிலை) எனும் முதல் அத்தியாயம் முற்றிற்று.

இரண்டு விதமான அர்த்தங்கள் ஸ்லோகம் 10க்கு தரப்படுகிறது. ஸம்ஸ்க்ருத வார்த்தை **பர்யாப்தம்** அதன் எதிர் பதம் அபர்யாப்தம் பொருள் வேறுபாடுகளே இதற்குக் காரணம். சிலர் **அபர்யாப்தம்** (துரியோதனன் தன் படைக்கு சொல்வது) என்றால் அளவிட முடியா என்பர். வேறு சிலர் அளவில் குறைந்த என்பர். இதன் எதிர் பொருள்கள் பர்யாப்தம் கொள்ளும். பாரதியார் அபர்யாப்தம் = அளவில் குறைந்த என்ற பொருளில் உரை எழுதியுள்ளார்.

நான் **அபர்யாப்தம் = நிகரில்லா** என்று துரியோதனன் தன்படை பற்றி சொல்வதாக 10வது ஸ்லோகத்தை ஆரம்பித்து பின் பாண்டவர் படை பற்றி சொல்வதை **பர்யாப்தம் = நிகரோ** எனும் பொருள் கொண்டு அவன் மனதில் தன் படை பலம் பற்றி சந்தேகம் இருப்பது போல் எழுதியுள்ளேன்.

2. ஸாங்கிய யோகம் (பகுத்தறியும் நிலை)

1. சஞ்சயன் சொல்கிறான்: இங்ஙனம் கலங்கி
அர்ஜுனன் கண்ணீர்மல்க புலம்பக் கண்டு
மதுசூதனனும் இரக்கம் மிகக் கொண்டு
நல்வார்த்தைகள் சொல்ல லானான்.

2. ஸ்ரீபகவான் சொல்கிறான்: ஏதிந்த இழிமனம்
இத்தருணம் கொண்டாய், அழகல்ல இது
ஆரியனுக்கு, சுவர்க்க மின்றி அவப்பேரும்
அர்ஜுனா, சேர்ந்திடு மன்றோ.

3. கோழையாய் நிற்பது அழகல்ல பார்த்தா
இழிமன நிலை யொழித்து நெஞ்சில்
வீரம் நிறைத்து துணிந்து நிற்பாய்
பகைவரை எரித்துடும் நீ.

4. அர்ஜுனன் சொல்கிறான்: பிதாமகர் பீஷ்மர்
துரோணரும் எதிரியியாய் நின்றாலும் நான்
தாழ்பணிந்திட தக்கவர் மேல், மதுசூதனா
தொடுப்பதோ கொன்றிடும் அம்புகள்.

5. மேன்மை பொருந்தியோர் ஆசான் இவரை
மரணிக்க செய்திடல் நன்றல்ல நன்றிதினும்
இரந்துண்டு வாழ்வதே! கொன்று துய்க்கும்
இன்பமதை குருதிக்கரை வாட்டிடுமே.

6. இவர்களை நாம் வென்றிடுவது சிறப்போ!
அவர்கள் நம்மை வென்றிடுவது மேலோ!
அறிவோமோ நாம்? திருதராஷ்டிரன் மக்கள்
மடிப்பது நம் விருப்பமேயாயினும்!

7. தவித்து குழம்பி நொந்த என்மனம்
தருமவழி எதுவென அறியாது தடுமாறுதே
தஞ்சமென சீடனாய் உனை சரணடைந்தேன்
தக்கவழி காட்டுவாய் நீயே!

8. புவியாளும் அதீத சிறப்பைப் பெற்றாலும்
தேவலோக அதிபதி யானாலும் எனது
புலன் எரித்திடும் இக்கொடிய துயரம்
புதைந் தொழிந்திட வழியேது?

9. சஞ்சயன் சொல்கிறான்: இங்ஙனம் ருஷுகேசனிடம்
பேசிய துர்மதி வென்ற பகையெரிக்கும்
பார்த்தன் இனிநான் போரிடேன் என
கோவிந்தன் முன் மௌனமானான்.

10 ஈரனிகள் நடுவே துவண்டு நின்றானை
ருஷுகேசன் புன்னகை தவழ பார்த்து
பரதவழி வந்த தோன்றலே! எனவழைத்து
நல்லுரை பகல லானான்.

11. ஸ்ரீபகவான் சொல்கிறான்: உன் வேதனை
யாருக்கோ அவர் அதற்குத் தக்கவரல்ல
யாதாதோ உண்மையென பேசுகிறாய் - வேதனையேது
இறந்தாராயினும் இருந்தாராயினும் சான்றோர்க்கே.

12. இல்லாது இருந்தேனோ நான் முன்பே
இல்லாது போவேனோ நான் பின்பே
இருந்தீரே மற்றோரும் நீயும் முன்பும்
இருந்திராது போவீரோ பின்பும்.

13. பிள்ளை இளமைப் பருவம் முதுமையென
மாறிடும் இவ்வுடல் கொண்ட இயக்கம்
மாறாது வேறுடல் கொண்டிடும் பிறப்பிலே
மாறுவதால் மயங்கான் தெளிந்தோன்.

14. புலனுணரும் குளிரும் வெப்பமும் மற்றும்
மனமுணரும் வலியும் சுகமும் குந்திமைந்தா
வந்து போகும் இயற்கை சுழலன்றோ
மாறுமிவையை பொறுத்திடு பார்த்தா!

15. சுகமோ துக்கமோ எதுவாகிலும் அவை
சமமென தடுமாறாது தாங்கும் மாந்தர்
சமமற்று உயர்ந்து நின்று தாம்
சாகாநிலை கொள்ளத் தகுவரே.

16. இல்லாதது என்றும் உண்மை இல்லை
இருப்பது என்றும் பொய்மை இல்லை
இவை யிரண்டும் பகுத்து உணர்ந்தார்
இதன் தன்மை அறிவோர்.

17. எங்கும் பரவி இருக்கும் அழியாத இயல்பு
என்றும் அழிவு இல்லாதது இஃதியல்பை
எவராலும் அழித்திட இயலாது இதை
யாவரும் அறிவது நன்று.

18. அழிந்திடும் தன்மை கொண்ட இவ்வுடலில்
அழிந்திடா இயல்பு உள்ளிருந்து இயக்குமே
அழிவற்ற இவ்வியல்பை அறிந்திடல் அரிதே
ஆதலினால் போரிடு பார்த்தா.

19. கொலை செய்கிறேன் என சொல்வார்
கொலை செய்யப்பட போகிறேன் என்பார்
சொல்வதில் உண்மை ஏது யாவருமே
கொல்வதோ கொல்லப்படுவதோ இல்லை.

20. உள்ளியங்கும் இயல்பு ஒருதரமோ என்றுமோ
பிறந்து இறப்பதில்லை பிறப்பற்ற இறப்பற்ற
பழமையான நித்தியத் தன்மை அழியாதே
பட்டான மேனி பட்டேயழிந்தாலும்.

21. உள்ளியங்கும் இயல்பு அழிவற்று பிறப்பற்று
நிலைத்து நித்தியமாய் திலங்கிடு மென
உணர்ந்தார் யாரை கொல்வார் யார்தான்
இவரை கொல்வார் பார்த்தா!

22. உடுக்கை உருகுலைய அதனை உதறி
உடுக்க புதியன கொள்ளுதல் போல்
உடல் பட்டிட உதறியதை இயக்கும்
இயல்பும் புதியன கொள்ளுமே.

23. இவ்வியல்பை படைக்கலம் கொண்டு உடைத்திட
இயலா நெருப்பும் இதனை எரித்திடா
இதுவோ நீரினால் நனையா காற்றும்
இதனை உலர்ந்திடச் செய்யா,

24. உடைபடாத எரியாத நனையாத மேலும்
உலர்ந்திடா இவ்வியல்பு என்றும் நிலைத்தும்
எங்கும் நிறைந்தும் மாறாது உறுதியாய்
நித்தியமாய் அசையா திருந்திடுமே.

25. கண்டறிய எட்டாது நிறைந் திருப்பது
கருதுவதற்க் கில்லாது காலத்தில் மாறாதது
இவ்வியல்பென சொல்வர் இஃது உணர்ந்து
இதுபற்றிய துயர் விடுவாய்.

26. மீண்டும் பிறந்து மீண்டும் இறந்து
மீளா சுழலில் சுற்றி வருவதிதென
நீ கொண்டாலும் ஆயுத மேந்திய
நீ துயர் கொள்ளத்தகா.

27. பிறந்தோர் என்றும் இறவாது இருப்பதில்லை
இறந்தோர் என்றும் பிறவாது போவதில்லை
தவிர்த்திட இயலா இச்சுழலை எண்ணி
தாங்கா துயர் கொள்வதேன்.

28. பிறப்பின் முன் தளை யற்றதாய்
பிறப்பின் பின் கட்டுண்டு மீண்டும்
இறப்பில் தான் தளை யற்றிடுமே
இஃதினால் துயர்படுவதோ பாரதா.

29. அற்புதம் இதுவென கொண்டா ருண்டு
அற்புதம் இதுவென சொல்வா ருண்டு
அற்புதம் இதுவென கேட்டா ருண்டு
அங்ஙனம் கேட்டாலும் அறிந்தாராரோ.

30. தேகமதை கருவியென இயக்கும் இயல்பு
தேகமது போல் அழிந்திடாதே அனைத்து
தேகங்களிலும் இதேயிருக்க எதை எண்ணி
தேம்புகிறாய் பரதவழி வந்தவா.

31. தர்மம் உனக்கென உண்டதை அறியாயோ
தர்மவழி நடந்திட தயக்கம் கொள்வதோ
தர்ம யுத்தம் வெல்வதே க்ஷத்திரியன்
தர்மம் அதனிலும் உயர்ந்ததேது.

32. தானாக வரும் தர்ம யுத்தம்
தனில் பங்கேற்க பெறும் பேறு
தருமே சுவர்க்க இன்ப மனைத்தும்
தீர க்ஷத்திரயனுக்கு பார்த்தா.

33. தர்மவழி நின்று போரிடாது போனால்
தர்மநெறி தவறிய பேருக்கு இழிவும்
தானாக சேர்ந்திடுமே, வேண்டுமோ இது
தந்திடும் பாவம் உனக்கு.

34. பார் போற்றிய வீரன் எனிலும்
பாரெல்லாம் ஏசிடும் நெறி தவற,
மனம் கூசிடும் இக்கேடோ தருமே
மரணத்தினும் கொடிய நிலை.

35. அச்சத்தால் போரிடான் இவன் என
அதிரதரும் கருதுவரே உன் மேல்
அவர்கள் கொண்ட நன்மதிப்பும் போக
அதனால் நீயும் சிறுமையடைவாயே.

36. வேண்டாதார் பேசும் வீணான பழிகளால்
வேண்டா திழுக்கை பெறுமுன் வீரம்
வீரனுக் குண்டோ இதுபோன்று வேறு
வாட்டிடும் துன்ப மிவ்வுலகிலே.

37. வீரனாய் மடிந்தால் சுவர்க்க முனதே
வீரனாய் வென்றால் புவியரசு உனதே
வீரத்தோள் நிமிர்த்தி குந்தி மகனே
வீரத்தோடு போர் செய்வாயே.

38. சுகமோ துக்கமோ சமமெனும் மனம்
இலாபமோ இழப்போ நிலையான மனம்
வெற்றி தோல்வி எதுவாகிலும், போரிடல்
போருக்கென கொண்டார்க்கு பாவமேது.

39. பகுத்தறியும் வழிமுறை நல்கும் புத்தி
பற்றி கேட்டாய் கர்ம வழிமுறை
பற்றி கேள்இனி இப்புத்தியால் பார்த்தா
கர்மத் தளையையும் தகர்த்திடலாகுமே.

40. இவ்வழியில் செய்யும் முயற்சி சேதமாகா
இவ்வழி பற்றி சிறிதே அறிந்தாலும்
இவ்வழியில் சிறிதே முயன்று நடந்தாலும்
பேரழிவான பயம் நீங்கிடுமே.

41. உறுதி கொண்ட மதியுடையோர் புத்தி
ஒருநிலை கொண்டு திலங்கு மிவ்வுலகிலே
குருகுல தோன்றலே, உறுதியற்றார் மதியோ
பன்னிலை சுழன்று தெளிந்திராதே.

42. அளவில் சிறிதே கற்ற சிலர்
அலங்கார வார்த்தைகள் பேசி வேதம்
அதையே உரைத்த தென சாதிப்பார்
அடுத்தவர் கருத்து பிழையென்பார்.

43. சுகபோக மோகம் கொண்டிவர் சுவர்க்கமே
சாசுவதமென அலங்கார வார்த்தைகள் பேசி
நல்பிறப்பும் காரிய பலனும் தருமென
ஆடம்பர கிரியைபல சொல்வாரே.

44. போகமும் செல்வ செழிப்பும் விரும்பியோர்
அகம், அலங்கார வார்த்தைகள் பேசுவோர்
வாதம் தனில் மயங்கி பரமனின்
பதத்தில் நிலைக்காது போகுமே.

45. மூன்றென குணங்களை வகுத்து வேத
முரைத்துடும் அர்ஜுனா இவைநீ கடந்து
இருமையல்லா உண்மையில் என்றும் நின்று
கர்மபலன் கருதா ஆத்மானுபவனாகுக.

46. நீர் நிரம்பிய பரந்த ஏரிதனில்
நீர் இரைக்க கிணறும் வேண்டுமோ
ஞானம் நிறைந்த பிராமணனுக்கு வேதமும்
கிணறு போல் ஆகுமே.

47. உன்னுரிமை கடமை ஆற்றுதல் மட்டே
உனக்கில்லை உரிமை அதன் பயனிலே
கடமை பயன் கருதி செய்ய முனையாதே
கடமை செய்யாது மிருந்திடாதே.

48. தனஞ்சயா, யோகத்தில் நின்று பற்றின்றி
வெற்றி தோல்வி பற்றிய பொருட்டின்றி
உன் கடமை செய்வாய் - நடுநிலை
மனமே யோக மெனப்படும்.

49. புத்தியில் லயித்து தூர விலக்கிடு
வெறுக்கத் தக்க கர்மம் அதனை
வெறுக்கத் தக்கவர் பயன் நாடுவோர்
புத்தியில் சரணடை தனஞ்சயா.

50. புத்தியில் லயித்தோர் இகவாழ்விலே ஏது
நற்செய்கை தீச்செய்கை என, நீயும்
புத்தியில் லயித்தி ருக்க முனைவாய்
செயலில் திறனே யோகம்.

51. புத்தியில் சார்பெய்தி கர்ம பலன்
பற்றி கருதாது யோகத்தில் திளைப்போர்
பிறவித் தளைகளை விடுத்து என்றும்
பரமானந்த நிலை எய்திடுவரே.

52. அடர்ந்த காடாய் சூழ்ந்த மோகம்
அடங்கி நல்புத்தி துலங்க நீ
கேட்டதாலோ கேட்கப் போவதாலோ நின்
அகத்தில் வேதனை இராதே.

53. கேட்கும் வேத வார்த்தையில் கலக்கமற்று
உனது புத்தி சமநிலையில் அமைதியாய்
அசையாது நிற்க நீயும் திளைத்திடுவாய்
ஆத்ம யோக நிலையிலே.

54. அர்ஜுனன் சொல்கிறான்: புத்தி உறுதியோடு
ஞானத்தி லிருப்போன் பேசுவது எவ்வாறு?
கேசவா! திடபுத்தி உடையோன் என்னதை
சொல்வான் செய்வான் அடைவான்?

55. ஸ்ரீபகவான் சொல்கிறான்: பார்த்தா யார்
தன் மன கிளர்ச்சிகள் துறந்தானாகி
தன்னிலே தான் திளைத்து மகிழ்வானோ
அவன் திடபுத்தி உடையோனாவான்.

56. துன்ப மெனில் அலைகழியா மனமுடையான்
இன்ப மெனில் ஆடிடா மனமுடையான்
பயம் கோபம் கொள்ளாத மனமுடையான்
மதியிலே உறுதியான முனியாவான்.

57. நல்லதோ கெட்டதோ எது வந்தாலும்
உள்ளத்தே பற்றின்றி எங்கும் ஒருவர்
களித்தோ வெறுத்தோ இல்லாது இருப்பின்
அவரறிவே நிலை கொண்டது.

58. சட்டென அவயங்கள் சுருக்கிடும் ஆமைபோல்
பட்டென புலன்கள் ஒடுக்கி எவர்
வெட்டென அவைதரு மின்பம் விட்டனரோ
அவரறிவே நிலை கொண்டது.

59. புலன் ஒடுக்கி இருந்தாலும் அவர்
புலன் தரும் சுவையை மறப்பாரோ
பரமன் பதம் அவர் உணர்ந்திட
பறந்திடுமே அச்சுவை நினைப்பும்.

60. முயற்சியில், குந்தி மகனே, ஒருவர்
பயிற்சியும் பெற்று அறிவில் சிறந்தாலும்
புயலென தாக்கும் புலன்களது வேகம்
கலைத்திடுமே புத்தி நிலையையே.

61. புலனின்ப மனைத்தும் விடுத்து கருத்தாய்
உள்ளத்தே எனையே நிறைத்து எவரொருவர்
புலன்க ளொடுக்கி சரண் அடைந்தாரோ
அவரறிவே நிலை கொண்டது.

62. எதைப் பற்றி எண்ணுகிறானோ அவன்
அதில் பற்றுதல் கொள்கிறான் பின்
அந்த பற்றறுதலால் விருப்பம் உண்டாகிறது
அவ்விருப்பால் சினம் உண்டாகிறது.

63. சினம் சூழ தன்னிலை மாறி
நினைவு இழப்பான், நினைவு போக
புத்தி நிலை நாசமாய் போகுமே!
புத்தி நாசத்தால் அழிந்திடுவானே.

64. தன் விருப்பு வெறுப்பு விடுத்து
தன் புலன் வசம் கொண்டோன்
தன் புலன் வழி காரியமாற்றியே
தன்னில் ஆறுதல் அடைவான்.

65. தன்னில் ஆறுதல் அடைந்திட அவன்
தன் துக்க மனைத்தும் ஒழித்து
தன் சித்தம் அமைதியில் திளைக்க
தன் புத்தியில் நிலைத்திடுவான்.

66. தன் புத்தியில் நிலைத்து நில்லான்
தன் மனம் அலையாய் மோதிட
தன் சித்த அமைதி இழப்பானே
அமைதி இழக்க இன்பமேது.

67. புலன் ஈர்க்கும் வழி ஒருவன்
மனம் போகு மெனில் அவன்
மனம் கடல் காற்று சாய்த்திடும்
தோணிபோல் அறிவை மாய்த்திடுமே.

68. ஆதலால் மகா வில்லேந்தியோனே எவர்
தம் புலன்கள் அனைத்தும் வசமாக்கி
தம் புலன் இன்பங்களை வென்றாரோ
அவரறிவே நிலை கொன்டது.

69. மற்றவர் இருளில் மூழ்கிட இச்சை
அற்றவர் பகலென விழிப்பி லிருப்பர்
மற்றவர் பகலென ஆடும் பொழுது
இரவென கழிப்பான் முனி.

70. ஆறுகள் கலந்தாலும் அசையா ஆழியென
ஆசைகள் புகுந்தாலும் இசையா இயல்வோன்
அமைதி கொள்வான், விருப்பம் கொண்டானோ
அதனை என்றும் அடையான்.

71. இச்சையை இவன் மனது விட்டிட
இன்பத்தை இவன் மனது துறந்திட
தனதென இவன் மனது நாடாதிருக்க
தானென நினையான் அமைதிகொள்வான்.

72. இத்தெய்வ நிலை, பார்த்தா, இதையடைந்தோன்
இகவாழ்வில் மயங்கான் இறதி காலம்
இவனை அடைந்தாலும் இந்நிலை நின்று
பரபிரம்ம நிலையு மெய்துகிறான்.

ஸாங்கிய யோகம் (பகுத்தறியும் நிலை) எனும் இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஆத்மா எனும் சொல் நம் எல்லோரும் கேள்விப்பட்ட சொல் ஆதலால் இவ்வத்தியாயத்தில் ஸ்லோகம் 13 விருந்தே ஆத்மா என்ற வார்த்தையை **தேஹிணா** என்ற ஸம்ஸ்க்ருத
சொல்லின் பொருளெனலாம். எனிலும் **தேஹிணா, தேஹி, ஸரிரீணா, ஏனம், அயம், அஜம்** போன்ற சொற்கள் மூன்றாம் வகை பிரதி பெயர்ச் சொல் (third person adjective). எனவே நான் 45வது ஸ்லோகம் வரை **ஆத்மா** எனும் சொல்லை உபயோகிக்காது அதன் இயல்பை விவரித்தேன். 45வது ஸ்லோகத்தில் **ஆத்மாவான்** என வெளிப்படையாக சொல்வதால் நான் **ஆத்மானுபவன்** என எழுதியுள்ளேன்.

ஸாங்கியம் எனும் சொல்லுக்கு எண்ணிக்கை (count) என்றும் ஆராய்தல் (analytical) எனவும் பொருள் உண்டு. பன்னிலை எனவும் கொள்ளலாம். இருமை (dualism) வழி நடப்போர் ஸாங்கியர் எனப்படுவர். நான் ஆராய்தல் எனும் பொருள்பட பகுத்தறியும் நிலை என எழுதியுள்ளேன்.

3. கர்ம யோகம் (காரிய சித்தி நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: புத்தியே, ஜனார்த்தனா,
செய்கையினை விட மேலென்பது நின்
கொள்கையானால், கேசவா, எனை ஏனிந்த
கொடுஞ்செயல் புரிய தூண்டுகிறாய்?

2. பலவழி காட்டி என்னை குழப்புகிறாய்
நல்வழி எதுவென்ப தறியாது மயங்குகிறேன்
ஒருவழி காட்டி எனக்கது நன்மை
தருமென உறுதிப்படுத்திச் சொல்.

3. ஸ்ரீபகவான் சொல்கிறான்: இவ்வுலகில், பாபமற்றவனே,
இருவழிகள் நான் சொன்னபடி உள்ளதவை
பகுத்தறிவோரது ஞான நிலை, காரியமாற்றி
காரியசித்தி நிலை பெறுவோரென.

4. கர்ம வினை தவிர்க்கக் கடமைதனை
கைவிடுவோர் காரிய சித்தி நிலையடையார்
துறப்பதனால் மட்டும் துறந்தார் என்றும்
பேரின்ப நிலை எய்தாரே.

5. செயலில்லா நொடி ஏது ஒருவனுக்கு
செயலாற்றுதல் இயற்கை வகுத்த குணம்
உயிரின மனைத்தும் இக்குணம் உந்த
செயல் புரிந்தே இருந்திடுமே.

6. ஐம்புலன் அடக்கியதாய் தவத்தி லமர்ந்து
ஐம்புலன் இன்பகளை மனதில் நினைப்போர்
ஐயம் தெளியா மூடாத்மா, இவர்
பொய் ஒழுக்க முடையவராவார்.

7. புலன் இன்பங்களை மனதால் அடக்கி
புலன் கொண்டு, அர்ஜுனா, காரியம்
புரிந்தே அதனில் பற்றுதல் இன்றி
இருப்போன் சிறந்தோன் ஆவான்.

8. உனக் கென்று உள்ள கடமைதனை
உன் கையால் செய், செய்திருப்பது
என்றும் சிறந்ததன்றோ! செய்யாது போக
உடல் பேணுதலும் போகுமே.

9. வேள்வி பொருட்டே செய்யும் காரியம்
அல்லா மற்றவை தளையாய் பிணைத்திடுமே
வேள்வியென பற்றற்று, குந்தி மகனே,
காரியங்கள் செய்யக் கடவாய்.

10. உயிர்களோடு வேள்விகள் படைத்த பிரம்மன்
உரைத்தானே வேள்வி செய்திடு இதனால்
உங்கள் பெருகும் விருப்பங்க ளனைத்தும்
உங்களுக்கு கறந்து தருமென.

11. வேள்வி செய்திட தேவர்கள் மனமகிழ்ந்தே
வேள்வி செய்தார் மனமகிழ அருள்வரே
நல்லிணக்கம் பரஸ்பரம் கொண்டால் பின்
நலம் பெற்று உய்வீரே.

12. வேள்விகள் செய்திட தேவர்கள் மகிழ்ந்தே
வேண்டியன அருள்வரே அவர் அருள்
வேண்டாது பலன் மட்டும் புணர்வோர்
இவ்வுலகில் கள்வரே யாவார்.

14. நல்லோர் ஆக்கியதை படைத்து பின்
உண்பார் இவர் விரும்பியதை அடைவர்
தன்னின்பம் கருதி சமைக்கும் பாவி
தாம் உண்ணுவது பாவமே.

15. தானியம் உணவாக உயிரினம் வளரும்
தானியமோ வான்மழை பொழிய வளரும்
வேள்விப் பயனாய் வான்மழை வரும்
வேள்வியோ செயலில் பிறப்பதே.

16. உரிய செயல் பிரம்மம் வகுத்ததே
மரியா தெங்கும் நிறைந்த பிரம்மம்
காரிய மனைத்தும் தன்னுள் கொண்டே
வேள்வி தனில் நிலைத்திடுமே.

16. வகுத்த வழிமுறை வட்டத்தில் வாழாதான்
வாழ்வு பாவவழி சென்ற வாழ்வே
புலன் இன்பமதை களித்தே விழலாய்
பார்த்தா அவன் வாழ்வானே.

17. யாவர் தன்னில் திளைத்து இருந்து
அவர் தன்னிலை உணர்ந்து அதில்
நிலைத்து ஆனந்தம் கொண்ட பின்
வேறில்லை அவர்க்கு செய்வதற்கே.

18. இவர் செயலின் நோக்கம் கருதார்
இவர் செயலாற்றா நோக்கம் இலார்
இவர் எவ்வித பயன் பொருட்டும்
இவர் எவரையும் சார்ந்திலார்.

19. ஆதலால், செய்வன கடமை என்றே
பற்றில்லா குணம் கொண்டு செய்திடு
பற்றற்று நித்தம் செய்வன செய்வோன்
பரமன் நிலை எய்துகிறான்.

20. கடமை தவறா காரியம் புரிந்தே
ஜனகன் மற்றோரும் சித்தி பெற்றனரே
ஜகத்தோர் நலன் பொருட்டு ஆற்றும்
செயல் தக்கதோர் கர்மமே.

21. எதனை யெதனை உயர்ந்தோர் செய்வாரோ
அதனை அனைத்தும் உலகத்தார் செய்வாரே
எதனை மூலமாய் இவர் கொண்டாரோ
அதனை உலகத்தாரும் தொடருவார்.

22. எனக்கிலை, பார்த்தா, உரிய செயலொன்று
எனக்கோ பெறாத பேறில்லை மூவுலகிலே
எனிலும் எப்போதும் நான் எனது
காரியம் செய்தே இயங்குகிறேன்.

23. நானென் உரிய காரியமென கொள்ளாது
கவனம் இன்றி இயங்காதிருந்தே னெனில்
மானுடர் அனைவரும் எனது வழியே
பார்த்தா, எப்போதும் தொடர்வரே.

24. சீர்குலைந்து அழியுமே உலகம் என்
கர்ம காரியங்கள் நான் செய்யாவிடில்
ஓர் குழப்பநிலை ஆக்கியே நான்
உயிரின மனைத்தும் கொல்வோனாவேன்.

25. கற்றறியார் தாம் ஆற்றும் கடமையில்
பற்றுமிகக் கொள்வார் அதுபோல், பாரதா,
கற்றார் கடமைகளை லோகநலன் கருதியே
பற்றற்று செய்திடல் வேண்டும்.

26. கற்றறியார் தாம் ஆற்றும் கடமையில்
பற்றுமிகக் கொண்டாராயினும் அவர் குழம்பாது
கற்றார் அவரை அனைத்து கடமைகளிலும்
ஈடுபட செய்திடல் வேண்டும்.

27. இயற்கை குணங்கள் கொண்டே அனைத்தும்
இயங்கிட, அகங்கார புத்திக் கொண்டோன்
செய்வன வெல்லாம் தம்மால் ஆவதென
மயங்கி அவன் நினைக்கின்றான்.

28. உண்மை உணர்ந்தோன், பெரும் வில்லாளனே,
குணங்கள் தன்மை குணங்களின் இயக்கம்
வெவ்வேறென அறிந்தே குணங்களின் இயக்கமதில்
பற்றற்று அவன் இருப்பான்.

29. இயற்கை குணங்கள் தனில் மயங்கியே
சிற்றறி வுடையோர் குணங்களின் செயலில்
பற்று கொள்வரே அம்மாந்தர் நிலையை
கற்றோர் உழன்றிட செய்யலாகாது.

30. உன் செயல் அனைத்தும் என்னிடம் துறந்து
உன் அறிவை ஆன்ம சுருதியில் நிறுத்தி
உன் ஆசை இவையெனது என்பவையற்று
மன முடக்கமின்றி போரிடு.

31. நான் உரைத்த நித்தியமான உண்மையை
எவன் சிரத்தை கொண்டு பொறாமையின்றி
தன் செயலில் பின்பற்றுவனோ அவன்
அதன் தளைகளிலிருந்து விடுபடுவான்.

32. எவன் பொறாமையால் நான் உரைத்த
உண்மை விடுத்து அதை பின்பற்றாது
எவ்வித பிரித்தறியும் ஞானமுமில்லா மூடன்
வீனே நாசம் அடைவான்.

33. இயற்கையில் உள்ள குணம் கொண்டே
இயங்குவான் ஞானியும் கூட அதுபோல்
உயிர்களும் தாமியற்கை குணம் கொண்டே
இயங்க, அடக்குதலால் பயனேது?

34. புலன் நுகர்வதில் விருப்போ வெறுப்போ
புலன் தொடர்பால் ஏற்படுமே ஒருவன்
இதன் வசப்படா திருத்தல் வேண்டும்
அவனுக் கிவை வழித்தடைகளாகும்.

35. நன்றன்ற தாயினும் தன்கடமை உயர்ந்ததே
நன்றாயினும் பிறர் கடமை செய்வதைவிட
நன்றே இறந்தாலும் தன்கடமை செய்தே,
பிறர் கடமை செய்வதாபத்தே.

36. அர்ஜுனன் சொல்கிறான்: யாது தூண்டுகிறது
எவனையும் வலிந்து பாவம் இழைக்க
அவன் இச்சை இல்லாது இருந்தாலும்
விருஷினி குலத் தோன்றலே!

37. ஸ்ரீபகவான் சொல்கிறான்: இச்சையும் சினமும்
வேட்கை குணமாம் ரஜோ குணமதில்
தோன்றி பேரழிவும் பெரும்பாவமு மிங்கிழைக்க
தூண்டும் எதிரியென தெரிந்திடு.

38. புகை தீயை சூழ்ந்திருப்பது போல்
ஆடி தூசியால் மாசடைவது போல்
கரு கருப்பையால் மூடியிருப்பது போல்
இஃது இவ்வுலகை சூழ்ந்திருக்கிறது.

39. ஞான நிலையை மூடி நித்தம்
ஞானியின் பகையாய் திகழும் இச்சை
குந்தி மகனே, இது நிரப்பொணாத்
தீயாய் சூழ்ந்து நிற்கிறது.

40. புலன் மனம் புத்தி இதற்கு
புகும் வழிகளாம் இவ்வழி புகுந்து
ஞான நிலை மூடி நின்று
மனிதனை மயங்கச் செய்கிறது.

41. ஆதலால் முதற்கண் நீயுன் புலன்களடக்கி
அவைவழி ஞான விஞ்ஞான அறிவு
அழிந்திடாது, பரத குலத்தில் சிறந்தோனே
அப்பாவத்தை நீ கொன்றிடு.

42. புலன் உயர்ந்தது என்று சொல்வார்
மனம் புலன்களைக் காட்டிலும் உயர்ந்தது
புத்தி மனதைக் காட்டிலும் உயர்ந்தது
ஆத்மா புத்தியினும் உயர்ந்தது.

43. இங்ஙனம் புத்தியினும் உயர்ந்ததை அறிய
மதியால் மனதை உறுதிபடுத்திக் கொன்டு
பெரும் வில்லாளனே, கடும் பகையான
இச்சையை வென்றிடக் கடவாய்.

கர்ம யோகம் (காரிய சித்தி நிலை) எனும் மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

பாரதியார் தன் உரையில் "தொழில்" என்ற சொல்லை உபயோகித்திருக்கிறார். நான் கடமை அல்லது காரியம் என்ற சொற்களை உபயோகித்துள்ளேன்.

யோகம் எனும் சொல்லையும் ஸம்ஸ்க்ருத அர்த்தத்தில் பாரதியார் தன் உரையில் உபயோகித்திருக்கிறார்.

நடுநிலை மனமே யோகம் 2:48, செயலில் திறன் யோகம் 2:50, என்று யோகத்தின் பொருள் சொல்லப்பட்டது.

புத்தியும் செயலும் ஒன்றாய் ஒத்து இருந்து செய்வது யோக நிலை என்று அதையே நான் சித்தி நிலை என எழுதியுள்ளேன். கர்ம யோகம் என்பதை காரிய சித்தி நிலை என ஒரு அர்த்தம் கொடுத்துள்ளேன்.

4. ஞான கர்ம சந்யாச யோகம்

(ஞான கர்ம இணைந்த ஆழ் நிலை)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: அழிவற்ற இத்தத்துவம்
முன்னர் நான் விவஸ்வானுக்கு உரைத்தேன்
பின்னர் விவஸ்வான் மனுவுக்கு உரைத்தான்
மனு இக்ஷ்வாகுக்கு உரைத்தான்.

2. பரம்பரை வழி வந்த இத்தத்துவம்
இராஜரிஷிக ளுணர்ந்த தத்துவ மெனிலும்
காலச் சுழலில் சிதறி இதை
உலகம் இழந்தது, பரந்தபா.

3. அப்பழைய தத்துவத்தை இன்று நான்
உனக்கு உரைத்தேன் நீ என்
பக்தன் தோழன் என்பதால் இந்த
உண்மை உயர்ந்த இரகசியமாகும்.

4. அர்ஜுனன் சொல்கிறான்: உன் பிறப்போ
பிந்தியது விவஸ்வான் பிறப்போ உனதிலும்
முந்தியது ஆதியிலிதை நீ சொன்னவனென
நான் புரிந்து கொள்வதெப்படி?

5. ஸ்ரீபகவான் சொல்கிறான்: எனக்குப் பல
பிறவிகள் கழிந்துள்ளன அர்ஜுனா உனக்கும்
அப்படியே நான் அவை பற்றி அறிவேன்
நீ அறியாய் பரந்தபா.

6. பிறப்போ அழிவோ அற்றோன் எனிலும்
பிறக்கும் உயிர்கட்கும் ஈசனே ஆயினும்
யான் எனதாத்ம இயல்பில் நிலைத்து
காலத்தில் ஒரு பிறப்பெய்துகிறேன்.

7. எப்போது எங்கே முரண்பாட்டால் தர்மம்
அழிந்தே அதர்மம் ஓங்கி நிற்குமோ
அப்போது, பாரதா, நான் எனக்கு
ஒரு பிறப்பு கொள்வேன்.

8. நல்லன செய்யும் நல்லோரை காக்கவும்
தீயன செய்யும் தீயோரை அழிக்கவும்
தர்மத்தை மீண்டும் நிலைநாட்டவும் நான்
ஒவ்வொரு யுகத்திலும் தோன்றுகிறேன்.

9. தெய்வீகம் எனது பிறப்பும் செயலுமென
தெரிந்து உணர்வோன் தேகம் துறந்ததும்
தொடர்ந்து பின்னர் பிறந்திலன் அவன்
என்னை எய்துகிறான் அர்ஜுனா.

10. பிணைப்பு அச்சம் சினம் துறந்தென்னில்
இணைந்து என்னை அடைக்கலம் புகுந்து
தவத்தில் பெற்ற ஞானம் தூய்மையாக்க
என்னியல்பு எய்தினோர் பலர்.

11. யாவர் என்னை எப்படி அணுகினரோ
அவர்க்கு நான் அப்படியே அருள்வேன்
என் வழியையே எங்கும் மாந்தர்
பின்பற்றி நடப்பர் பார்த்தா.

12. பலன் நாடி செயல் புரிவோர்
தேவரருள் நாடி பூஜைகள் செய்வர்
இவர்கள் நாடி வேண்டுவது இவ்வுலகில்
இவர்க்கு நொடியில் விளைவதன்றோ!

13. குணம் செய்கை வகைக் கொண்டு
வர்ணம் நான்கு செய்தேன் நான்
எனிலும் யானோ செய்கை அற்றவனும்
அழிவற்றவ னென்றும் உணர்.

14. எச்செயலும் எனது நிலை மாற்றாது
அச்செயல் பலனோ நான் விரும்பாதது
எனை இங்ஙனம் அறிந்தோன் என்றும்
செயல் வினையால் தளைப்படான்.

15. நன்கிதை யுணர்ந்தே முற்கால முனிகளும்
தம்கர்மம் செய்தே முக்தி பெற்றனரே
முன்னோர் முன்பு செய்தபடி நீயுன்
கர்மம் செய்யக் கடவாய்.

16. செயல் செயலல்லாதது யாதென ஞானியரும்
மயக்க மெய்துவரே எனவே நானுனக்கு
செயலின் இயல்பை உணர்த்துகிறேன் இதை
நீயறிவதால் தீங்கினின்று விடுபடுவாய்.

17. செயத்தகும் செயல் இயல்பறிதல் வேண்டும்
செயத்தகா செயல் இயல்புமறிதல் வேண்டும்
செயல் செய்யாமை இயல்பறிதல் வேண்டும்
செயலியல்பை கணித்தல் கடினமே.

18. எவன் செய்கையில் செயலின்மை உணர்ந்து
தன் செயலின்மையில் செய்கை காண்கின்
அவன் மனிதரில் அறிவுடையோன் எச்செயல்
இவன் செய்தாலும் தன்னிலிருப்பான்.

19. எவனது செய்கை விருப்பமோ நோக்கமோ
விடுத்து இருக்குமோ அவனது செயல்
ஞானத் தீயால் புடமிட்டது அவனை
ஞானிகள் அறிவுடையோன் என்பர்.

20. கர்ம பயனிலே பற்றற்று எப்போதும்
நிறைவோடு எதிலும் சார்பற்று நிற்போன்
செய்கை அவன் செய்தே இருந்தாலும்
செயல் அற்றவனாய் இருப்பான்.

21. ஆசையற்று மனதை ஆத்ம அறிவில்
நிறுத்தி தனது என்பதை துறந்து
சரீரக் காரியங்கள் மட்டும் செய்தே
இருப்பவன் பாவம் அடைவதில்லை.

22. நல்லன தான்வர நன்றென்று கொள்வோன்
இருமைகள் கடந்து பொறாமை ஒழித்தோன்
வெற்றியோ தோல்வியோ சமமென கர்மம்
செய்வோன் கர்மத்தில் தளைப்படான்.

23. பற்றுகள் துறந்து தளைகள் களைந்து
ஞானத்தில் மதி நிலைக்கச் செய்து
வேள்வியாய் கர்மம் புரிவோன் கர்மமெல்லாம்
தானே முடிந்து போய்விடும்.

24. பிரம்மத்தின் அர்ப்பணமாக பிரம்ம நெய்யை
பிரம்மத்தீயில் பிரம்மத்தால் ஓமம் செய்ய
பிரம்மத்தில் நிலைத்து நின்று அவன்
பிரம்ம நிலை எய்துகிறான்.

25. யோகிகள் சிலர் தேவர்கட்க்கு என்றே
வேள்விகள் வளர்த்து வழிபாடு செய்வர்
வேறு சிலர் பிரம்மமத் தீயில்
வேள்வியை ஆகுதி செய்வர்.

26. புலனடக்கும் வேள்வித் தீயில் சிலர்
செவி போன்ற புலன்கள் ஆகுதியாக்க
வேறு சிலர் புலனுணர்வெரிக்கும் தீயில்
ஒலி போன்றவை சொரிவர்.

27. புலன் வேட்கைகள் உயிர் மூச்சின்
செயல் அனைத்தும் மனதால் அடக்கி
ஞானம் தூண்டிய வேள்வித் தீயில்
ஓமம் செயவோர் சிலர்.

28. செல்வத்தால் சிலர் தூயவாழ்வால் சிலர்
தவத்தால் சிலர் யோகத்தால் சிலர்
கல்வியால் சிலர் ஞானத்தால் சிலர்
விரதமென வேள்விகள் செய்வர்.

29. உள் மூச்சில் வெளி மூச்சை நிறுத்தியும்
வெளி மூச்சில் உள் மூச்சை அடக்கியும்
உள்-வெளி மூச்சின் நடை சீரில்
வேள்வி செய்வோர் சிலர்.

30. உணவை விரதமாய் ஒழுங்கு படுத்தி
உயிரை உயிரில் ஆகுதியாக்குவர் சிலர்
இவ்வனைவரும் வேள்வி நெறி அறிந்தே
வேள்வியால் பாவமற்று போயினர்.

31. வேள்விகள் செய்ததில் பெற்ற அம்ருதம்
சுவைத்தோர் நித்தியமான பிரம்மத்தில் நிலைப்பர்
வேள்விகள் செய்யார்க்கோ இவ்வுலகே இல்லை
பரலோகமேது குருகுலத்தில் சிறந்தோனே.

32. பிரம்மன் வாயில் வழிக்கே வகையாய்
வேள்விகள் பல விரித்துக் காட்டும்
வேதங்கள் இவை கர்மத்தில் பிறப்பன
என்றுணர விடுதலை உனதே.

33. தன்னுடைமை துறந்த வேள்வியை விட
ஞானத்தால் செய்யும் வேள்வியே மேல்
கர்மம் எல்லாம் இறுதியில் பார்ததா
ஞானத்தில் ஒன்று சேரும்.

34. இவ்வுண்மையினை ஞான குருவை நாடி
வணங்கி கேள்வியாலும் தொண்டாலும் அறி
உண்மை உணர்ந்த ஞான குருவும்
அவ்வுண்மை உனக்கு உபதேசிப்பர்.

35. உண்மை ஞானம் பெற்றதால் பாண்டவா
உன்னுடைய மயக்கம் தெளிந்து எல்லா
உயிரினமும் நின்னுள்ளே காண்பாய் பின்
என்னுள்ளே உறைவதை காண்பாய்.

36. பாவம் புரிந்தோரில் அதிக பாவம்
புரிந்தோன் நீ யெனிலும் அப்பாவக்
கடலை நின் ஞானத் தோணியால்
கடந்து சென்று மீள்வாய்.

37. கொழுந்து விட்டெரியும் தீ விறகை
கொளுத்தி சாம்பலாக்குதல் போல் அர்ஜுனா
ஞானத் தீ கர்ம வினைகள்
அனைத்து மெரித்து சாம்பலாக்கிடும்.

38. வேறேது புனிதமானது ஞானத்தை போல்
இவ்வுலகிலே காரிய சித்தி பெற்றோர்
தானாகத் தக்க காலத்தில் இதை
தன்னுள் பெற்றிட காண்பர்.

39. உண்மையில் திடம் கொண்டு புலன்
வன்மைகள் வென்று கருத்தாய் இருப்போன்
ஞானம் எய்துகிறான் பின் அவன்
ஞானத்தால் பரசாந்தியும் பெறுகிறான்.

40. அறிவற்று உண்மை நம்பாது ஐயம்
அகலா மாந்தர் கருத்தொழிந்து அழிவர்
ஐயம் கொண்ட மாந்தர்க்கு இன்பம்
இவ்வுலகிலோ மேலுலகிலோ இல்லை.

41. கருத்தாய் கர்மம் புரிந்து அவன்
கர்ம பலன் துறந்து ஞானத்தால்
ஐயம் அறுத்து தன்னுள் திளைப்போன்
கர்மத்தால் தளைப்படான் தனஞ்சயா!

42. ஞான வாள் கொண்டு உன்
அஞ்ஞானம் தந்த ஐயத்தை அறுத்து
புத்தியை உன் ஆத்மாவில் நிறுத்தி
எழுந்து போரிடு பாரதா!

ஞான கர்ம சந்யாச யோகம் (ஞான கர்ம இணைந்த ஆழ் நிலை) எனும் நான்காம் அத்தியாயம் முற்றிற்று

கர்ம பலன் துறந்து கர்மம் தவாறாது செய்வது யோகம் ஆகும். இதை அனுஷ்டிப்பவன் கர்ம யோகியாவான். பகுத்தறியும் ஸாங்கிய வழி சென்ற ஒருவனும் ஞான நிலை எய்தி யோகத்தில் இருப்பான். இவனது புத்தியும் வாக்கும் ஆத்மாவில் நிலைத்து ஞான யோகியாவான். ஞான யோகியின் அடையாளம் 2:71ல் சொல்லப்பட்டது.

"இச்சையை இவன் மனது விட்டிட
இன்பத்தை இவன் மனது துறந்திட
தனதென இவன் மனது நாடாதிருக்க
தானென நினையான் அமைதிகொள்வான்."

எனவே கர்ம யோகி, ஞான யோகி இவர் நிலைகள் வேறல்ல.

5. சந்யாச யோகம் (துறவு நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: செயல் துறப்பதை
கிருஷ்ணா, போற்றுகிறாய் செயல் புரிவதும்
சிறப்பென்கிறாய் இவ்விரண்டில் எனக்கெது
சிறந்ததென நிச்சயப்படுத்தி சொல்.

2. ஸ்ரீபகவான் சொல்கிறான்: செயல் துறவு
கர்ம யோகம் இவ்விரண்டும் பேரின்பம்
தரும் இவற்றிலோ கர்மத் துறவினும்
கர்ம யோகமே மேல்.

3. நித்திய சந்யாசி எனப்படுவோன் வெறுப்பு
விருப்பு அற்றோன், பெரும் வில்லாளனே
இருமை நீங்கி இவன் எளிதில்
பிணைப்பு அறுத்து விடுபடுவான்.

4. ஸாங்கியம் யோகம் வெவ்வேறு என்போர்
சிறார் அங்ஙனம் கூறார் பண்டிதர்
இவற்றுள் ஒன்றிலே நன்கு நிலைத்தோன்
இரண்டின் பயனும் எய்துவான்.

5. ஸாங்கியர் அடையும் நிலையே அடைவரே
யோகியரும் ஸாங்கியம் யோகம் இரண்டும்
ஒன்றென காண்போன் எவனோ அவனே
உண்மையில் காட்சி உடையோன்.

6. சந்யாச வழியோ, பெரும் வில்லாளனே
சங்கடம் ஆகும் யோகம் இல்லார்க்கு
யோகத்தில் திளைத்த முனி கடுகி
பிரம்ம நிலை எய்துகிறான்.

7. யோகத்தில் நின்று தூய்மை பெற்று
தன்னைத்தான் வென்று புலன் அடக்கி
அனைத்து உயிர்களிடம் தயையாய் இருப்போன்
செய்யும் செயலால் தளைப்படான்.

8. உண்மை உணர்ந்த யோகி நினைப்பான்
காண்பதும் கேட்பதும் தொடுவதும் மோப்பதும்
உண்பதும் போவதும் கனவும் சுவாசமும்
எதையும் தான் செய்வதில்லையென.

9. பேசுவதும் விடுவதும் பிடிப்பதும் இமைகள்
திறப்பதும் மூடுவதும் புலன்கள் தம்
புலன் உணரும் செயல்கள் செய்வது
புலன் இயல்பென கருதிடுவான்.

10. காரியம் அனைத்தும் பிரம்ம அர்ப்பணமாய்
பற்று நீக்கி கர்மம் செய்வோன்
நீரில் நனையாத் தாமரையிலை போல
பாவம் தீண்டப் பெறான்.

11. உடலாலும் மனதாலும் மதியாலும் தூயராய்
புலன்கள் கொண்டும் பற்றுகள் நீக்கிய
யோகிகள் தம் ஆத்ம சுத்தியின்
பொருட்டே கர்மம் செய்வார்.

12. யோகத்தில் திளைத்தோன் கர்ம பலன்
துறந்து பூரண சாந்தி அடைகிறான்
யோகத்தில் இணங்காதோன் கர்ம பலன்
வசம் கொண்டு தளைப்படுகிறான்.

13. தன் மனதால் கர்மமனைத்தும் துறந்து
ஆன்மாவில் நிலைத்தவன் செய்வது இன்றி
செய்விப்பது இன்றி ஒன்பது வாயில்
கொண்ட கோட்டையில் இன்புறுகிறான்.

14. மனிதர் செயலின் அதிகாரம் செயல்கள்
ஆன்ம தொடர்பற்றது அதுபோல் செய்கை
பயன் விருப்பமும் ஆகும் இவையனைத்தும்
இயல் பெறுவது இயற்கையே.

15. பாவியாக அல்லது பக்தனாக எவரையும்
பிரம்மன் பார்ப்பதில்லை அஞ்ஞானம் சூழ
அறிவு இழந்த நிலையில் உயிர்கள்
குழம்பி தம்மை பிணைத்திடும்.

16. ஆத்ம ஞானம் அஞ்ஞானம் அழிக்க
ஆத்மவான் ஞானம் உதிக்கும் ஆதவன்
ஒளிக் கதிர்போல் பரமன் நிலையை
ஒளியுற வெளிப்படுத்திக் காட்டும்.

17. பரமனில் புத்தி நிற்க மனம்
பரமனில் திளைக்க சித்தம் தஞ்சம்
பரமனில் கொண்டு தம் சஞ்சலம்
களைந்தார் மீளாப்பதம் சேர்வரே.

18. பண்டிதர்கள், கல்வி விநயம் கற்ற
பிராமணனோ பசுவோ யானையோ
நாயோ நாயைத் தின்னும் புலையனோ
அனைத்திலும் சமப் பார்வையுடையோர்.

19. இப்பிறப்பிலே மனம் சம நிலையில்
நிற்க பிறப்பு இறப்பு வென்றார்
குறையற்ற சம நிலையுற்ற பிரம்மம்
போல் பிரம்மத்தில் நிலைப்பர்.

20. சுகத்தில் களித்திடா துன்பத்தில் துவளா
சித்தம் அறிவில் உறுதியாய் நிற்கும்
பிரம்ம ஞானி மயக்கம் நீங்கி
பிரம்ம சாந்தியில் நிலைப்பான்.

21. புறத் தீண்டல்கள் தரும் இன்பங்கள்
புறக்கணித்து தன்னுள் இன்பம் காண்போன்
பிரம்ம யோகத்தில் புத்தியை நிறுத்தி
அழியா இன்பம் எய்துகிறான்.

22. புறத் தீண்டல்களில் தோன்றும் இன்பம்
பெரும் துன்பங்கள் விளைப்பன தொடக்கம்
இறுதி கொண்ட இதில் அறிவுடையோன்
களியுறான் குந்தி மகனே.

23. இப்பிறப்பில் எவன் விருப்பால் சினத்தால்
பிறக்கும் உந்தல்களை பொறுக்க வல்லானோ
அவன் யோகத்தில் நிலைத்தவன் ஆவான்
அவனே இன்பமுடைய மானுடன்.

24. எவர் தன்னுள்ளே இன்பம் துய்த்தும்
தன்னில் மகிழ்ச்சி நிரம்ப உள்ளே
தெளிவு பெற்றவரான யோகி தானே
பிரம்மமாய் பிரம்ம நிர்வாணமடைவர்.

25. கிட்டப் பெறுவர் பிரம்ம நிர்வாணம்
கட்டுள் தம்மை வைத்து இருமைகள்
விட்டு பாவங்களொழித்து உயிரினம் மகிழும்
பொருட்டு இயங்கும் முனிகள்.

26. இச்சை சினம் இவைகள் விடுத்து
சித்தத்தை தம் கட்டுக்குள் வைத்து
ஆத்ம ஞானம் கொண்ட முனிகளுக்கு
பிரம்ம நிர்வாணம் அருகினுள்ளது.

27. புறத் தீண்டல்கள் தவிர்த்து விழிகள்
இரண்டும் புருவமிடை நிறுத்தி மூடி
பிராண வாயு அபான வாயு
சமமாக மூக்குவழி ஓட;

28. புலன்களை மனதை புத்தியை கட்டிய
ஞான முனி நிர்வாணமே இலக்காய்
சினம் பயம் இச்சைகள் விடுத்து
முக்தி பெற்றவனாய் ஆவான்.

29. வேள்வியும் தவமும் எனை வழிபடுவதாயும்
உலகட் கெல்லாம் மகேஸ்வர னெனவும்
உயிர்கட் கெல்லாம் அருள்பவன் நானென
உணர்ந்தோன் அமைதி அறிவான்.

சந்யாச யோகம் (துறவு நிலை) எனும் ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

இங்கே துறவறத்தில் கர்மத்தை துறப்பதைக் காட்டிலும் கர்ம யோகம் (பலன் துறப்பது) சிறந்த வழி (5:2) என பகவான் சொல்கிறார். மற்ற ஸ்லோகங்கள் இச்சை, சினம், பயம் இவை தவிர்த்து இவைகளின் உந்தல்களை கட்டுக்குள் வைப்பது யோக நிலை அடைய சுலபமாக்கும் என்பதை சொல்கின்றன. புறத் தீண்டல்களால் ஏற்படும் விளைவகளைத் தவிர்க்க புலனகள், மனம், புத்தி இவைகளைக் கட்டி தியானத்தில் இருப்போன் அமைதி அறிவான். இதையே ஸ்லோகங்கள் 27-29 வலியுருத்தி தியான யோகத்தைப் பற்றி அறிய தயார் செய்கிறது.

6. தியான யோகம்

(மனதை ஒருநிலை ஆக்குதல்)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: செய்கை பலனில்
நாட்டமின்றி தன்கர்மம் செய்வோன் துறவி
அவனே யோகி ஓமம் கிரியை
அவன் செய்யாதவன் ஆகான்.

2. எதனை சந்நியாசம் என்கிறாரோ, பாண்டவா
அதுவே யோகம் என்றறிக எவன்
தன் நோக்கத்தில் விருப்பம் துறவானோ
அவன் யோகி ஆவதில்லை.

3. யோக நிலை அடைய எத்தனிக்கும்
முனிக்கு கர்மம் செய்வதே வழியென
சொல்லப்படும் அந்நிலை அடைந்த முனிக்கு
செயலில்லா அமைதி வழியாம்.

4. எப்போது தன் புலன்களிலும் செய்கையிலும்
பற்றற்று நோக்கங்கள் எல்லாம் துறந்திட
அப்போது அவன் யோக நிலை
அடைந்தவன் என்று சொல்லப்படும்.

5. தன்னிலை உயர்த்திடு தன்மனம் வென்று
தன்னிலை தாழ்த்திட வேண்டாம் தனக்குத்
தன்னிலை ஒன்றே நண்பன் தனக்குத்
தன்னிலை ஒன்றே பகைவன்.

6. தன்மனம் வென்று தன்னிலை உணர்ந்தான்
தன்னிலை தனக்கு நண்பனாகக் காண்பான்
தன்மனம் வெல்லா தன்னிலை உணராதான்
தன்னிலை பெரும்பகையாய் காண்பான்.

7. தன்மனம் வென்று சாந்தி கொண்டோன்
குளிரோ வெப்பமோ சுகமோ துக்கமோ
எளிமையோ பெருமையோ சம நிலைப்பட்ட
பரமாத்ம நிலை கொள்வான்.

8. ஞான விஞ்ஞான அறிவில் நிறைவாய்
ஆன்ம உணர்விலிருந்து புலன்கள் வென்று
மண் கல் பொன் ஒன்றெனக் காண்பான்
யோக நிலையுற்ற யோகியாம்.

9. அன்பர் தோழர் பகைவர் புறக்கணிப்போர்
நடுநிலை வகிப்பவர் பொறாமை உடையோர்
சுற்றத்தார் நல்லோர் தீயோர் எல்லாரிடத்தும்
சம புத்தியுடையோன் மேலோன்.

10. யோகி தன் யோகத்தில் எப்போதும்
திளைத்து தான் தனிமையில் இருந்து
மனதைக் கட்டி ஆசைகள் அகற்றி
சொந்தம் நீக்கி இருப்பானாக.

11. நல்லிடம் ஒன்றில் தருப்பைப் புல்
பரப்பி மான் தோல் விரித்து
உயரமோ தாழ்ந்தோ இல்லா நிலையான
இருக்கை ஒன்று அமைத்து,

12. மனம் ஒருநிலை ஆக்கி உள்ளம்
புலன் செய்கை கட்டுப் படுத்தி
ஆங்கமர்ந்து ஆத்ம தூய்மைப் பொருட்டு
யோகத்தில் பொருந்தக் கடவான்.

13. நிமிர்ந்த உடல் கழுத்து தலையோடு
அமர்ந்து அசையாது சலன மற்றவனாய்
நுனிநாசியில் தன் பார்வை நிறுத்தி
சுற்றுப் புறம் பார்க்காதவனாய்,

14. அமைதியான மனதோடு அச்சம் ஒழித்து
பிரம்மச்சர்ய விரதம் பூண்டு மனம்
வசப்படுத்தி என்னில் நிறுத்தி என்னையே
அடையும் யோகத்திலிருக்கக் கடவான்.

15. எப்போதும் இங்ஙனம் மனம் வசப்படுத்தி
ஆத்ம நிலையில் துய்க்கும் யோகி
என்பால் நிலைபெற்ற பரசாந்தி நிலை
தன்பால் உணர்ந்திடப் பெறுவான்.

16. அதிகம் உண்போன் பரஞானம் அடையான்
அரிதாய் உண்பவனுக்கோ ஏகாந்தம் ஏது
அதிகம் உறங்குவோன் இரவெல்லாம் விழிப்போன்
அரிதிவர்க்கு இவ்யோகம் அர்ஜுனா.

17. உணவு கேளிக்கை இவைகள் அளவாக
உரிய காரியம் செய்வது ஒழுங்காக
உறக்கம் விழிப்பு சீராக அவனது
யோகம் துயரை அழிக்கிறது.

18. ஒருவன் எப்போது உள்ளம் செயல்
ஒன்றாகி ஒழுங்குப்பட்டு வெளித் தோன்றும்
இன்பங்களில் விருப்பற்று இருப்பானோ அப்போது
யோக முற்றா னெனப்படுவான்.

19. காற்றில்லா இடத்தில் ஏற்றிய தீபம்
அசைவின்றி இருப்பது போல் யோகி
ஆத்ம யோகத்தில் சித்தம் நிறுத்தி
இருப்பான் என்பார் முன்னோர்.

20. எங்கு உள்ளம் செயல் இவைகள்
யோக ஒழுக்கத்தால் அமைதி அடையுமோ
எங்கு புத்தி ஆத்ம அறிவில்
துலங்கி மகிழ்ச்சி எய்துமோ;

21. எப்போது புத்தியால் உணரக் கூடும்
புலன்கள் கடந்த ஆனந்தம் காண்பானோ
எங்கு புத்தியை நிலைப்பதால் இவன்
உண்மை மாறாது இருப்பானோ;

22. எதனைப் பெற்றபின் அதனிலும் பெரும்
இலாபம் வேறேதும் இருப்பதாய் கருதானோ
எங்கு நிலைப்பதால் வரும் பெரும்
துக்கத்தாலும் சலிப்பெய்த மாட்டானோ;

23. அதுவே இயற்கையால் தோன்றும் துக்கம்
விடுத்த யோக நிலையென்று உணர்,
உள்ளம் சலனமற்று ஒருவன் இவ்யோகத்தில்
உறுதியாய் நிற்கக் கடவான்.

24. நோக்கத்தால் எழும் விருப்பம் அனைத்தும்
துறந்து எல்லா பக்கமும் தோன்றும்
புலன் உந்தல் உணர்வு எல்லாம்
மனத்தால் கட்டுக்குள் வைத்து;

25. படிப்படியாய் மனதில் அமைதி நிரம்ப
புத்தி உறுதியாய் ஆத்ம சாந்தியில்
நிற்க அவன் எதற்கும் கவலை
அற்று இருக்கக் கடவான்.

26. எங்கெங்கே மனம் சஞ்சலம் கொண்டு
உறுதி இழந்து உழன்று ஓடுமோ
அங்கங்கே இருந்து அதனை மீட்டு
ஆத்ம வசமாக்கிக் கொள்க.

27. மனம் சாந்தியில் திளைக்க வேட்கை
குணம் அடக்கிய யோகி பிரம்மமேயாகி
சிறந்த இன்பம் பெற்று தன்
பாவங்கள் நீங்கப் பெறுகிறான்.

28. மனதை எப்போதும் இங்ஙனம் ஆத்ம
நிலையில் கலந்த யோகி குற்றங்கள்
போக்கி பிரம்மத்தில் நிறைந்து உயர்ந்த
இன்பம் எளிதில் துய்க்கிறான்.

29. யோகத்தில் கலந்தவன் ஒத்திசைந்த மனதால்
தன்னிலுறையும் ஆத்மா ஏனை உயிரிடத்தும்
ஏனை உயிரிலுறையும் ஆத்மா தன்னிலும்
பிரம்மமாய் இருக்கக் காண்கிறான்.

30. எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ
எல்லா பொருளையும் என்னிடத்தே காண்கிறானோ
அவன் என்றும் என்னைப் பிரிவதில்லை
நான் அவனைப் பிரிவதில்லை.

31. எல்லா உயிர்களிடத்தும் எவன் என்னைக்
கண்டுத் தொழுதும் ஒருமையில் நிலைத்தும்
எங்கு அவன் இருந்தாலும் அவ்யோகி
என்னுள்ளே என்றும் இயலுகிறான்.

32. ஆத்ம நிலையில் கொள்வது ஒத்த
அர்ஜுனா, சம நோக்கு எவன்
இன்பம் துன்பம் எதிலும் உடையனோ
அவன் பரமயோகியாகக் கருதப்படுவான்.

33. அர்ஜுனன் சொல்கிறான்: நீ சொல்லும்
யோக மார்க்கம் பொதுவாக, மதுசூதனா,
நிரந்தரமாய் தொடரக் கூடியதாய் தோன்றவில்லை
எனது சஞ்சலத் தன்மையால்.

34. சலனமுடையது மனம், கிருஷ்ணா, கிளர்ச்சி
பிடிவாதம் உரன் கொண்ட இதைக்
கட்டுதல் காற்றைக் கட்டுதல்போல் மிகக்
கடினமென நான் நினைக்கிறேன்.

35. ஸ்ரீபகவான் சொல்கிறான்: பெரும் வில்லாளனே
மனம் கட்டடங்காது சலனமுடையது ஐயமில்லை
பழக்கம் விருப்பின்மை கொண்டு அதனைக்
கட்டிடலாம் குந்தி மகனே.

36. தன்மனம் கட்டாதான் யோகம் அடைதல்
அரிதென நான் கருதுகிறேன் ஆனால்
தன்மனம் கட்டி தக்கவழியில் முயன்றவன்
அதனை எய்த வல்லான்.

37. அர்ஜுனன் சொல்கிறான்: தன்மனம் சிதறிட,
யோகவழி அதனை நம்பியவன் எனிலும்
அவ்வழி வழுவி யோகத்தில் தவறியவன்
எந்நிலை அடைவான் கிருஷ்ணா?

38. இரண்டிலும் வழுவிட ஒருவேளை அவன்
உடைந்து கலையும் மேகமென அழிவானோ
பெருந்தோளாய், எந்நிலையு மில்லாது யோகம்
குழம்பிட அவன் யாதாகிறான்?

39. இதுவே எனது ஐயம், கிருஷ்ணா,
இதனை அறுத்திட உனை வேண்டுகிறேன்
இந்த ஐயம் அறுப்போர் உனை அல்லாது
இங்கு எவர் உளார்.

40. ஸ்ரீபகவான் சொல்கிறான்: பார்த்தா அவன்
பூவுலகிலோ மேலுலகிலோ அழிவு எய்தான்
நல்லது செய்து இருப்பவன் எவனும்
துர்கதி அடையான் தோழனே!

41. புண்ணியம் செய்வோர் உலகங்கள் எய்தி
பல்லாண்டு வாழ்ந்து யோகத்தில் தவறியவன்
பக்தி நிறைந்த செல்வந்தர் இல்லத்தில்
பிறப்பு ஒன்று பெறுவான்.

42. அல்லது, புத்தியில் சிறந்த யோகிகள்
குலத்தில் பிறக்கிறான் பூவுலகில் இது
போன்ற பிறவி ஒருவன் எய்துதல்
அரிதிலும் மிக அரிது.

43. அங்கே அவன் தன் பூர்வ
சரீர வாழ்வில் அடைந்த புத்தியை
பெற்று மீண்டும் தன் முழுமைக்கு
முயற்சி செய்கிறான் குருநந்தனா.

44. பண்டைப் பழக்கத்தால் அவன் தானாக
கவர்ந்து இழுக்கப் பெறுகிறான் யோகம்
குறித்து அறிய முற்படும் ஒருவன்
பிரம்மநாதம் கடந்து செல்கிறான்.

45. உறுதி கொண்டு முயல்வோன் தன்
பாவம் களையப் பெற்று அநேகப்
பிறவிகள் முயன்று பெற்ற முழுமையால்
பரகதி அடையப் பெறுகிறான்.

46. துறவியைக் காட்டிலும் யோகி சிறந்தோன்
பண்டிதரிலும் அவன் சிறந்தோன் என்பது
கருத்து கர்மியிலும் அவன் சிறந்தோன்
ஆதலால், அர்ஜுனா, யோகியாகுக.

47. யோகிகளில் எவன் தன்னுள் உறையும்
ஆத்மனில் எனைப் பொருத்தி என்னையே
நம்பி போற்றுகிறானோ அவனை மேலான
யோகியாய் நான் கொள்கிறேன்.

தியான யோகம் (மனதை ஒருநிலை ஆக்குதல்) எனும் ஆறாம் அத்தியாயம் முற்றிற்று.

தியான யோகத்தின் பொருள் (6:1-9), அதன் செய்முறை (6:10-6:32), யோக நிலை (6:27-29), செய்முறை வழுவிட ஆகும் நிலை (6:35-36; 6:40-45) இவை எல்லாம் இவ்வத்தியாத்தில் பகவான் சொல்கிறார்.

7. ஞான விஞ்ஞான யோகம்

(மெய்யறிவு இயற்கை அறிவு நிலை)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: என்னிடம் மனதை
இணைத்து, பார்த்தா, யோகத்தில் உறுதியாய்
என்னைச் சார்ந்தோன் சந்தேகமற்று முழுதும்
எனையுணர்தல் சொல்லக் கேளாய்.

2. மெய்யறிவு இயற்கை அறிவு நிலையை
முழுமையாக உனக்கு சொல்கிறேன் இவை
அறிந்திட இவ்வுலகில் இனியும் நீ
அறிய வேண்டியன மிச்சமில்லை.

3. பல்லாயிரம் மாந்தரில் ஒருவன் சித்திபெற
முயலுகிறான் அங்ஙனம் முயலும் சித்தர்
பலரில் ஒருவன் முழுமைப் பெற்று
என்னை உள்ளபடி அறிகிறான்.

4. நிலம் நீர் நெருப்பு காற்று
வான் மனம் புத்தி அகங்காரம்
என எட்டு வகையாய் என்
இயற்கை பிரிந்து தோன்றுகிறது.

5. தாழ்ந்தது இவை இதனின்றும் வேறான
மேம்பட்ட என் இயற்கை அறிவாய்
அதுவே உயிராவது பெரும் வில்லாளனே
அதுவாலே இவ்வுலகு தரிக்கப்படுகிறது.

6. இவ்விரு இயற்கை படைப்பின் மூலமாக
அனைத்தும் உறுபெறுகிறதென உணர் நான்
அதனால் பிரபஞ்சம் முழுதின் ஆக்கம்
அழிவு இவைகட்குக் காரணமாவேன்.

7. என்னைக் காட்டிலும் மேலானது என்று
வேறெதுவும் இல்லை தனஞ்சயா நாம்
வைய்யத்தில் காண்பவை எல்லாம் நூல்மீது
மணிகள்போல் என்மீது கோக்கப்பட்டது.

8. நீரில் சுவை நான் குந்திமைந்தா
சூரியசந்திர ஒளி நான் வேதங்களில்
பிரணவம் நான் வானொலி நான்
ஆண்களின் ஆண்மை நான்.

9. மண்ணில் தூய நறுமணமும் நெருப்பில்
வெப்பமும் நான் உயிரினம் அனைத்திலும்
உயிர்ப்பு நான் தவஞ் செய்து
இருப்போர் தவம் நான்.

10. அனைத்து உயிர்கட்கும் மூலக் கரு
நான் என்பதை உணர முயன்றிடு
பார்த்தா புத்திமானின் புத்தி நான்
ஒளியுடையோரின் ஒளி நான்.

11. பலவானின் வேட்கை விருப்பம் தீர்ந்த
பலம் நான் மேலும் அனைத்து
உயிர்களிடத்து தர்மம் தவறா இச்சை
நான் பாரதர் தலைவனே!

12. அனைத்திலும் தோன்றும் சாந்த வேட்கை
மந்த குணங்கள் என்னிடத்தே பிறந்தவை
என்றுணர் அவை எனக்குள் இருப்பன
நான் அவற்றுள் இல்லை.

13. மூன்று குணங்களின் நிலையில் மயங்கி
மூழ்கி இருக்கும் இவ்வகிலம் உணராது
இவற்றினும் மேலான என்றும் அழியா
இயல்பு கொண்ட என்னை.

14. எனது தெய்வீக சக்தியான இம்மூன்று
குணங்கள் கடந்து உயர்தல் அரிது
என்னில் எவர் சரண் புகுந்தாரோ
அவர் இச்சக்தியினை கடக்கவல்லார்.

15. துஷ்டர்கள் மூடர்கள் மாயத்தால் அறிவு
இழந்த மாந்தரில் கடைப்பட்டோர் அசுரத்
தன்மைப் பற்றி அவ்வழி நடப்போர்
என்னைச் சரண் புகார்.

16. நற் செயலுடைய மக்களில் நான்கு
வகையார் என்னை வழிபடுவர் அர்ஜுனா,
திருப்தியற்றார் ஆர்வமுள்ளார் போகி ஞானி
அவர்கள் பாரதரில் சிறந்தோனே.

17. அவர்களில் எப்பொழுதும் ஒரே பக்தியில்
நிலைத்த ஞானி சிறந்தவன் ஞானிக்கு
நான் மிகவும் இனியவன் எனக்கு
அவன் மிகவும் இனியன்.

18. இந்நால் வகையரும் மேன்மை உடையார்
எனிலும் ஞானியையே நான் யானாகவே
கருதுகிறேன் அவன் யோகத்தில் இசைந்து
என்னையே உயர்கதியாய் சார்கிறான்.

19. பிறவிகள் பல கடந்து ஞானவான்
இறுதியில் சர்வமும் வாசுதேவனே என
உணர்ந்து என்னிடம் சரண் புகுகிறான்
இவ்வித மகாத்மா கிடைத்தற்கரியன்.

20. வெவ்வேறு விருப்பங்கள் கவர அறிவு
மழுங்கியோர் தத்தம் இயல்பால் கட்டுண்டு
வெவ்வேறு வழக்கங்கள் பற்றி இதர
தேவதைகள் வழிபாட்டில் சரணடைவர்.

21. எந்த எந்த பக்தன் நம்பிக்கையுடன்
எந்த எந்த தேவதையை விரும்பி
ஓதுவானோ அவன் அசையா நம்பிக்கை
ஒத்த தேவதையாவேன் நான்.

22. தன் நம்பிக்கையுடன் அந்த தேவதையை
வேண்டி ஓத அதனின்று அவன்
வேண்டியன எய்துவான் எனினும் அவற்றை
வகுத்துக் கொடுப்போன் யானே.

23. மதியீனர் அன்னார் அழியும் பலனையே
எய்துவர் தேவர்களைத் தொழுவோர் தேவர்களயே
எய்துவர் ஆனால் எனது பக்தர்கள்
என்னை வந்து சேர்வர்.

24. மதியீனர் பிரம்மமாகிய என்னை இந்த
வெளிப்பாட்டு உடையோனாக மட்டும் கருதி
என்றும் என் அழிவற்ற உத்தமமான
பரநிலையை அவர் அறிந்திடார்.

25. எனது இவ்வெளிப்பாட்டில் என் அவதாரம்
எல்லார்க்கும் தெரிவதில்லை மூட உலகம்
என்னை பிறப்பும் அழிவும் அற்றவன்
என அறிந்து கொள்ளவில்லை.

26. அனைத்து சென்றனவும் நிகழ்வனவும் மேலும்
அர்ஜுனா வருவனவும் அதோடு உயிர்கள்
அனைத்தும் நான் அறிவேன் எனிலும்
எனை அறிந்தவர் எவருமிலர்.

27. விருப்பு வெறுப்பு இருமை இச்சையால்
வரும் மயக்கத்தால் பாரதா எல்லா
உயிர்களும் தம் பிறப்பில் அதில்
மயங்கி மூழ்கிடும் பரந்தபா.

28. எந்த மாந்தர்கள் புண்ணிய செயல்களால்
அவர்தம் பாவங்கள் தீர்க்கப் பெற்றனரோ
இருமை மயக்கம் தெளிந்தவர் திட
விரதத்தோடு என்னை வழிபடுவர்.

29. மூப்பு மரணம் இதினின்றும் விடுபட
என்னை வழிபட்டு முயல்வோர் அது
என்ற பிரம்மம் ஆத்ம ஞானம்
கர்மங்கள் அனைத்தும் உணர்வர்.

30. எவர் என்னை பௌதீக அறிவு
தேவாதிதேவ அறிவு யாகம் இவற்றுடன்
அறிவரோ அவர்தம் இறுதிக் காலதிலும்
சித்தத்தில் உறுதியாய் எனையறிவர்.

ஞான விஞ்ஞான யோகம் (மெய்யறிவு இயற்கை அறிவு நிலை) எனும் ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஞானம் எனும் சொல் வெகுஜன உபயோகத்தில் இருந்தாலும் இதன் பொருள் எளிதானதல்ல. பொதுவாக அறிவு எனும் பொருள்பட உபயோகமாகும். ஞானம் ஆழ்மன நிலை பற்றிய அறிவாகும். இறையறிவு எனவும் சொல்லலாம். நான் மெய்யறிவு என்று உண்மை உணர்ந்த நிலையை ஞானம் என்ற சொல் குறிப்பதாய் அர்த்தம் கொண்டேன். ஸ்லோகங்கள் 7:4-11 இத்தகைய உண்மையை உரைக்கிறது.

பிரபஞ்சத்தின் பிறப்பு, அதன் குணங்கள், செய்கைகள் அனைத்தும் பிரம்மத்திலிருந்து தோன்றுகிறது. எனிலும் அவைகளால் அது கட்டுண்டிவதில்லை. பிரமத்தில் ஒளியாய் துலங்கிடும் சக்தியுடன் தான் இணைய இவைகள் பிறப்பெய்துகின்றன. இச்சக்தியே மாயா.

இவ்வெளிப்பாட்டை பற்றிய ஞானம் விஞ்ஞானம் ஆகும். இது இயற்கை அறிவாம். இதைக் கடந்து பிரம்ம நிலை எய்தும் வழி சொல்லப்படுகிறது (7:14, 19). 7:14- தேவமாயை எனும் பாரதியின் உரைக்கு தெய்வீக சக்தி என எழுதியுள்ளேன். 7:25- யோகமாயை என்பதை அவதாரம் என எழுதியுள்ளேன். மாயா என்ற சொல்லுக்கு

சக்தி என்பது பொருள். மாயை என்பதை பொதுவாக காட்ச்சிப்பிழை, கருதுவதில் மயக்கம் (Illusion) என உபயோகிப்போம். நான் மேலே சொன்னவாறு இங்கு பகவானின் உள்ளடங்கிய சக்தியை குறிப்பதால் இப்படி எழுதியுள்ளேன்.

7:24, 25 ஸ்லோகங்களுக்கு பாரதி மிகச் சுருக்கமாக உரை எழுதியுள்ளார். நான் சற்றே வேறுபட்டு விரிவாக எழுதியுள்ளேன்.

7:29 “அது என்ற பிரம்மம்” இதில் அது “தத்” என்பதாம்.

7:30ல் பூத ஞானம் என்பதை பௌதீக அறிவு என்றும் (ஆதி)தேவ ஞானம் என்பதை தேவாதிதேவ அறிவு என எழுதியுள்ளேன்.

8. அக்ஷர பிரஹ்ம யோகம்

(அழியாத பிரம்ம நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: அப்பிரம்மம் எது,
ஆத்ம ஞானம் யாது, புருஷோத்தமா,
கர்மமென்பது யாது, பூத ஞானம்
யாது, தேவஞானம் என்பதெதனை?

2. யாக ஞானம் என்பதென்ன, இத்தேகத்தில்
உயிர்ப்போர், மதுசூதனா, தம்மைத் தாம்
கட்டியவர் எனிலும் உயிர் பிரியும்
காலத்தே நின்னை அறிவதெங்ஙனம்?

3. ஸ்ரீபகவான் சொல்கிறான்: அழியா பரம்பொருளே
பிரம்மம் அதன் இயல்பு அறிதல்
ஆத்ம ஞானம் உயிர்த் தன்மை
உருபெறும் இயற்கை கர்மமாம்.

4. அழியும் இயற்கையறிதல் பூத ஞானம்
ஆதிபுருஷ லக்ஷ்ணம் பற்றின தேவஞானம்
அவதார இத்தேகத்தில், உயர்ந்தோனே, என்னை
அறிதல் யாக ஞானம்.

5. அந்திமக் காலத் தருவாயில் உடல்
துறந்து உயிர் பிரியும் பொழுது
எனது நினைவாய் இருப்போன் எனதியல்பு
எய்துவான் இதில் ஐயமில்லை.

6. அந்திமக் காலத்தில் உடல் துறக்கையில்
எந்தெந்தத் தன்மைகள் நினைவாய் இறப்பானோ
குந்திமைந்தா எப்போதும் அத்தன்மைகள் கருத்தால்
அதனையே அவன் எய்துகிறான்.

7. ஆதலால் எப்பொழுதும் என்னை நினை
போர் செய் மனதை புத்தியை
என்னிடம் அர்ப்பணம் செய் நீ
என்னையே அடைவாய் ஐயமில்லை.

8. பயிற்சியால் யோகத்தில் மனமும் புத்தியும்
வேறெதிலும் சிதறாது உறுதியாய் சதா
பரம புருஷனையே சிந்தையில் வைப்போன்,
பார்த்தா, அவனையே அடைகிறான்.

9. அனைத்தும் அறிந்தோன் பெரியோன் ஆள்வோன்
அணுவில் அமைந்தோன் அனைத்தும் தரிப்போன்
எண்ணுதற்கரியா வடிவுடையோன் இருளகல கதிரவன்
நிறத்தோனை எவன் நினைப்பனோ;

10. அந்திமக் காலத்தில் திடமனதாய் பக்தியில்
புருவங்களிடை உயிர்மூச்சை நிறுத்தி யோக
பலத்துடன் நினைப்போன் அவனே அத்தெய்வீக
பரம புருஷனை அடைகிறான்.

11. எந்நிலை அழியாதென வேதவித்தர் சொல்வரோ
எவற்றையும் துறந்தோர் எதனுட் புகுவரோ
எதனை விரும்பி பிரம்மச்சர்யம் கொள்வரோ
உனக்கதனை சுருங்கச் சொல்கிறேன்.

12. கோட்டை வாசல்கள் எல்லாம் மூடி
மனதை உள்ளத்தில் கட்டி உயிர்
மூச்சை தலையில் நிறுத்தி யோக
தாரணை முயன்று பெற்று,

13. ஓம் எனும் ஒருசொல் பிரம்ம
மந்திரம் ஜபித்து என்னை பூஜிப்போன்
தன் உயிர் பிரிந்து உடல்
துறக்க பரகதி எய்துகிறான்.

14. சித்தம் வேறெதிலும் சிதறாது உறுதியாய்
நித்தம் யோகத்தில் இசைந்து என்னையே
எண்ணி இருக்கும் பக்தனுக்கு நான்
எளிதில் அகப்படுவேன் பார்த்தா.

15. என்னை அடைந்து பரம சித்தி
பெற்ற மகாத்மா மீண்டும் ஒரு
பிறவி எடுத்து துன்பத்தில் உழலும்
வாழ்வு அடையப் பெறார்.

16. பிரம்மலோகம் உட்பட அனைத்து உலகும்
மறுபடி பிறந்திடும் தன்மையன குந்தி
மகனே, என்னை அடைந்தார்க்கோ என்றும்
மறுபடி பிறப்பு என்பதில்லை.

17. ஓராயிரம் யுகங்கள் கொண்டது பிரம்மனின்
ஒரு பகல் எனவும் ஓர் இரவோ
ஓராயிரம் யுகங்களில் முடியுமென அறிந்தார்
இரவு பகல் இயல்பறிவார்.

18. பிரம்ம சொரூப இயற்கையில் தோன்றும்
அனைத்து வெளிப்பாடும் பகலில் உதித்து
அவைகள் மீண்டும் இரவில் அதே
பிரம்ம சொரூபத்தில் மறையும்.

19. இந்த பூதத் தொகுதி உதித்து
உதித்து தன் வசமின்றி இரவு
வந்திட மறையும் பார்த்தா பகல்
வந்திட மீண்டும் உதித்திடும்.

20. பிரம்ம சொரூப இயற்கையினும் மேலாய்
பரம பதம் ஒன்றுள்ளது எல்லா
உயிர் வெளிப்பாடும் அழிந்த பின்னும்
அப் பதம் அழியாது.

21. அழிவற்ற பிரம்மம் அதனை பரம
கதி என்று சொல்லப்படும் எதை
எய்தபின் மீண்டும் பிறப்பது இலாதோ
அதுவென் பரம பதமே.

22. அந்த பரம புருஷனை பார்த்தா
அசையா பக்தியால் எய்திடலாம் அவனில்
அனைத்து பூதங்களும் நிலைக்க அவன்
அவைகளின் உள்ளூரப் பரந்திருக்கிறான்.

23. எக்காலத்தில் இறப்பதால் எந்த யோகி
மீளா நிலையோ மீளும் நிலையோ
பெறுவான் என்று நான் இப்போது
சொல்கிறேன் பாரதரில் சிறந்தோனே.

24. நெருப்பு ஒளி பகல் வளர்
பிறை வடக்கில் ஆதவன் உலவும்
ஆறு மாதம் இவற்றில் இறக்கும்
பிரம்மஞானி பிரம்மத்தை அடைவான்.

25. புகை இரவு தேய் பிறை
தெற்கே ஆதவன் உலவும் மாதங்கள்
ஆறு இவற்றில் இறக்கும் யோகி
சந்திரனொளிப் பெற்று மீளுகிறான்.

26. ஒளி இருள் வழிகள் இரண்டும்
உலகில் நிலையென கருதுவோன் இவற்றுள்
ஒன்றினால் மீளாப் பதமும் மற்றொன்றினால்
மீளும் பதம் அடைவான்.

27. இவ்வழிகள் இரண்டை, பார்த்தா, உணர்ந்த
யோகி இதனால் மயங்கிடான் எனவே
எப்போதும் நீ யோக நிலையில்
பொருந்தி இருப்பாய் அர்ஜுனா.

28. இதையறிந்த யோகி வேத ஞானம்
தவம் தானம் இவை தரும்
புண்ணிய பயனைக் கடந்து ஆதி
நிலையான பரநிலை எய்துகிறான்.

அக்ஷர பிரஹ்ம யோகம் (அழியாத பிரம்ம நிலை) எனும் எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

இந்த அத்தியாயத்தில் அவ்யக்தம் எனும் பதம் 18வது ஸ்லோகத்தில் சொல்லப்படுகிறது. பாரதியார், இதற்கு மறைவுபட்ட உலகம் என விவரித்துள்ளார். நான் இதற்கு பிரம்ம சொரூப இயற்கை என எழுதினேன்.

ஸ்லோகம் 20ல் "அவ்யக்ததினும் அவ்யக்தம்" சநாதன (நித்திய, எப்போதும் இருக்கும், Eternal) பதம் சொல்லப்படுகிறது. இதுவே பரமபதம் அல்லது பரம புருஷன் எனப்படும்.

அவ்யக்தம் வெளிப்பாடற்று (unmanifest) புலன்களின் நேரடி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது எனினும் இது பரபிரம்ம நிலையை குறிப்பதாகாது. இதனை வெளிப்பாடற்ற பிரம்ம குணம் (சொரூபம்) அல்லது பிரகிருதி என்று பொருள் கூறப்படும். இதிலிருந்து வெளிப்பாடுடைய (manifest) பிரபஞ்சம் தோன்றும்.

தாரணை (ஸ்லோகம் 12) என்பது யோகத்தில் 6ம் நிலை என்பார் திருமூலர். ஐம்பூதங்களின் உந்தலால் விளையும் ஐம்புலன்கள் உணர்வை மனம் புத்தி சித்தம் கொண்டு அடக்கிய நிலையாம்.

9. ராஜ வித்தியா ராஜ குஹ்ய யோகம்

(பக்தி பக்தி இரகசியமறியும் நிலை)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: அசூயை அற்றவனே
அதி இரகசிய ஞானமிதை விஞ்ஞானமாகச்
சொல்கிறேன் இதை நீ அறிவதால்
இகவாழ் துயரிலிருந்து விடுபடுவாய்.

2. மேன்மையன ராஜ வித்தை ராஜ
இரகசியம் தூய்மை தரும், அனுபவத்தால்
அறிவதாயும் அறத்துக் கிசைந்த இதனை
செய்தற்கும் எளிது அழிவற்றது.

3. இவ்வறம் நம்பிடா மாந்தர், பரந்தபா
என்னை எய்திடும் பேறு பெறாது
மீண்டும் இவர் நரக உலக
வாழ்க்கைப் பாதையில் மீளுகிறார்.

4. அவ்யக்த மூர்த்தியாய் நான் இந்தப்
பிரபஞ்சம் முழுதும் வியாப்பித்து உள்ளேன்
பூதங்கள் அனைத்தும் என்னுள் நிலைப்பன
அவற்றுள் அல்ல நான்.

5. பூதங்கள் என்னுள் நிற்பனவுமல்ல
பார் என் யோகமகிமையை - நான்
பூதங்களைத் தரித்தும் அவற்றுள் அல்லேன்
பூதங்கள் எனதாத்மாவில் இயல்பெய்தும்.

6. பரந்த வானில் நிலை பெற்ற
பெரும் காற்று எங்கும் வீசுதல்போல்
பூதங்கள் எல்லாம் என்னுள் நிலை
பெற்றனவென தெரிந்து கொள்.

7. அனைத்தும் குந்தி மகனே யுகமிருதியில்
எனது இயல்பை வந்து அடையும்
மீண்டும் ஒரு புது யுகத்தில்
நான் அவற்றைப் படைக்கிறேன்.

8. நான் என்னுள் துலங்கும் சக்தியில்
இணைந்து மீண்டும் மீண்டும் பிரபஞ்ச
பூதங்கள் முழுதும் இயற்கை வசத்தால்
தானாக நான் படைக்கிறேன்.

9. என் வினைகள் தனஞ்சயா என்றும்
என்னை தளைப் படுத்தா நான்
வினைகளில் கவர்தல் இன்றி நடுநிலையில்
மேற்பட்டோனாய் அமர்ந்து இருக்கிறேன்.

10. என் மேலாண்மையில் சக்தியால் அசைவன
அசைவற்றன அனைத்தும் படைக்கப் பெறும்
இந்த ஏதுவால் குந்தி மகனே
அண்ட சராசரங்கள் இயங்குகின்றன.

11. அவமதிப்பர் மூடர்கள் மனித சரீரம்
தரித்த என்னை பூதங்கள் அனைத்திற்கும்
மகேஸ்வரன் நானெனும் என் பரம
நிலை அவர்கள் அறிகிலர்.

12. வீணாசை கொண்டோர் வீணர்கள் வீணறிவாளர்
மதியற்றோர் இவர்கள் மயங்கியே அவா
குரூரம் மோகம் எனும் சித்த
இயல்புகள் சார்ந்து நிற்கிறார்.

13. மகாத்மாக்கள் பார்த்தா என் தெய்வீக
அவதாரத்தில் அடைக்கலம் கொண்டு பூத
முதலானதை அழியா என்னியல்பு படைப்பதை
உணர்ந்து மனமொத்து வணங்குகிறார்.

14. எப்பொழுதும் என்னைப் போற்றி துதித்து
திட விரதத்தோடும் முழு முயற்சியோடும்
என்னை தினம் பக்தியோடு வணங்கி
நித்தியயோகி என்னை உபாசிக்கிறார்.

15. ஞான வேள்வியால் உபாசிப்போர் வேறு
சிலர் என்னை அனைத்திலும் ஊடுருவிய
ஒருமையாய் ஒவ்வொன்றிலும் பன்மையாய் பிரபஞ்ச
வடிவாய் என்னை வழிபடுகிறார்.

16. நான் ஓமம் நான் யாகம்
நான் ஸ்வதா நான் மருந்து
நான் மந்திரம் நான் நெய்
நான் தீ நானவி.

17. இப்பிரபஞ்சத்தின் பிதா நான் மாதா
தரிப்போன் பாட்டன் அறியப்படுவன தூய்மை
செய்வோன் ஓங்காரம் ரிக் ஸாம
யஜுர் வேதங்கள் நான்.

18. நானே இலக்கு ஆதாரம் தலைவன்
சாட்சி உறையுள் சரண் தோழன்
தொடக்கம் முடிவு இடம் நிலை
அழியா விதை இவ்வுலகத்திற்கே.

19. வெப்பம் தருவது நான் மழையை
நிறுத்தியும் பெய்விப்பவனும் நான் அமிர்தம்
நான் மரணம் நான் உள்ளதும்
இல்லாததும் நான் அர்ஜுனா.

20. திரிவேதியர் சோமமுண்டார் பாவம் அற்றார்
வேள்விகளால் என்னை வேட்டு சுவர்க்கம்
வேண்டியோர் புண்ணிய இந்திரலோகம் எய்தி
தேவ போகங்கள் துய்ப்பர்.

21. பரந்த சுவர்க்கத்தில் இன்புற்று புண்ணியம்
தீர இப்பூவுலகில் பிறந்து மரணிக்கும்
வாழ்வடைவர் இங்ஙனம் மூன்று வேதமுறைகள்
தொழுவோர் விருப்பங்களில் வீழ்ந்துழல்வர்.

22. வேறு நினைப்பின்றி என்னை மனதில்
நிறுத்தி வழிபடுவோர் யாவரோ அவர்
நித்திய யோகத்தை காத்து அவர்
நன்மை தீமையை பொறுப்பேன்.

23. பிற தேவர்களை நம்பித் தொழும்
பக்தரும் குந்தி மகனே என்னை
மட்டுமே தொழுகிறார் எனிலும் அவர்
முறை விதி வழுவியதாகும்.

24. நான் வேள்விகளின் அவி பெறுவோன்
நானே தலைவனும் ஆவேன் எனிலும்
என்னை உள்ளபடி அறியார் இம்மாந்தர்
அதனால் கீழே வீழ்வர்.

25. தேவரைத் தொழுவார் தேவரை அடைவர்
மூதாதயரை நோற்பார் மூதாதயரை யடைவர்
பூதாதியை பூஜிப்பார் பூதங்களை யடைவர்
எனது பக்தரோ எனையடைவர்.

26. இலை பூ கனி நீர்
எதுவேனும் தூய பக்தியில் முயன்று
எனக்கு அளிப்பவன் ஆயின் அன்னவன்
அன்போடு அளிப்பதை யானேற்பேன்.

27. எதை நீ செய்தாலும் உண்டபோதும்
எதை நீ அர்ப்பணித்தாலும் கொடுத்தாலும்
எத்தவம் நீ செய்தாலும் குந்திமைந்தா
எனக்கே அர்ப்பணமெென செய்.

28. இங்ஙனம் சுப அசுப பலனுள்ள
கர்மத் தளைகள் அறுப்பாய் துறவு
யோகத்தில் மன மிசைந்து விடுதலை
பெற்று என்னை எய்துவாய்.

29. எனக்கு உயிர்களெல்லாம் சமம் எவரும்
எனக்கு பகையில்லை நட்புமில்லை எனிலும்
என்னை அன்புடன் தொழுவோர் என்னகத்தமர்ந்தார்
அவரகத்து நான் உளேன்.

30. மிகக் கொடிய செயலுடையோன் ஆயினும்
பிறவழியில் மனம்செலாது எனை வழிபடுவோன்
மிக நல்லோனெனக் கருதுக ஏனெனில்
அவன் நன்கு முயல்கிறான்.

31. அவன் விரைவில் தர்மவான் ஆவான்
அவன் அசையா அமைதி அடைவான்
குந்தி மகனே சாற்றுகிறேன் நான்
எனது பக்தன் அழியான்.

32. என்னை அடைக்கலம் புக பாவிகளோ
மாதரோ வைசியரோ சூத்திரரோ குந்தி
மகனே இவர்கள் எல்லாரும் என்னில்
பரம கதி எய்துவர்.

33. அப்படி இருக்க தூய்மை பெற்ற
அந்தணரும் அறம் சார்ந்த அரசரும்
இப்பேறு பெறாரோ நிலையற்ற இன்பமற்ற
இப்பிறப்பில் நீயெனை வழிபட்டுய்வாய்.

34. என்னில் மனதை நிறுத்தி பக்தியை
எனக்காக்கு என்னை தொழுது அர்ப்பணி
இங்ஙனம் உனதாத்மா என்னில் முழுமையாய்
திளைக்க என்னையே எய்துவாய்.

ராஜ வித்தியா ராஜ குஹ்ய யோகம் (பக்தி பக்தி இரகசியமறியும் நிலை) எனும் ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

மிக உயர்ந்த நிலையும் அதிரகசியமுமானது பக்தியாம். அது கடவுளின் பெருமையை அறிய அறிய மனம் விரும்பி தன்னை அர்ப்பணித்துடும் நிலை. அந்நிலை அடைய தன் மகத்துவத்தை பகவான் விளக்குகிறார். அடுத்த அத்தியாத்தில் பகவான் தன் மகிமையை மேலும் விவரித்து மனம் பக்தியில் திளைக்க வழி வகுக்கிறார்.

ஸ்லோகம் 9:16ல் ஸ்வதா எனும் பதம் வாழ்த்துரை என பாரதியார் சொல்கிறார். ஸ்வதா, ஸ்வஹா இரு சக்தி தேவிகள் யாகத்தில் ஆகுதி செய்வதை பிதிர்களுக்கும் தேவர்களுக்கும் முறையே சேர்ப்பார்.

10. விபூதி யோகம் (மகிமை உணர் நிலை)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: பெரும் வில்லாளனே
கேளாய் மீண்டும் நான் சொல்லவிருக்கும்
மேலான சொல்லினை நீ எனக்குகந்தவன்
நின்நலம் கருதியிதனை உரைக்கிறேன்.

2. தேவசூரர் எனது மகிமை அறியார்
பெருந்தகை முனிகளு மிதனை உணரார்
தேவாதி தேவர்கட்கும் மகரிஷிகட்கும் யாங்கணும்
ஆதி மூலம் நானே.

3. யாவர் எனை பிறப்பதிலான் ஆதியிலான்
உலகின் மகேஸ்வரன் என உணர்வாரோ
மரணிக்கும் மானிடருள் மயக்கந் தீர்ந்தார்
அன்னவர் பாவங்களிலினும் விடுபடுவர்.

4. மதி ஞானம் ஐயம் தீர்ந்தும்
மன்னித்தல் வாய்மை தன்னடக்கம் அமைதி
இன்பம் துன்பம் பிறப்பு இறப்பு
அச்சம் அஞ்சாமை இவையோடு;

5. அகிம்சை நடுநிலை திருப்தி தவம்
ஈகை புகழ் இகழ் இங்ஙனம்
வகை பலவாம் இயல்புகள் எல்லாம்
என்னிடம் பெறுவன உயிர்கள்.

6. முன்னை மகரிஷிகள் எழுவர் நான்கு
மனு தர்மவான்கள் எனதியல்பு கொண்டு
எனது எண்ணத்தில் பிறந்தனர் அவர்தம்
மரபினரே இம் மக்களெல்லாம்.

7. இத்தகைய எனது மகிமையும் யோகத்
திருவையும் உள்ளவாறு உணர்ந்த ஒருவன்
தடுமாறா யோகத்தில் திளைக்கப் பெறுவான்
திண்ணம் இங்கிதில் ஐயமில்லை.

8. அனைத்தின் ஆதி நானே என்னிடமிருந்தே
அனைத்தும் வெளிப்படும் இங்ஙன முணர்ந்த
பண்டிதர் தம் கருத்தாய் என்னை
கொண்டு அன்புடன் தொழுவர்.

9. மனம் என் வசமாக உணர்வுகள்
என்னில் அமிழ ஒருவரை யொருவர்
உணர்வித்து எக்காலமுந் தம்முள் எனைப்
போற்றுவார் மகிழ்ந்தே இன்புறுவர்.

10. யாவர் எப்போதும் பக்தியில் திளைத்து
பரவசமாக என்னை வழிபடுவரோ அவர்க்கு
யான் புத்தியோகம் அளிப்பேன் இதனால்
என்னை அவர் எய்துவார்.

11. அன்னவர் பாலிரங்கி யான் அன்னவர்
ஆத்ம இயல்பாகி சுடர் மிகு
அறிவு விளக்கொளியாய் அவரக
அஞ்ஞான இருள் நீக்கிடுவேன்.

12. அர்ஜுனன் சொல்கிறான்: நீயே பரபிரம்மம்
பரவீடு தூயோன் நீயே நித்திய
புருஷன் ஆதிதேவன் பிறப்பிலான் இறைமை
கடவுள் நீ என;

13. முனிவர்கள் எல்லாம் மொழிவர் தேவரிஷி
நாரதர் அசிதா தேவாலா வியாசரும்
அங்ஙனமே செப்புகிறார் நீ நேரே
எனக்கு இங்கதை உரைக்கிறாய்.

14. நின் சொல் அனைத்தும் கேசவா
நான் மெய் யெனக் கொண்டேன்
விண்ணவரும் அசுரரும், பகவானே, அறிவரோ
நின் சொல்லின் உண்மையை?

15. நீயே உனை அறிந்தோன் புருஷோத்தமா
நீயே பூதங்கள் அனைத்தும் படைத்தாய்
நீயே அவற்றின் தலைவன் தேவதேவா
நீயே இவ்வையகத் திறைவன்.

16. எந்த மகிமையால் இவ்வகிலம் சூழ்ந்தனையோ
அந்த மகிமைகள் திவ்யத் தன்மையன
அதனில் மீதம் ஏதுமின்றி எனக்கு
நீயே உணர்த்த வேண்டுகிறேன்.

17. எங்ஙனம், பரமயோகியே, உனை சிந்தித்து
நின்னை நான் உணர்வேன், பகவனே
எவ்வெப் படிகளில் நின்னை மனதில்
யான் கருதல் வேண்டும்?

18. விரித்துரை நின் பரயோகம் பெருமைகள்
மற்றொரு முறை ஜனார்த்தனா உன்
வார்த்தைகள் அமிர்தம் எனக்கு தெவிட்டா
இன்பம் தருவன அவை.

19. ஸ்ரீபகவான் சொல்கிறான்: ஆஹா! சொல்கிறேன்
உனக்கு எனது தெய்வீக ஆத்ம
பெருமையுள் பிரதானமானதை, குருகுல திலகமே,
அந்தமிலை எனது விரிவுக்கே.

20 நானே, குடாகேஷ, அனைத்து உயிர்களின்
உள் உறையும் ஆத்மா அவ்வுயிர்கட்கு
நானே ஆதி இடையும் நானே
அவற்றின் அந்தமும் நானே.

21. ஆதித்யர் பன்னிருவரில் விஷ்ணு நான்
ஒளிரும் கதிர்களில் ஞாயிறு நான்
வீசும் காற்றில் மரீசி நான்
கோள்களில் திங்கள் நான்.

22. வேதங்களில் ஸாம வேதம் நான்
தேவர்களில் தலைவன் இந்திரன் நான்
புலன்களில் மனம் நான் உயிர்களில்
உணரும் சக்தி நான்.

23. ருத்திரரில் நான் சங்கரன் இயக்கர்
அரக்கருள் நான் ஐஸ்வர்ய அதிபதி
குபேரன் வசுக்களில் நான் தீ
சிகரங்களில் நான் மேரு.

24. புரோகிதருள் பார்த்தா தலைவன் பிரகஸ்பதி
நான் என்று உணர் படைத் தலைவரில்
நான் ஸ்கந்தா நீர் நிலைகளில்
நான் பெருங் கடல்.

25. மகரிஷிகளில் பிருகு நான் ஒலிகளில்
பிரணவ மந்திரம் நான் யக்ஞயங்களில்
ஜபம் நான் அசையா நிலைகளில்
இமய மலை நான்.

26. மரங்களில் அரச மரம் நான்
தேவ ரிஷிகளில் நாரதன் நான்
கந்தர்வரில் சித்ரரதன் சித்தி பெற்றோரில்
கபில முனி நான்.

27. குதிரைகளில் நான் பாற்கடலில் உதித்த
உச்சைசிரவம் என்று உணர் யானைகளில்
கம்பீர ஐராவதம் என்றும் மனிதர்களில்
அரசன் என்றும் அறி.

28. ஆயுதங்களில் நான் வஜ்ரம் பசுக்களில்
நான் காமதேனு பிறப்பின் ஏதுவில்
நான் மன்மதன் மேலும் பாம்புகளில்
நான் நாகமணி வாசுகி.

29. நாகர்களிடை நான் அநந்த சேஷன்
நீர் வாழ்வனவில் வருண தேவன்
பிதிர்க்களில் நான் அரியமான் தர்ம
பரிபாலரில் நான் யமன்.

30. அசுரர் கூட்டத்தில் நான் பிரகலாதன்
அடக்குவதில் நான் காலம் மேலும்
விலங்குகளில் நான் சிங்கம் மற்றும்
பறவைகளில் நான் கருடன்.

31. தூய்மை செய்வனவற்றில் காற்று நான்
ஆயுதம் தரித்தோரில் நான் ராமன்
மீன்களில் நான் சுறா பாயும்
நதிகளில் நான் கங்கை.

32. படைப்பில் ஆதி அந்தம் இடையும்
நான் அர்ஜுனா வித்தைகளில் நான்
அத்யாத்ம வித்தை வாதம் செய்வோரின்
சீரான தர்க்கம் நான்.

33. அட்சரங்களில் அகரம் நான் புணர்ப்புகளில்
இரட்டை புணர்ப்பு நான் மேலும்
நித்திய காலம் நான் படைப்போரில்
நான்முக பிரம்மன் நான்.

34. சர்வநாச மரணம் நான் சந்ததிகளின்
பிறப்பும் நான் பெண்களிடத்து நான்
கீர்த்தி அழகு நல்வாக்கு நினைவு
மேதை திடம் பொறை.

35. ஸாமங்களில் நான் பிருகத் ஸாமம்
மந்திர சந்தங்களில் நான் காயத்திரி
மாதங்களில் நான் மார்கழி பருவங்களில்
மலர் சார்ந்த வசந்தம்.

36. வஞ்சகரின் சூது நான் ஒளி
பொருந்தியனதில் ஒளி நான் ஜெயம்
நான் முனைவோரின் முனைவு நான்
பலவானின் பலம் நான்.

37. விருஷ்ணி குலத்தாரில் நான் வாசுதேவன்
பாண்டவரில் நான் தனஞ்சயன் முனிகளில்
நான் வியாசன் மகா கவிகளில்
நான் கவி உஷனா.

38. தண்டிக்கும் அரசன் கை செங்கோல்
நான் வெற்றி நாடுவாரிடத்தே நீதி
நான் இரகசியங்களில் மௌனம் நான்
ஞானிகளின் ஞானம் நான்.

39. எதுவாகிலும் அதன் படைப்பின் விதை
எதுவோ அது நான் அர்ஜுனா
என்னை சார்ந்திடா பூத சராசரங்கள்
என்று எதுவும் இல்லை.

40. அந்த மற்றது எனது திவ்ய
மகிமைகள் பார்த்தா அவற்றுள் ஒரு
சில மகிமைகள் மட்டும் உனக்கு
நான் எடுத்து உரைத்தேன்.

41. எதெது பெருமை உடையதாய் இருக்குமோ
அழகும் வலிமையும் உடையதோ அது
எல்லாம் நிச்சயமாக எனது மகிமையின்
அம்சம் என்று உணர்வாய்.

42. எனிலும் பலவாறாய் இவற்றை அறிவதில்
உனக்கு பயன் யாது? அர்ஜுனா ஊடுருவிய
எனது இயல்பின் ஓர் அம்சத்தால்
இப்பிரபஞ்சம் நிலை பெற்றது.

விபூதி யோகம் (மகிமை உணர் நிலை) எனும் பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்லோகம் 37ல் உஷனா எனும் பெயரை சுக்கிரா என "கவிகளில் சுக்கிர கவி" என்று பாரதி சொல்கிறார். நான் உஷனா என்றே எழுதியுள்ளேன். உஷனா எனும் பெயர் பல இடங்களில் வருகிறது. குறிப்பாக ரிக் வேத கவி உஷனா, பிருகு மகரிஷியின் பத்தினி - சுக்கிரச்சாரியாரின் அன்னை உஷனா எனும் இரண்டு சொல்லலாம். சுக்கிரச்சாரியாரும் உஷனா எனும் பெயரால் அறியப்படுகிறார். மேலும், வேத காலத்தில் மாதா பெயரைக் கொண்டே சந்ததிகள் குறிப்பிடப்பட்டனர். ஆதலால் பாரதி சுக்கிரா என்று எழுதியிருக்கக் கூடும்.

ஸ்லோகம் 42 அடுத்த அத்தியாயத்திற்கு ஆதாரமாகிறது. பரமனில் யாங்கணும் அடங்கிய காட்சி வெளிப்பட இருப்பதற்கு முகாந்திரம் இந்த ஸ்லோகம்.

11. விசுவ ரூப தரிசன யோகம்

(அடிமுடி உணர் நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: என்னிடம் கருணை
கொண்டு பரம ரகசிய ஆத்ம
ஞானம் நீ சொல்லக் கேட்டு
என் மயக்கம் நீங்கிற்று.

2. உயிர்களின் தோற்றம் மறைவு பற்றி
விரிவுற நீ சொல்லக் கேட்டேன்
ஓ! தாமரைக் கண்ணனே உனது
தீராத பெருமையையும் கேட்டேன்.

3. இங்ஙனம் இவை நீ சொன்னபடி
இருக்க நின்னை, பரமேஸ்வரா, உன்
இறை ரூபத்தில் காண நான்
இச்சைக் கொண்டேன் புருஷோத்தமா!

4. உன் எண்ணம் இவையை என்னால்
காண இயலும் எனில் மேன்மையானவனே
யோகேஸ்வரா எனக்கு நின் நித்திய
ஆத்ம சொரூபத்தைக் காட்டுக.

5. ஸ்ரீபகவான் சொல்கிறான்: பார் இதோ
பார்த்தா, புண்ணிய பல நூறு
பல்லாயிர ரூபங்கள் பல்வகை வடிவுகள்
பல்வித நிறங்கள் இருப்பதை!

6. இதோ ஆதித்யர் பன்னிருவர் அட்ட
வசுக்கள் ருத்திரர் பதினொன்று மருத்துகள்
நாற்பத்தொன்பது இன்னும் பல கண்டிராத
அற்புதங்கள் பார் பாரதா!

7. இதோ குடாகேஷ என்னுடலில் அண்ட
சராசரமும் ஒருங்கு நிற்பதைப் பார்
இன்னும் வேறேதும் காண விழையின்
இங்கதை காண்பாய் நீ.

8. உனது இயற்கைக் கண்களால் எனைக்
காண இயலாது உனக்கு நான்
ஞானக் கண் கொடுக்கிறேன் பார்
எனது ஈஸ்வர யோகத்தை.

9. சஞ்சயன் சொல்கிறான்: இங்ஙனம் உரைத்து
அதன்பின் அரசே! யோகேஸ்வர ஹரி
தன் தெய்வீக ஈஸ்வர வடிவை
பார்த்தன் காணக் காட்டினான்.

10. பல வாய்களோடும் பல விழிகளோடும்
பல அற்புத காட்சிகளும் திவ்யாபரணங்கள்
பல தரித்ததுமாய் சிறந்த ஆயுதங்கள்
பல ஏந்தியது அவ்வடிவம்.

11. திவ்ய மாலைகளும் ஆடைகளும் அணிந்தும்
திவ்ய கந்தங்கள் பூசியதும் வியக்கத்தகுவன
அனைத்தும் ஒளியும் அந்தமிலது யாங்கணும்
பரந்திருக்கும் முகங்கள் கொண்டது.

12. ஆயிரம் ஆதவர் ஒருங்கே உதித்திடின்
பாயும் அவற்றின் கதிர்கள் எங்ஙனம்
வானில் ஒளிருமோ அங்ஙனம் தோன்றியது
அந்த மகாத்மாவின் பிரகாசம்.

13. பரந்து விரிந்த பல வகைப்பட்ட
பிரபஞ்சம் முழுதும் அந்த தேவ
தேவன் சரீரமதில் ஒருங்கே அடங்கக்
கண்டான் பாண்டவன் அப்போது.

14. தனஞ்சயன் அப்போது பெரும் வியப்பால்
தனது உடல் ரோமம் சிலிர்க்க
தலை பணிந்து இறைவனைக் கரம்
கூப்பி வணங்கிக் கூறலானான்.

15. அர்ஜுனன் சொல்கிறான்: நின் தேகத்தில்
தேவா, தேவர் அனைவரையும் பூதாதிகளையும்
தாமரையில் அமர்ந்த ஈசனாம் பிரம்மனையும்
ரிஷிகளை தேவசர்ப்பங்களை காண்கிறேன்.

16. புஜங்களும் வயிரும் வாயும் கண்களும்
பலவனவாய் நினை அந்தமிலாது எங்கணும்
காண்கிறேன் விஸ்வேசுவரா அந்தம் இடை
ஆதியிலா விஸ்வரூபமாய் காண்கிறேன்.

17. மகுடம் தண்டம் சக்கரமோடு யாங்கணும்
பிரகசமாக ஒளிரும் நினைக் காண்கிறேன்
காணமுடியா எரிதழலும் ஞாயிறொத்த ஒளியாய்
அளவிடற் கரியதாய் திலங்குகிறாய்.

18. தீதில்லா பரமன் அறியற் குரியன்
நீ இவ்வகிலத்தின் பிரதானம் நீ
தீராதவன் தர்மத்தின் காவலன் நினயே
சநாதன புருஷனெனக் கொண்டேன்.

19. ஆதி நடு அந்தமிலாய் வரம்பிலா
கைகளும் நிலவும் ஆதவனும் விழிகளாக
எரிதழல் முகத்தினாய் அகிலம் தகிக்கும்
ஒளியுடையோனாய் நினைக் காண்கிறேன்.

20. வானம் பூமியிதன் இடைவெளியும் திசைகள்
அனைத்தும் நின்னால் நிரம்ப உனது
அற்புத உக்கிர வடிவமதைக் கண்டு
மூவுலுகும் நடுங்குகிறதே பரமா!

21. தேவசூரர் உன்னுள் புகுந்திட சிலரோ
அச்சத்தால் கைகூப்பி துதிக்க மகரிஷிகள்
சித்தர்கள் 'நல்சாந்தி' நவில்ந்து நின்னை
வேதம் ஓதி வழிபடுகிறார்.

22. ருத்திரர் ஆதித்யர் வசு சாத்யர்
இந்திராதியர் அஸ்வின்குமாரர் மருத்து உஷ்மபர்
கந்தர்வர் யக்ஷர் அசுரர் சித்தரெல்லாரும்
நின்னைக் கண்டு வியந்தனரே!

23. நின் பெருவடிவில் பெருந்தோளாய் பல
முகங்கள் கண்கள் கைகள் தொடைகள்
பாதங்கள் வயிறும் பற்களும் கண்டு
அகிலம்மும் நடுங்கின யானுமவ்வாறே.

24. வானளாவி வண்ணங்களில் ஒளிர்ந்தும்
வாய்களும் கனல்கின்ற கண்களுமான நின்
வடிவினைக் கண்டு நான் நிலைதடுமாறி
விஷ்ணுவே, அமைதி இழந்தேனே.

25. நீண்ட பற்களும் ஊழீத்தீ யொத்த
நின் முகங்கள் கண்டு திசைகள்
அறியேன் சாந்தியிலை தேவதேவா அருள்க
அகிலம் நின்னில் தஞ்சமன்றோ.

26. திருதராஷ்டிரனது இம்மக்கள் வீர அரசர்
படைகள் பீஷ்மர் துரோணர் சூதன்
புத்திரன் கர்ணன் இவர்களோடு நம்
படையில் முக்கிய வீரர்கள்;

27. நின் அச்சம் தரும் கோரப்
பற்கள் கொண்ட வாயில் விரைந்து
புகுந்தனரே சிலரோ நின் பல்லிடையில்
பிடிபட்டு தலைநொறுங்கி காணப்பட்டரே.

28. பாயும் நதிகள் அலை மோதும்
கடல் நோக்கி இழைந்தோடி வீழ்வது
போல் இம்மானுட வீரர்கள் சுடரும்
நின் வாய்களில் வீழ்கிறார்.

29. விளக்குப் பூச்சிகள் அதிவிரைவாய் எரியும்
விளக்கில் வீழ்ந்து அழிவது போல்
இவ்வுலக மாந்தர் அதிவிரைவாய் நின்
வாய்களில் வீழ்ந்து அழிகிறார்.

30. கனலும் நின் நாவால் நாற்புறத்தும்
உலகங்கள் எல்லாம் தீண்டுகிறாய் நின்
உக்கிர சுடரும் கதிர்கள் வையமனைத்தும்
நிரப்பி சுடுகிறதே விஷ்ணு!

31. நவில்வாய் தயைகூர்ந்து உக்கிர ரூபமான
நீ யாரென நின்னை வணங்குகிறேன்
நீயருள்வாய் ஆதியுனை அறிய விழைகிறேன்
நின் பணியும் யானறிகிலேன்.

32. ஸ்ரீபகவான் சொல்கிறான்: இவ்வகிலம் அழிக்கும்
வலிய காலம் நான் இம்மாந்தர்கள்
மடிய ஏதுவானேன் நீ விட்டாலும்
இருபடைகள் வீரராரும் மிஞ்சார்.

33. எனவே நீ எழுந்திடு புகழெய்து
எதிரிகளை வென்று நல்ராஜ்யம் அனுபவி
இவர்களை நான் முன்பே கொன்றேன்
இப்பணியின் கருவியேநீ ஸவ்யசாசியே.

34. துரோணரை பீஷ்மரை ஜயத்ரதன் கர்ணன்
யுத்த வீரரெல்லாம் நான் கொன்று
விட்டேன் நீ கொல் அஞ்சாதே
போரிடு பகைவரை வென்றிடுவாய்.

35. சஞ்சயன் சொல்கிறான்: கேசவன் சொல்லக்
கேட்ட பார்த்தன் கைகட்டி நடுங்கியே
வணங்கி பயந்தே நமஸ்கரித்து வார்த்தைகள்
வாய் குழற பேசலானான்.

36. அர்ஜுனன் சொல்கிறான்: ருஷுகேசா நின்
கீர்த்தியில் அகிலமும் மகிழ்ந்து பரவசமானது
ராட்சதர் அச்சத்தில் நாற்புறமோடி ஒளிகிறார்
சித்தரெல்லாம் நின்னை வணங்குகிறார்.

37. ஏனுனை வணங்கார் மகாத்மாவே நீயே
படைக்கும் பிரம்மனிலும் சிறந்தோன் அந்தமிலா
தேவேசா வையத்தின் உறைவிடமே அழிவற்றவா
காரண காரியம் கடந்தவா.

38. ஆதிதேவன் தொல்புருஷன் நீயே இவ்வகிலத்தின்
பரம நிலையம் நீயே அறிந்தோன்
அறியத் தக்கவன் வையகம் முழுதும்
ஊடுருவிய அநந்த ரூபன்.

39. வாயு யமன் அக்கினி வருணன்
சந்திரன் முப்பாட்டன் பிரம்மன் நீயே
ஆயிரம் நமஸ்காரங்கள் மீட்டும் மீட்டும்
உனக்கு “நமோ நம!”

40. கும்பிடுகிறேன் நின் முன்புறத்தே பின்புறத்தே
கும்பிடுகிறேன் நினை எங்கணும் எல்லாமானவனே
அநந்த சக்தியே அளவிலா வலியோனே
சர்வத்தில் நிலைக்கும் சர்வேசா!

41. நண்பனென நினைத்தே ஏ கிருஷ்ணா
ஏ யாதவா ஏ நண்பா
என நின் மகிமையறியாது அலட்சியமாயோ
அன்பாலோ நான் சொல்லியதையும்;

42. ஓய்வில் படுத்திருக்கயிலும் அமர்ந்தும் உண்ணும்
வேளையிலும் தனிமையிலும் கூட்டத்திலும் அச்சுதா
விளையாட்டாய் செய்த அவமதிப்பை பொறுத்து
என்னை மன்னிப்பாய் நிகரற்றோனே.

43. அண்ட சராசரங்களது பிதா நீயே
வழிபடத் தக்கவன் குருவானவன் நின்
வண்மைக்கு நிகரேது மேலோரேது நின்னிலும்
மூவுலகின் ஒப்பற்ற பெருந்தகையே!

44. எனவே தலைவணங்கி நின்னருள் யாசிக்கிறேன்
ஈசா வேண்டற்குரியாய் தந்தை மகனையும்
தோழன் தோழனையும் காதலன் காதலியையும்
பொறுத்தல் போல் எனைக்கொள்.

45. முன் காணாததை கண்டு மகிழ்ந்தேன்
என் மனமேனோ அச்சமடைந்தது தேவா
நின் முன் வடிவைக் காட்டி
அருள்வாய் தேவேசா ஜகநிவாசா!

46. கீரிடம் கதாயுதம் சக்கரம் தரித்தோனாய்
நினைக் காணவே விழைகிறேன் ஆயிரந்
தோளாய் அகில மூர்த்தியே முன்போல்
நாற்றோள் வடிவினை எய்துக.

47. ஸ்ரீபகவான் சொல்கிறான்: எனது யோக
மகிமையால் இப்பரவடிவம் அர்ஜுனா நீகாண
அருளினேன் ஒளிமயமான ஆதியான அளவில்லா
இவ்வடிவை உனையன்றி கண்டவரில்லை.

48. வேள்வியாலும் வேதங்கள் கற்றும் தானம்
கிரியை தவங்களாலும் எனது இவ்வடிவை
இவ்வுலகில் உனையன்றி எவரும் காணார்
குருகுலத்தில் சிறந்த வீரா!

49. இக்கோர வடிவில் எனைக் கண்டு
கலங்காதே மயங்காதே அச்சம் விடுத்து
மனமகிழ மீண்டும் நீ எனது
முன்னைய வடிவைப் பார்!

50. சஞ்சயன் சொல்கிறான்: அர்ஜுனனிடம் இவையுரைத்த
வாசுதேவன் மீண்டும் தன்னியல் வடிவினைக்
காட்டி அச்சமுற்றோனை தனினிய வடிவில்
அம்மகாத்மா மீண்டும் ஊக்குவித்தான்.

51. அர்ஜுனன் சொல்கிறான்: உன்னை அழகான
இம்மானுட வடிவில் கண்டு ஜனார்த்தனா
இப்போது யான் அமைதியும் உணர்வும்
பெற்று இயற்கை நிலையெய்தினேன்.

52. ஸ்ரீபகவான் சொல்கிறான்: காணக் கிடைக்காத
என் பரவடிவை இங்கு நீ
கண்டாய் தேவர்களும் இவ்வடிவைக் காண
எப்போதும் விரும்பி நிற்கிறார்.

53. வேதம் அறிவதாலும் ஆகாது கடும்
தவத்தாலும் ஆகாது தானத்தாலும் ஆகாது
வேள்வியாலும் ஆகாது நீ கண்டபடி
எனது வடிவைக் காண.

54. ஆயினும் பலனும் வெற்றறிவு நாடாது
ஆன்ம பக்தியால் இங்ஙனம் எனை
அர்ஜுனா அறிந்து உள்ளபடி கண்டு
என்னுட் புகலாம் பரந்தபா!

55. என்பால் பணி செய்வான் எனையே
பரமனாய் கொண்டோன் எனக்கே அடியான்
பற்றிலான் எவரிடமும் பகையிலான் அவன்
என்னை எய்திடுவான் பாண்டவா!

விசுவ ரூப தரிசன யோகம் (அடிமுடி உணர் நிலை) எனும் பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்லோகம் 11:32ல் கடைசியில் "**நீ விட்டாலும்** இருபடைகள் வீரராரும் மிஞ்சார்" என எழுதினேன். பாரதியும், இன்னும் சிலரும் "உன்னைத் தவிர" என சொல்கிறார்கள்.

ஸ்லோகம் 11:33ல் ஸவ்யசாசி எனும் சொல்லுக்கு பாரதி "**இடக்கை** வீரனே" என்பார். எனிலும் இச்சொல்லுக்கு "இருகை" (ambidextrous) என்ற பொருளும் சொல்லப்படுகிறது. நான் ஸவ்யசாசி என்றே எழுதியுள்ளேன் - இது நான் உபயோகிக்கும் அடவுக்கும் பொருந்தியது. இதே போல் அடவுக்காக ஸ்லோகம் 11:45ல் ஜகநிவாசா என்றே எழுதினேன். இதன் பொருள் அகிலத்தின் நிலையம்.

ஸ்லோகம் 11:34ல் "நீ கொல்" என்பது "நீ வெளிப்படையாக மட்டும் செய்கிறாய். ஏனெனில் அவர்கள் ஏற்கனவே கொல்லப்பட்டார்கள்" என்பது உள் அர்த்தம்.

12. பக்தி யோகம் (சரணடைந்த நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: இங்ஙனம் உனை
எப்போதும் பக்தியில் வழிபடுவோரா அல்லது
புலனறியா அவ்யக்தம் தேடுவோரா எவரிதில்
யோக ஞானத்தில் மேம்பட்டார்?

2. ஸ்ரீபகவான் சொல்கிறான்: மனம் என்னில்
நிற்க நித்திய யோகத்தில் நம்பிக்கையோடு
எனை வழிபடுவோரே யோகத்தில் சிறந்தோர்
என நான் கருதுகிறேன்.

3. புலனறியா வரையறுக்க இயலா அவ்யக்தமாய்
அழிவற்றதாய் எங்கும் நிறைந்து கருதற்கு
அரிதாய் மாறாது அசையாது திடமானதாய்
உள்ளதை யாவர் வழிபடுகிறாரோ,

4. புலன்களை அடக்கி எதிலும் சம
புத்தியுடனும் எல்லா உயிர்களின் நன்மை
விரும்பி தொழிற்பட்டு இருக்கும் அவர்களும்
நிச்சயமாக என்னையே அடைகிறார்.

5. அவ்யக்தம் நாடுவோர் மனதிற்கோ தொல்லைகள்
அதிகம் அவ்யக்த நெறி எய்தும்
முயற்சியில் மானுட உடல் கொண்டார்
முன்னேறுதல் மிகவும் கடினம்.

6. யாவர் எல்லா பணிகளும் எனதென
துறந்து அர்ப்பணித்து எனையே பரமாகக்
கொண்டு ஒருமை மனதாய் யோகத்தில்
எனை நினைந்து வழிபடுவரோ;

7. அன்னார் என்பால் புத்தியை புகுத்தியிருக்க
மரணிக்கும் சம்சாரக் கடலைக் கடக்க
காலத்தில் நான் அவர்களின் இரட்சகனாய்
தூக்கி விடுவேன் பார்த்தா.

8. மனதை என்பால் உறுதியாக நிறுத்து
மதியை என்னுட் தெளிவாய் புகுத்து
இதன் பின் நீ நிச்சயமாய்
என்னுள் உறைவாய் ஐயமில்லை.

9. ஆனால் உன் மனதை உறுதியாய்
உன்னால் என்பால் நிறுத்திட இயலாது
எனில் பழகி பழக்கமாக்கி என்னை
அடைய விரும்பிடு தனஞ்சயா.

10. பழகும் வழக்கமும் இயலாதாயின் நின்
பணிகளை எனக்கே அர்ப்பணமென செய்
பணிகளை என் பொருட்டு செய்ய
நீயும் சித்தி பெறுவாய்.

11. உனக்கு இதுவும் செய்ய இயலாதாயின்
பக்தியை வழியாய் கொண்டு என்னிடம்
லயித்து மனதை அடக்கி செயல்களின்
பலன்கள் எல்லாம் துறந்திடு.

12. ஞானம் பழக்கத்தினிலும் சிறந்தது தியானம்
ஞானத்தினிலும் மிகச் சிறந்தது தியானத்தினிலும்
கர்ம பலன் துறத்தலே மேல்
இத்துறவால் சாந்தி அடைவாய்.

13. உயிர்களிடத்தே வெறுப்பின்றி நட்பும் தயையும்
உடையோனாய் தனதென்றும் தானென்றும் நினையாது
இன்பம் துன்பம் எதுவாகிலும் நிகரெனக்
கொண்டு பொறுமை உடையவனாய்;

14. எப்போதும் திருப்தியும் தன்னைக் கட்டியும்
திடசித்தம் கொண்டு மனதையும் புத்தியையும்
என்னிடம் அர்ப்பணஞ் செய்யும் என்
தொண்டன் எனக்கு இனியவன்.

15. எவனால் உலகத்தார் கிலேசம் கொள்ளாரோ
எவனை உலகத்தார் வெறுத்திடாரோ களி
பயம் துக்கம் சஞ்சலம் இல்லாதவனான
அவன் எனக்கு இனியவன்.

16. நடுநிலையாய் தூயோனாய் திறனுடையனாய் பற்றுகள்
விடுத்தவனாய் கவலைகள் களைந்தோனாய் எல்லா
ஆடம்மபரங்களை துறந்தோனாய் என்னிடம் பக்தி
உடையவன் எனக்கு இனியவன்.

17. எவன் களித்தலும் துயரும் இரங்கலும்
அவாவும் இல்லாது நன்மை தீமை
துறந்து பக்தியில் திளைத்து இருப்பானோ
அவன் எனக்கு இனியவன்.

18. பகைவனை நண்பனை சமமாகவும் அதேபோல்
மானத்திலும் அவமானத்திலும் குளிர் வெப்பம்
இன்பத்திலும் துன்பத்திலும் சம நோக்குடன்
எல்லாப் பற்றுகளையும் அறுத்தவன்;

19. இகழ் புகழ் நிகரெனக் கொண்டு
அமைதியும் எவற்றிலும் நிறைவு முடையோனாய்
பிடிப்பற்றவனாய் புத்தியில் உறுதியாய் பக்தி
செய்வோன் எனக்கு இனியவன்.

20. இறைமையான இத்தர்ம அமிர்த நெறிகளை
யான் சொல்லியபடி நம்பிக்கையோடு வழிபட்டு
எனையே முதலாகக் கொண்ட பக்தர்கள்
எனக்கு மிகவும் இனியவர்.

பக்தி யோகம் (சரணடைந்த நிலை) எனும் பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

இங்கு முதல் ஸ்லோகம் 12:1 முந்தைய அத்தியாயத்தின் கடைசி ஸ்லோகத்தை 11:54 தொடர்ந்து வருகிறது.

இவ்வத்தியாயமே மற்றவகளைக் காட்டிலும் மிகச் சிறியது. இருபது ஸ்லோகங்களில் பக்தி நெறிமுறைகள் விளக்கப்பட்டன. இதன் பெருமைகளோ ஒன்பதாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டது. பத்தாம் அத்தியாயமோ பக்திக்கு பாத்திரமான பகவான் மேன்மைகளை தெளிவாக்கி மனம் தயார் செய்யப்பட்டதால் நெறிகளை மட்டுமே இவ்வத்தியாயம் கூறுகிறது.

13. க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

(இடம் இடம் உறைவோன் தொடர்பறியும் நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: இயற்கை அதில்
ஊடுருவிய ஆத்மன் இடம் இடத்தில்
உறைவோன் ஞானம் ஞானமறியும் பொருள்
இவற்றை அறிய விரும்புகிறேன்.

2. ஸ்ரீபகவான் சொல்கிறான்: குந்தி மகனே
இவ்வுடல் க்ஷேத்ரம் என்று சொல்லப்படும்
இதை அறிந்து நிற்போன் க்ஷேத்ரக்ஞனென
இவையறிந்த ஞானிகள் சொல்வர்.

3. க்ஷேத்ரங்களில் எல்லாம் ஊடுருவிய நானே
க்ஷேத்ரக்ஞன் என்றுணர் பாரதா க்ஷேத்ரம்
க்ஷேத்ரக்ஞன் யாதென அறியும் ஞானமே
ஞானமென்பது எனது கருத்து.

4. அச்க்ஷேத்ரம் யாது எத்தகையது எங்ஙனம்
மாறும் எதிலிருந்து வந்தது அறிவோன்
யார் அவன் தாக்கங்கள் யாதென
சுருங்கச் சொல்கிறேன் கேள்!

5. பல வகையாய் பல்வித சந்தங்களில் பாடியும்
பிரம்ம சூத்திர பதங்களில் உவமானங்கள்
காரண காரியம் காட்டியும் இதைப்
பற்றி ரிஷிகள் இசைத்துள்ளார்.

6. பெரும் பூதங்கள் ஐந்தும் அகங்காரம்
புத்தி அவ்யக்த பிரகிருதி புலன்கள்
பத்தும் மனம் சேர்ந்து பதினொன்றாய்
புலன் நிலங்கள் ஐந்தும்;

7. வேட்கை வெறுப்பு இன்பம் துன்பம்
உடல் உணர்வு உள்ள உறுதி
இவை க்ஷேத்ரம் அதன் இயக்கத்தின்
உதாரணமாக சுருக்கிக் காட்டினேன்.

8. பணிவு பகட்டின்மை பிறர்க்கு துன்பம்
இழையாமை பொறுமை நேர்மை ஆசாரியன்
வழிபாடு தூய்மை மன உறுதி
மனம் புலன் அடக்குதல்;

9. இந்திரிய விஷயத்தில் துறவு அகங்காரம்
இன்மை மற்றும் பிறப்பு இறப்பு
முதுமை நோய் துக்கம் குறை
இவைகளை அங்ஙனமே ஏற்றல்;

10. பற்றின்மை, மகனும் மனைவியும் வீடும்
தனதுடைமை என்று கருதாமை மற்றும்
நித்தம் விரும்பின விரும்பாதன வருமிடத்தே
சித்தம் சமநிலையில் இருத்தல்;

11. கபடம் இல்லா பக்தியில் என்னை
உபாசிக்க தவறாது தனிமை இடங்கள்
நாடுவதுமாக பொது மக்கள் கூட்டங்களில்
கூடுவதில் விருப்பம் இல்லாதும்;

12. ஆத்ம ஞானத்தில் நிலைத்தல் உண்மையை
பற்றிய ஞானத்தில் பொருள் உணர்ந்து
இருத்தல் இவை ஞானம் எனப்படும்
இவற்றினின்று வேறுபட்டது அஞ்ஞானம்.

13. ஞானத்தால் அறியும் ஞேயம் யாதென
சொல்கிறேன் இவ்வமிர்தம் சுவைக்க நீ
அமரத்துவம் அடைவாய் அநாதியான பரப்பிரம்மம்
இல்லாதில்லை இருப்பதுவும் இல்லை.

14. கைகளும் கால்களும் எங்குமாய் கண்களும்
தலைகளும் வாய்களும் எங்குமாய் எங்கும்
செவிகளும் உடையதாய் அது உலகத்தில்
அனைத்தையும் சூழ்ந்து நிற்பது.

15. புலனுணரும் குணங்களின் மூலமது எனிலும்
புலனுணர்வு அற்றது பற்றில்லாதது அனைத்தையும்
பேணுவது நிர்குணமானது எனிலும் எல்லா
குணங்களின் மூலமாய் துய்ப்பது.

16. இது பூதாதிகளின் புறமும் அகமுமாவது
இயக்கம் அற்றும் இயக்கியும் இருப்பது
இதன் நுண்மையால் அறிய இயலாதது
இது தொலைவானது அண்மையுமானது.

17. பிரிவற்றது எனிலும் உயிர்களில் பிரிந்ததாய்
நிற்பது அதுவே பூதங்களை தாங்கி
நிற்பது என்று அறி அவற்றை
தீர்ப்பது பின் பிறப்பிப்பது;

18. ஒளிகளுக்கும் அஃதொளி இருளுக்கும் அப்பால்
என்பதது ஞானம் ஞேயம் அதுவே
ஞானம் கொண்டு எய்துவதும் அதுவே
எல்லார் அகத்திலும் அமர்ந்தது.

19. இப்படி க்ஷேத்ரம் ஞானம் ஞேயம்
என்பன யாதென்று சுருங்கச் சொன்னேன்
என் பக்தன் இதை அறிந்து
எனது தன்மை அடைகிறான்.

20. பிரகிருதி புருஷன் இவைகள் இரண்டும்
அநாதி என்றுணர் மாற்றங்களும் மூவகை
குணங்களும் பிரகிருதி மூலம் பிறப்பன
என்றும் நீ உணர்.

21. காரிய காரணங்கள் ஆக்கும் பொறி
பிரகிருதி என்று சொல்லப்படும் அதேபோல்
சுகம் துக்கம் இவை உணரும் பொறி
புருஷன் என்று சொல்லப்படும்.

22. புருஷன் பிரகிருதியில் சேர பிரகிருதியில்
பிறக்கும் குணங்களில் துய்க்கிறான் இவன்
சேரும் குணங்களின் தன்மையால் பிறப்பன
நல்ல தீய ஜன்மங்களாகிறது.

23. கண் காணிக்கும் மேலோன் இசைவோன்
நடத்துவோன் போகன் மகேஸ்வரன் என
உடலிலுள்ள பரம பருஷன் பலவாறும்
பரமாத்மா என்றும் சொல்லப்படுகிறான்.

24. யாவன் இங்ஙனம் புருஷன் பிரகிருதி
அதன் குணங்கள் எல்லாம் அறிந்தானோ
அவன் எந்நிலை யிலிருந்து இயங்கினாலும்
அவனுக்கு மறு பிறப்பில்லை.

25. ஆத்மனை ஆத்ம தியானத்தால் சிலர்
அறிவர் தத்வார்த்த தர்க்க யோகத்தால்
அறிவர் சிலர் கர்ம யோகத்தால்
அறிவர் வேறு சிலர்.

26. ஆன்மீக அறிவு இல்லாதார் சிலர்
தாம் பிறரிடம் பெற்ற சுருதிகளை
வழிபடினும் அச்சுருதிகள் படி ஒழுகிட
அவர்களும் மரணத்தை வெல்வர்.

27. அசையும் அசையா உயிர்கள் எதுவாயினும்
அவை பிறந்திருக்க பாரதரில் சிறந்தோனே
அது க்ஷேத்ரமும் க்ஷேத்ரக்ஞனும் சேர்ந்ததால்
ஆன பிறப்பு என்றறி.

28. எவன் ஒருவன் பூதங்களில் எல்லாம்
சமமாக நிற்போன் பரமேஸ்வரன் என்றும்
அழிவனவற்றில் அவன் அழியானென காண்பானோ
அவனே காட்சி உடையான்.

29. ஈஸ்வரன் எங்கும் சமமாக நிற்பதைக்
காண்போன் தன் மனதால் தன்
ஆன்ம அறிவை அழித்திடான் அதனால்
அவன் பரகதி அடைகிறான்.

30. எவன் ஒருவன் செயல்கள் எல்லாம்
செய்விப்பது பிரகிருதி என்றும் ஆதலால்
தான் கர்த்தா அல்லயெனக் காண்பானோ
அவனே காட்சி உடையான்.

31. எப்போது ஒருவன் பல வகைப்பட்ட
பூதங்களின் ஆதாரம் ஒன்றே அனைத்தும்
அதனின்றே பரந்ததென அறிந்தானோ அவன்
அப்போது பிரம்மனை எய்துகிறான்.

32. ஆதியில்லா குணங்களுக் கெல்லாம் அப்பாற்பட்ட
பரமாத்மா அழிவற்றவன் அவன் உடலில்
இருந்த போதும் குந்தி மகனே
செயலற்றவன் தளைப் படாதவன்.

33. எங்கும் பரந்த வான்வெளி தன்
நுண்மையால் எவற்றுடனும் கலப்பது இல்லையோ
அதுபோல் தேகத்தில் ஆத்மா எங்கணும்
இருந்தாலும் கலப்பது இல்லை.

34. ஆதவன் ஒருவனாய் இவ்வுலகம் முழுதினை
எங்ஙனம் ஒளியுறச் செய்கிறானோ அங்ஙனம்
க்ஷேத்ரம் உடையோன் க்ஷேத்ரம் முழுதினை
ஒளியுறச் செய்கிறான் பாரதா.

35. தம் ஞானக் கண்ணால் க்ஷேத்ரம்
க்ஷேத்ரக்ஞன் இவற்றின் வேற்றுமை அறிந்தோர்
பூத பிரகிருதி யினின்று விடுதலைப்
பெற்று பரம்பொருளை அடைகிறார்.

க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞ விபாக யோகம் (இடம் இடம் உறைவோன் தொடர்பறியும் நிலை) எனும் பதிமூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்லோகம் 13:1ல்
இயற்கை: பிரகிருதி
ஆத்மன்: புருஷன்
இடம் (உடல்): க்ஷேத்ரம்
இடத்தில் (உடலில்) உறைவோன்: க்ஷேத்ரக்ஞன்
ஞானமறியும் பொருள்: ஞேயம்

ஸ்லோகம் 13:14 விஸ்வரூப காட்சி.

14. குணத்ரய விபாக யோகம் (முக்குணங்களின் தொடர்பறிந்த நிலை)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: ஞானத்தில் மேலான
பரம ஞானத்தை மீண்டும் உனக்கு
சொல்கிறேன் இவ்வுலகில் இதை அறிந்த
முனிகள் ஈடேற்றம் பெற்றிருக்கிறார்.

2. இம்மேலான ஞானமே தஞ்சமென அடைந்து
அதனால் என்னியல்பு எய்தியோர் படைப்புக்
காலத்தில் அவர் பிறவார் ஊழீக்
காலத்திலோ அவர் அழியார்.

3. எனது சூற்பை மூல பிரகிருதியான
மகா பிரம்மன் அதில் நான்
கருத்தரிக்க உயிர்கள் எல்லாம் அதிலிருந்து
பிறக்க ஏதுவாகிறேன் பாரதா!

4. எல்லாக் கருக்களிலும் குந்தி மகனே
பிறக்கும் வடிவங்கள் அனைத்திற்கும் மகா
பிரம்மனே ஆதார மூலம் நான்
விதை தரும் பிதா.

5. சத்வம் ரஜஸ் தமஸ் எனும்
இம்மூன்று குணங்கள் பிரகிருதியில் தோன்றுவன
இவையால் பெரும் வில்லாளனே உடலில்
அழிவற்ற ஆத்மா பிணிபடுகிறது.

6. ஆங்கே மாசற்ற தன்மையான சத்வம்
ஒளி பொருந்தியது பாவத்தில் தள்ளாது
இன்பத்தை நாடி ஞானத்தை நாடி
அது கட்டுகிறது பாவமற்றோய்!

7. ரஜஸ் விருப்பம் சார்ந்தது என்றறி
ஏக்கத்தின் சேர்க்கையில் பிறக்கும் இது
குந்தி மகனே ஆத்மாவை தொழிற்
சேர்க்கைக் கொண்டு கட்டுகிறது.

8. அஞ்ஞானத்தில் பிறப்பது தமஸ் என்றுணர்
அதுவே ஜீவன்கள் மயங்க ஏதுவாகும்
அலட்சியம் சோம்பர் உறக்கம் இவையால்
ஆத்மாவைக் கட்டுகிறது பாரதா!

9. சத்வம் இன்பத்தை நாடத் தூண்டும்
ரஜஸ் பாரதா செயலாற்றத் தூண்டும்
ஞானத்தை மூடிய தமஸ் அலட்சியப்
போக்கைத் தூண்டுமெனக் கூறப்படும்.

10. ரஜஸ் தமஸ் அடங்க சத்வமோங்கும்
பாரதா சமயங்களில் ரஜஸும் சத்வம்
தமஸ் இவைகளை மிஞ்சும் தமஸும்
சத்வத்தை ரஜஸை மிஞ்சிடும்.

11. இவ்வுடல் வாயில்கள் அனைத்தும் ஞான
ஒளி பொருந்தித் துலங்கும் எனில்
அப்போது அங்கு சத்வ குணம்
ஓங்கி நிற்பதாகக் கூறப்படும்.

12. அவா செயலில் நாட்டம் முனைவு
அடங்கா தன்மை விருப்பம் இவை
அதிகமாக அப்போது ரஜோ குணம்
ஓங்கியதாம் பாரதர் காளையே!

13. பொலிவின்மை மந்தம் மற்றும் அலட்சியம்
மயக்கம் எல்லாம் தமோ குணம்
ஓங்க நிச்சயமாக பிறப்பு எய்துகிறது
குரு குலத் தோன்றலே!

14. சத்வ குணம் ஓங்கி நிற்கையிலே
சரீரி சாகக் கடவாயின் அப்போது
அவன் மாசற்ற உத்தம ஞானிகளின்
உலகங்கள் அடையப் பெறுகிறான்.

15. ரஜோ குணம் ஓங்கியபோது இறப்போன்
கர்ம பற்று கொண்டாரிடை பிறப்பான்
தமோ குணம் ஓங்கியபோது இறப்போன்
மூட கர்ப்பங்களில் பிறக்கிறான்.

16. நற்செயல்கள் சத்வ குணத்தால் தூய்மை
பெறும் ரஜோ குணம் விளைவிப்பதோ
துயரம் தமோ குணத்தால் மதி
மயங்க அஞ்ஞானமே சூழும்.

17. சத்வ குணத்தால் ஞானம் வளர்கிறது
ரஜோ குணத்தால் அவா நிச்சயமாகவும்
தமோ குணத்தால் அலட்சியம் மயக்கம்
அஞ்ஞானம் வளர்ந்து தோன்றுகிறது.

18. மென்மேல் உயர்வர் சத்வ குணம்
கொண்டார் இடையில் உழல்வர் ரஜோ
குணத்தார் இழிய குணமும் செயலுமுடைய
தமஸரோ கீழே வீழ்வர்.

19. குணங்கள் அன்றி காரண கர்த்தா
வேறில்லை எனக் கண்டு குணங்களினும்
மேலானதை சரியாக அறிவோன் என்
இயல்பறிந்த நிலை எய்துகிறான்.

20. சரீர சம்பந்த முக்குணங்கள் கடந்த
சரீரி பிறப்பு இறப்பு மூப்பு
துன்பம் இவற்றினின்று விடுபட்டு அமிர்த
நிலைத் துய்க்கப் பெறுகிறான்.

21. அர்ஜுனன் சொல்கிறான்: முக்குணங்கள் கடந்தோன்
எங்ஙனம் இருப்பான் இறைவா அவன்
எங்ஙனம் நடப்பான் இம்மூன்று குணங்களை
எங்ஙனம் அவன் கடக்கிறான்?

22. ஸ்ரீபகவான் சொல்கிறான்: வெளிச்சம் தொழில்
மயக்கம் இவை உருபெற அவற்றை
வெறுத்திடான் பாண்டவா அவை
உருபெறாவிடின் அவற்றை விரும்பான்.

23. புறக்கணித்தான் போலிருப்பான் குணங்களால் மனக்
கிலேசம் கொள்ளான் எல்லாம் குணங்களின்
நாடகம் என்றே எண்ணி எப்போதும்
அவன் மன அமைதியோடும்;

24. இன்பதுன்பங்கள் நிகரெனக் கொள்வான் மண்
கல் பொன் சமமெனவும் இனியாரிடம்
இன்னாரிடம் சமமாக நிற்கும் தீரன்
இகழ் புகழ் நிகரெனவும்;

25. மானம் அவமானம் ஒன்றெனக் கொண்டும்
நண்பன் பகைவன் என்ற பேதமின்றி
முனைதல் துறந்தவன் எவனோ அவனே
குணங்களை கடந்தவனெனக் கூறப்படும்.

26. சஞ்சலமில்லா பக்தி யோகத்தில் என்னைத்
தவறாது வழிபடுவோன் குணங்கள் எல்லாம்
கடக்கப் பெற்று பிரம்மத் தன்மை
பெறும் பேறு அடைகிறான்.

27. அழிவும் மாற்றமும் இல்லா பிரம்மத்தின்
நிலைக்களன் நானே மற்றும் என்றும்
இயலும் அறம் மேலான இன்பம்
இவற்றின் இடமும் நானே.

குணத்ரய விபாக யோகம் (முக்குணங்களின் தொடர்பறிந்த நிலை) எனும் பதிநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

இவ்வத்தியாயத்தில் மூன்று குணங்கள் அவற்றின் இயல்பு பற்றி பகவான் விவரிக்கிறார். குணங்களை கடந்தோன் இயல்பை விளக்கி குணங்களைக் கடக்கும் வழியையும் (ஸ்லோகம்14:26) கூறுகிறார்.

15. புருஷோத்தம யோகம்

(உத்தம புருஷனறிந்த நிலை)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: நிரந்தரமான அரச
மரமொன்று வேர்கள் மேலுமாய் கிளைகள்
கீழுமாய் உளதென்பர் வேதங்களதன் இலைகளாம்
அதை அறிவோனே வேதமறிவோன்.

2. கீழும் மேலுமாய் குணங்களால் படரும்
கிளைகளோடும் புலன் விஷயங்கள் தளிராக
கீழ் நோக்கிப் பரவும் வேர்களுடனிது
கர்மத் தொடுப்பாம் இந்நரலோகத்தில்.

3. இவ்வுலகில் இதன் வடிவங் காணப்படா
முடிவும் ஆதி நிலைக்களன் தெரியா
வேறூன்றிய இவ்வரச மரத்தை பற்றின்மை
எனும் படைக்கலத்தால் சாய்த்து;

4. அதன்பின் புகுந்தோர் மீளா நிலை
ஒருவன் நாடிட எவனிடத்தே ஆதி
சக்தி ஊற்றெடுத்ததோ அந்த ஆதி
புருஷனிடத்தே சரண் புகலாம்.

5. செருக்கும் மயக்கமும் இல்லாது கூட்டின்
குற்றங்கள் வென்று நித்திய ஆத்மானுபவனாய்
இச்சைகளின்றி சுகதுக்கமெனும் இருமைகளற்று தடுமாறாது
இருப்போர் பரம பதமடைவர்.

6. எதனில் சூரியன் சந்திரன் தீ
இதனின் ஒளி படாதோ எதனை
எய்தியோர் மீண்டும் பிறவாரோ அதுவே
என் பரம பதம்.

7. என்றுமுள எனது அம்சத்தில் ஒருதுளி
தளைப்பட்ட ஜீவலோக ஜீவனாக பிரகிருதியில்
தோன்றும் மனதோடு சேர்த்து ஆறு
புலன்களை கவர்ந்து கொள்கிறது.

8. சரீரம் எய்துங் காலத்தும் விடுங்காலத்தும்
ஈஸ்வரன் காற்று தான் தொட்டதன்
கந்தம் தோய்த்து செல்வது போல்
புலன்களைப் பற்றிச் செல்கிறான்.

9. கேட்டும் கண்டும் தொட்டும் அதோடு
சுவைத்தும் முகர்ந்தும் மேலும் மனதில்
அமர்ந்தும் ஜீவன் இந்த இந்திரீய
விஷயங்களைப் பற்றி அனுபவிக்கிறான்.

10. விட்டுச் செல்கையிலும் இருந்து மகிழ்கையிலும்
அல்லது குணங்களில் ஒன்றி இருக்கையிலும்
அவனை மூட மாந்தர் காணார்
ஞானக் கண்ணுடையோர் காண்பர்.

11. முயன்று தேர்ந்த யோகிகள் இவனைத்
தம்முள் உறையும் ஆத்மனாகக் காண்பர்
முயன்றும் தம்மைத் தாம் உணரா
அஞ்ஞானிகள் இவனைக் காண்கிலார்.

12. ஆதவன் சுடருள் அகிலம் முழுதினையும்
ஒளிரச் செய்யும் பிரகாசம் சந்திரனிடத்து
உளதும் நெருப்பினுள் உளதும் எல்லாம்
என்னுடைய ஒளி என்றுணர்.

13. நான் பூமியுட் புகுந்து உயிர்களை
என் சக்தியால் பேணுகிறேன் அதோடு
சோம ரசமாய் காய் கனிகள்
வளரச் செய்யும் ஊட்டமாகிறேன்.

14. நானே வைசுவநரனாய் உயிர்களின் உடலில்
தகிப்பவன் பிராணன் அபானன் எனும்
வாயுக்களை இயக்குவோன் நால்வகை
உணவை நானே ஜீரணமாக்குகிறேன்.

15. உயிர்களின் அகமுறைவோன் யான் ஞாபகம்
ஞானம் இதனிழப்பு என்னிடத்தே பிறப்பன
வேதங்களின் உட்பொருள் யான் வேதாந்தம்
ஆக்கியோன் வேதமுணர்ந்தோன் யானே.

16. இருவகை தன்மை புருஷருளர் இவ்வுலகில்
அழியும் அழியா தன்மைகளுடையோர் என
அனைத்து உயிரினமும் அழியும் தன்மையன
தெய்வீகமே அழியா தன்மையுடைது.

17. தனித்துவமான உத்தம புருஷனோ இன்னொருவன்
அவனே பரமாத்மா எனக் கூறப்படுவான்
அவன் மூவகை உலகங்களிலும் புகுந்து
தரிக்கும் அழிவற்ற ஈஸ்வரன்.

18. அழிவைக் கடந்தவன் நான் என்பதாலும்
அழியாப் புருஷனைக் காட்டிலும் சிறந்தோன்
ஆனதால் உலகிலும் வேதங்களிலும் நான்
புருஷோத்தமன் என புகழப்படுகிறேன்.

19. எவன் சந்தேகம் விடுத்து யானே
புருஷோத்தமன் என்பதை அறிவானோ அவனே
எல்லாம் அறிந்தோன் அவன் என்னை
முழுதாக வழிபடுகிறான் பாரதா!

20. இங்ஙனம் மிக இரகசிய சாஸ்திரத்தை
உன்னிடம் பகிர்ந்தேன் பாவமற்றவனே இதனை
உணர்ந்தோன் புத்திமான் அவனே பூரண
செயல் புரிந்தான் பாரதா!

புருஷோத்தம யோகம் (உத்தம புருஷனறிந்த நிலை) எனும் பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்லோகம் 15:1 அரச மரத்தின் தலைகீழான வடிவத்தைக் கூறுகிறது. நரலோகத்தில் காணும் வடிவம் நீர் நிலையருகில் மரம் தலைகீழாகத் தெரிவது போல் மேற்கூறியதன் பிம்பத்தை காண்பதாக பொருள் சொல்வர். உண்மை அறிய காண்பதை தலைகீழாகப் புரட்டி பார்த்து உணர்தல் வேண்டும் எனவும் ஒரு பொருள் கூறலாம்.

ஸ்லோகம் 15:14 வைசுவநரன் என்பது கடவுளின் பெயர். ரிக் வேதம் முதல் இப்பெயரில் பல்வேறாக அர்த்தம் கொள்ளப்படுகிறான். அதில் உயிர்களின் உடலில் (வயிற்றில்) உஷ்ணமாக இருப்பவன் என்பதும் ஒன்று. இங்கு நால்வகை உணவு காய், கனி, தானியம், பால் என்பதாம்.

ஸ்லோகம் 15:15 இதில் சொல்லியிருப்பதை அறிந்தோன் வேதங்கள் கற்றோனாவான்.

ஸ்லோகம் 15:16 க்ஷர, அக்ஷர என்பதே அழியும், அழியா தன்மைகள். கூடஸ்தா என்பதற்கு சிகரத்திலுள்ளோன், மாறுதலற்றோன் என்று சொல்வர். பரமனின் சக்தி என்றும் கூறப்படும். இப்பொருள் தழுவி தெய்வீகம் என எழுதினேன்.

ஸ்லோகம் 15:17 மூவகை உலகங்கள்; விழிப்பு, சொப்பன, ஆழ்ந்த உறக்க நிலைகளாம்.

ஸ்லோகம் 15:19-20 இவை இரண்டும் கீதையின் சாரம்.

16. தெய்வாசுர சம்பத் விபாக யோகம்

(தெய்வ அசுர தன்மை-இயல்பு தொடர்பறிந்த நிலை)

1. ஸ்ரீபகவான் சொல்கிறான்: அஞ்சாமை தூய
வாழ்க்கை ஞான யோகத்தில் உறுதி
ஈகை தன்னடக்கம் வேள்வி வேதங்
கற்றல் தவம் எளிமை;

2. அகிம்சை வாய்மை சினம் கொள்ளாமை
தியாகம் சாந்தி குற்றம் காணா பெருந்
தன்மை ஜீவ காருண்யம் அவாவின்மை
மென்மை நாணுடைமை உறுதி;

3. ஒளி பொறை துணிவு சுத்தம்
துரோகம் செய்யாமை கர்வம் கொள்ளாமை
இவைகளை தெய்வத் தன்மை எய்தியவன்
இயல்பில் காணலாம் பார்த்தா!

4. படாடோபம் இறுமாப்பு அகந்தை மேலும்
கோபம் கடுமை இவைகளோடு அஞ்ஞானம்
சேர்ந்த இயல்புகள் பார்த்தா அசுரத்
தன்மை எய்தியவனிடம் காணலாம்.

5. தேவ சம்பத்து விடுதலையின் வழியாகவும்
அசுர சம்பத்து பந்தத்தில் பிணைப்பதாயும்
கருதப்படும் துயரப்படாதே நீ தேவ
சம்பத்து எய்திவிட்டாய் பாண்டவா!

6. இருவகை உயிர்படைப்பு இவ்வுலகில் தேவ
அசுர இயலுடையவை அதில் தேவ
இயலுடையதை விரித்துரைத்தேன் பார்த்தா அசுர
இயலுடையதை சொல்கிறேன் கேள்.

7. எதனைச் செய்வது எதனைச் செய்வது
கேடெனஅறியார் அசுரத் தன்மை
கொண்டார் தூய்மை இல்லார் ஒழுக்கமோ
வாய்மையோ அவர்களிடம் காணப்படா.

8. இவ்வகிலம் பொய் நிலையற்றது ஈஸ்வரன்
இல்லாதது இது காரணமின்றி பிறந்தது
இதற்கு வெறும் காமமே ஏதுவாகும்
இதுவன்றி வேறேது என்பரிவர்.

9. இத்தகைய நோக்கினை ஏற்று தன்னிலை
குலைந்த அற்ப மதியுடையோர் உலகிற்கு
தீங்கு சூழ்வோராய் அதன் நாசத்திற்கு
கொடிய செயல்கள் ஆற்றுவர்.

10. தணியா காமத்தில் ஊறியும் பகட்டு
கர்வம் அகந்தை கொண்டு நிரந்தரம்
அற்றதை மயங்கி ஏற்று அசுத்த
வழக்கங்கள் உடையோர் ஆவார்கள்.

11. சாகும்வரை பயம் கவலைகளில் உழன்று
சுகபோகம் துய்ப்பதிலே நாட்டமும் வாழ்வில்
சகலமும் இதன் பொருட்டு என்பதே
சத்தியம் என்று சொல்லியும்;

12. ஆசாபாசா வலைகள் நூறில் பிணைபட்டு
காம குரோத சுபாவம் கொண்டோராய்
காம போகம் பொருட்டு அநியாயஞ்
செய்து செல்வங் குவிப்பர்.

13. இன்ன இலாபம் இன்று அடைந்தேன்
இன்னதை எனது இச்சைபடி அடைவேன்
இன்னது என்னுடையது எதிர் காலத்தில்
இன்னது பெருகப் பெறுவேன்.

14. இன்ன பகைவரை நான் கொன்றேன்
இனி மற்றவரைக் கொல்வேன் தலைவன்
நான் போகி நான் சித்தன்
நான் பலவான் சுகவாசி.

15. நான் செல்வந்தன் சொந்தங்கள் உடையோன்
எனக்கு நிகராக யாவருளர் தியாகங்கள்
செய்வேன் கொடுப்பேன் களிப்பேன் என்று
இவர் அஞ்ஞானத்தால் மயங்குவர்.

16. வகைவகை கவலைகளால் மருண்டு மோக
வலையில் அகப்பட்டு காம போகங்களில்
வசப்பட்டு இவர்கள் அசுத்த நரகத்தில்
வழுக்கிச் சென்று வீழ்வர்.

17. தற்பெருமை ஆணவம் செல்வச் செருக்கு
மமதை கொண்ட இவர்கள் படாடோபம்
கருதி பெயர் அளவில் வேள்விகளை
விதி தவறிச் செய்வர்.

18. அகங்காரம் அதிகாரம் செருக்கு காமம்
சினம் இவைகளின் வசம் கொண்ட
இவர்கள் தம்முள்ளும் பிறருள்ளும் உறையும்
என்னைப் பொறாமையில் பழிப்பர்.

19. பகைமை குரூரம் நிறைந்தோரும் உலகில்
எல்லாரிலும் கடைப்பட்ட இந்த அசுர
மனிதரை நான் நிரந்தரமாக அசுர
கர்ப்பங்களிலே பிறக்கச் செய்கிறேன்.

20 அசுரக் கருவில் தோன்றி இம்மூடர்
பிறவிபல பிறந்தும் என்னை எய்தாமல்
அதன்பிறகு குந்தி மகனே மிகவும்
கீழான கதியைச் சேர்கிறார்.

21. நரகம் ஆத்ம நாசத்தின் மூவகை
வாசல்கள் காமம் சினம் மற்றும்
அவா ஆதலால் ஒருவன் இந்த
மூன்றையும் விடுதல் வேண்டும்.

22. எவன் இந்த மூவகை இருள்
வாசல்கள் தவிர்த்தானோ குந்தி மகனே
அவன் தனக்கு நலந்தேடிக் கொள்கிறான்
அதனால் பரகதி அடைகிறான்.

23. எவன் ஒருவன் சாஸ்திர விதிகளை
விடுத்து இச்சைகள் உந்தும் வழி
நடப்பானோ அவன் சித்தி பெறான்
இன்பமெய்தான் பரகதி அடையான்.

24. ஆதலால் சாஸ்திர விதிகள் ஆதாரப்படி
செய்வன செய்யத்தாகதன எதுவென நிச்சயித்து
சாஸ்திர விதிகள் அறிந்து அவையுரைக்கும்
கர்மங்களை இவ்வுலகில் செய்க.

தெய்வாசுர சம்பத் விபாக யோகம் (தெய்வ அசுர தன்மை-இயல்பு தொடர்பறிந்த நிலை) எனும் பதினாறாம் அத்தியாயம் முற்றிற்று.

மூவகை குணங்களின் இயல்புகளால் இருவகை மாந்தர்கள் உளர்: தேவத் தன்மையினர், அசுரத் தன்மையினர் என்று. இவர்களின் தன்மை, இயல்புகளை இங்கு பகவான் விரித்துரைக்கிறார். இவர்களில் தேவத் தன்மை பொருந்தியோரே பரம பதம் எய்துகிறார். அசுரத் தன்மையினரோ எத்தனை பிறவி எடுத்தாலும் பரமனைச் சேராது கடைப்பட்ட மனிதரின் இழி நிலையைக் காட்டிலும் கீழான கதியைப் பெருகிறார்கள்.

17. சிரத்தா-த்ரய விபாக யோகம் (மூவகை நம்பிக்கை குண தொடர்பறிந்த நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: சாஸ்திர விதி
மீறி பிற நம்பிக்கையோடு வேள்வி
செய்வோர் கிருஷ்ணா எந்நிலை எய்துவர்
சத்வமா ரஜசா தாமசா?

2. ஸ்ரீபகவான் சொல்கிறான்: ஜீவன்களின் சுய
தன்மைபடி மூவகை நம்பிக்கை தோன்றும்
சாத்விகம் ராஜசம் தாமசம் என
அதைச் சொல்கிறேன் கேள்.

3. தத்தம் உள்ளியல்பு ஒத்த நம்பிக்கையே
உருபெறும் பாரதா மனிதன் நம்பிக்கை
உடையவன் தான் எதை நம்புகிறானோ
அதுவாக அவன் ஆகிறான்.

4. சாத்விகர் தேவர்களை வணங்குவர் ரஜோ
குணம் உடையவர் யக்ஷர் ராக்ஷஸர்களை
வணங்குவர் தமோ குணத்தார் பிரேத
பூத கணங்களை வணங்குவர்.

5. சாஸ்திர விதிகளில் சொல்லாத கோர
தவங்களை சிலர் தம் பெருமை
அகங்காரம் பொருட்டு இச்சை இசைவின்
வலிய உந்தலால் செய்வர்.

6. மதி தவறிய நடத்தையால் இவர்
தம் உடல் உறுப்புகளையும் அகத்தில்
உள்ள என்னையும் வருத்துகிறார் இவர்கள்
அசுரத் தன்மையினர் என்றுணர்.

7. அவரவர் பிரியப்படி உணவு மூன்று
வகையாக உள்ளது வேள்வி தவம்
தானம் இவையும் அங்ஙனமே ஆகும்
இவற்றின் வேற்றுமையை கேள்.

8. உயிர் வளர்க்கும் உரம் கொடுக்கும்
நலம் இன்பம் நிறைவு தருவதுமான
சாறு வெண்ணை நீடிக்கும் உளமுகந்த
உணவுகள் சாத்விகர்க்கு பிரியமானது.

9. கசப்பு புளிப்பு உப்பு சூடானது
உறைப்பு உலர்ந்து எரிந்த உணவுகளை
ரஜசர் விரும்புவர் இவை துன்பம்
துயர் நோய் விளைவிப்பன.

10. பழையது சுவையற்றது அழுகியது ஊசியது
பிறருண்டு எறிந்த மிச்சம் தொடத்தகா
பண்டம் இவைகள் தமோ குணமுடையோர்
பிரியமாக உண்ணும் உணவுகள்.

11. வேண்டுவது பொருட்டு அல்லாது சாஸ்திர
விதிகள் முறையில் செய்ய வேண்டிய
வேள்விகளை ஒன்றிய மனதுடன் செய்வார்
வேள்விகள் சத்வ குணமுடைத்து.

12. வேண்டுவன வேண்டியும் தன் பகட்டு
வெளிப்பட செய்யும் வேள்விகள் எல்லாம்
பாரத திலகமே ரஜோ குணமுடையோர்
செய்யும் வேள்விகள் என்றுணர்.

13. விதி தவறி அமுது படைத்து
பகிராது வேத மந்திரங்கள் குரு
தட்சணை அற்ற நம்பிக்கை இல்லாது
செய்யப்படும் வேள்விகள் தாமசமென்பர்.

14. தேவர்கள் அந்தணர் குரு ஞானிகள்
இவர்களுக்கு பூஜை செய்தல் தூய்மை
எளிமை பிரம்மச்சர்யம் அகிம்சை இவை
உடம்பைப் பற்றிய தவமெனப்படும்.

15 கிளர்ச்சி எழுப்பா வார்த்தைகள் உண்மை
உடையதும் இனிமையும் நன்மை பயக்கும்
சொல்லல் மேலும் கல்விப் பயிற்சி
இவை வாக்கு தவமெனப்படும்.

16. மன சாந்தி பிறரிடம் வஞ்சம் இல்லாமை
மௌனம் தன்னைத் தான் கட்டுதல்
தன் சுபாவத் தூய்மை இவை
எல்லாம் மனத் தவமெனப்படும்.

17. முழு நம்பிக்கை கொண்டு இம்
மூன்று வகையன தவங்களை திட
மனதாய் பலன் கருதா நரர்
செய்வதே சாத்விகம் எனப்படும்.

18. தம் மதிப்பு பெருமை மரியாதை
இவை நாடிச் செய்வதும் ஆடம்பரம்
கருதி செய்யும் தவம் ராஜசமெனப்படும்
அஃது நிலையற்றது உறுதியற்றது.

19. மூடக் கருத்துகளைப் பற்றி தன்னையேத்
தான் துன்பத்தில் வருத்திச் செய்வதும்
பிறர் அழிவை நாடிச் செய்யப்படும்
தவம் தாமசம் எனப்படும்.

20. கொடுப்பதில் உகந்த தானம் எந்த
கைம்மாறும் எதிர்பாராது இடம் காலம்
தக்கப் பாத்திரம் அறிந்து கொடுக்கப்படும்
தானம் இதனை சாத்விகமென்பர்.

21. எது பிரதி உபகாரம் குறித்து
அல்லது பயன் கருதி கொடுப்பதும்
மேலும் மனக் கிலேசத்துடன் கொடுக்கும்
தானம் ராஜசம் என்றுணர்.

22. தகாத இடத்தில் தகாத காலத்தில்
தகாத மனிதர்க்கு கொடுப்பதும் அதோடு
தக்க மதிப்பின்றி இகழ்ந்து கொடுக்கும்
தானம் தாமசம் என்பர்.

23. ஓம் தத் ஸத் எனும்
மும்மை பிரம்மத்தை குறிப்பது என்பர்
பிராமணங்கள் வேதங்கள் வேள்விகள் யாவும்
முன்பு இதனால் வகுக்கப்பட்டன.

24. ஆதலால் ஓம் என்று உச்சரித்து
சாஸ்திர விதி கூறும் வேள்விகள்
தானம் தவக் கிரியைகளை பிரம்ம
யோகிகள் செய்யத் தொடங்குவர்.

25. தத் என்று உச்சரித்து பயன்
கருதாது பல வகையான வேள்விகள்
தவக் கிரியைகள் தானக் கிரியைகள்
மோக்ஷம் விரும்புவோர் செய்வர்.

26. உண்மைத் தன்மையை குறிக்கவும் நற்குண
தன்மையை குறிக்கவும் ஸத் எனும்
சொல் வழங்கப்படும் நற்செயலையும் ஸத்
எனுமொலி குறிக்கும் பார்த்தா!

27. வேள்வி தவம் தானம் இவற்றுள்
உறுதி நிலையும் ஸத் எனப்படும்
தத் என உச்சரித்து செய்யப்படும்
கர்மமும் ஸத் எனப்படும்.

28. அவ நம்பிக்கையில் செய்யும் வேள்வி
தானம் தவம் இவைகள் எல்லாம்
அஸத் எனப்படும் பார்த்தா அவை
மறுமையிலும் இம்மையிலும் பயன்படா.

சிரத்தா-த்ரய விபாக யோகம் (மூவகை நம்பிக்கை குண தொடர்பறிந்த நிலை) எனும் பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

மூவகை குணங்களுக்கு ஏற்ப நம்பிக்கையும் சத்வம், ராஜசம், தாமசம் என மூவகைப்படும். மனிதன் நம்பிக்கை உடையவன் தான் எதை நம்புகிறானோ அதுவாக அவன் ஆகிறான் - ஸ்லோகம் 17:3. உணவு, தவம், தானம் இவையும் இங்ஙனமே. ஓம் தத் ஸத் எனும் மும்மைப் பதம் பிரம்மத்தை குறிப்பதாகும். இவ்வத்தியாயத்தில் பகவான் இவற்றை விளக்குகிறார்.

18. மோக்ஷ சந்நியாச யோகம்

(துறவு விடுதலை எய்திய நிலை)

1. அர்ஜுனன் சொல்கிறான்: பெருந்தோளாய் சந்நியாச
இயல்பின் உண்மை ருஷீகேசா தியாகத்தின்
இயல்பு இவற்றைப் பிரித்துக் கேட்டு
அறிய விழைகிறேன் கேஷிதா.

2. ஸ்ரீபகவான் சொல்கிறான்: விரும்பிச் செய்வதை
துறப்பது சந்நியாசம் என்று தெரிவிப்பர்
பண்டிதர் எல்லா செயல்களிலும் பலன்களை
துறத்தல் தியாகமென்பர் ஞானிகள்.

3. அறிஞரில் ஒரு சாரார் கர்மங்கள்
அனைத்தும் பாவம் விட வேண்டியன
என்பர் மற்றோரரோ வேள்வி தானம்
தவம் இக்கர்மங்கள் விடலாகாதென்பர்.

4. தியாகம் என்பதை உறுதிப்படுத்தி நான்
சொல்லக் கேள் பாரதரில் சிறந்தோனே
தியாகமும் மூன்று வகை என்று
கூறப்படும் புருஷப் புலியே.

5. வேள்வி தானம் தவமெனும் கர்மங்கள்
விடுதல் ஆகாது நிச்சயம் செய்யப்பட
வேண்டும் அறிஞரையும் தூய்மை செய்வது
வேள்வி தானம் தவம்!

6. எனிலும் இச்செயல்களால் பிணைபடாது பயன்
எதிர்பாராது கடமையாகக் கருதி செய்ய
வேண்டும் பார்த்தா உத்தமம் இதுவென்பது
என் உறுதியான கருத்து.

7. நியமங்கள் வகுத்த அவரவர் கடமைகளை
துறப்பது தகாத செயலாகும் மதி
மயக்கத்தில் இதனை துறப்பது தமோ
குணத்தால் நேர்வது என்பர்.

8. மெய் நோகுமென பயந்து ஒரு
செய்கை துன்பமென விடுவோன் தியாகம்
ரஜோ குணத்தினால் ஆவது அதனால்
அவன் தியாகப் பயனடையான்.

9. இச்செயல் செய்தற்கு உரியதென விதித்த
செயல்களை அர்ஜுனா அதில் பிணைபடாது
பயன் துறந்தோனாய் செய்திட அவனது
தியாகம் சாத்விகம் எனப்படும்.

10. அசுப காரியங்களில் ஆயாச மடையான்
சுப காரியங்களில் நசை யுறான்
சத்வ குணத்தில் இசைந்த மேதாவியான
ஐயங்கள் அறுத்தத் தியாகி.

11. பிறப்பு எய்தியபின் செயல்களை முழுதாய்
தியாகம் செய்வது என்பது இயலாதது
எவன் செயலின் பலனைத் துறக்கிறானோ
அவன் தியாகி எனப்படுவான்.

12. வேண்டா வேண்டிய இவை கலந்ததுமான
மூவகை கர்ம பலன்களை நசை
உடையோர் இறந்த பின்னர் எய்துகிறார்
துறந்தார் எப்போதும் பெறார்.

13. காரியங்கள் எல்லாம் முழுமையாய் நிறைவேற
காரணங்கள் ஐந்தென சாங்கிய சாஸ்திரம்
கூறும் பெரும் வில்லாளனே அவற்றை என்னிடம்
கற்றுத் தெரிந்து கொள்.

14. உறைவிடம் செய்வோன் கரண வகைகள்
அவற்றின் வெவ்வேறு வகை செயல்
முறைகள் இவற்றோடு சேர்ந்து இயற்கை
என ஐந்து ஆகும்.

15. மெய் வாக்கு மனம் இதனால்
மனிதன் தொடங்கும் செயல் நியாயம்
விபரீதம் எதுவாயினும் இவ்வைந்தே அந்த
செயல் நடத்தும் ஏதுக்கள்.

16. இவை இப்படி இருக்க ஆத்மாவே
செயல் புரிவோன் என புத்திக்
குறைவால் எவன் காணுகிறானோ அந்த
மூடன் காட்சி அற்றவன்.

17. நான் எனும் அகங்காரம் இல்லாதான்
நசை யறுத்த மதியுடையான் உலகத்தாரை
எல்லாம் அவன் கொன்றாலும் கொலையாளி
ஆகான் தளையும் படான்.

18. ஞானம் ஞேயம் ஞானி என
இம்மூன்றும் கர்மங்களை தூண்டுவன கருவி
செய்கை கர்த்தா என கர்மத்தின் அமைப்பும்
மூன்று பகுதி கொண்டது.

19. ஞானம் கர்மம் மற்றும் கர்த்தா
குண சாஸ்த்திர விதிப்படி இவை
ஒவ்வொன்றும் மூன்று வகைப்படும் அவற்றை
உள்ளபடி சொல்கிறேன் கேள்.

20. பிரிந்து இருக்கும் எல்லா உயிர்களிலும்
பிரியாது அழியாது இருக்கும் இயல்பு
ஒன்றென ஒருவன் காண்பானாயின் அந்த
ஞானம் சாத்விகம் என்றறி.

21. ஒவ்வோர் உயிரும் பிரிந்து தோன்றுவதால்
வெவ்வேறு இயல்புகள் இருப்பதாகத் தோன்ற
செய்யும் ஞானம் ரஜோ குணத்தில்
பிறக்கும் ஞானம் என்றறி.

22. சகலமும் ஒரே காரியத்தில் அடங்குமென
காரணம் இன்றி பற்று கொள்வதும்
உண்மை அறியா அற்ப தன்மையுடைய
ஞானம் தாமசமெனக் கூறப்படும்.

23. விதிகள் வகுத்ததை விருப்பு வெறுப்பு
விடுத்து செய்தும் அதன் பலன்
விரும்பாதான் செய்கை எதுவோ அதுவே
சாத்விகம் என்றுக் கூறப்படும்.

24. கர்ம பலன்கள் நாடியும் அகங்காரம்
கொண்ட ஒருவனால் செய்யப்படும் மிகக்
கடின உழைப்பு உடைய செய்கை
ராஜசம் என்றுக் கூறப்படும்.

25. வரும் விளைவு நாசம் இம்சை
பிறர் துன்பம் கருதாமல் மயக்கத்தால்
தான் தோன்றியாய் தொடங்கும் கர்மம்
தாமசம் என்றுக் கூறப்படும்.

26. நசையறு மனம் உடையோன் நானென்பதை
நீக்கியோன் உறுதி உற்சாகம் தேர்ச்சி
நிரம்ப வெற்றி தோல்வியில் நடைபிரளா
கர்த்தா சாத்விக குணத்தானென்பர்.

27. இச்சைகளில் இசைந்தோன் செய்கை பயன்
இச்சிப்போன் ஆசை அழுக்காறுடையான் அசுத்தன்
இன்ப துன்பங்கள் வசப்படும் இத்தகைய
கர்த்தா ரஜோ குணத்தானென்பர்.

28. நெறி வழுவியோன் பொருள் விழைவோன்
முரடன் கபடதாரி அநாகரிகன் சோம்பேறி
ஏக்கமுடையோன் காலம் கடத்து மித்தகைய
கர்த்தா தமோ குணத்தானென்பர்.

29. புத்தியும் அதன் உறுதியும் குண
வகைகளுக் கேற்ப மூன்றாக வேறுபடும்
அதனைப் பகுத்து விரிவாக விளக்கிச்
சொல்கிறேன் கேள் தனஞ்சயா.

30. செய்வன செய்யக் கூடாதன செய்ய
வேண்டியன அச்சம் அஞ்சாமை பந்தம்
விடுதலை இவற்றை பகுத்தறிந்து உணரும்
புத்தியே சாத்விகம் பார்த்தா!

31. எதன் மூலம் தர்மம் அதர்மம்
செய்ய வேண்டியன செய்யக் கூடாதன
என்பதை உள்ளபடி அறியப்படாதோ அது
ராஜச புத்தி பார்த்தா!

32. அதர்மமே தர்மம் என்று நினைக்கும்
மந்தம் சூழ்ந்த எல்லா பொருள்களையும்
நேருக்கு மாறாகக் காணும் அந்த
புத்தி தாமசம் பார்த்தா!

33. பிரளா உறுதி கொண்டு மனம்
உயிர் புலன்கள் இவற்றின் செயல்கள்
யோகத்தால் தடையின்றி தரிக்க வல்ல
உறுதியே சாத்விகமாவது பார்த்தா!

34. எவ்வுறதி தர்மம் புலன் இன்பம்
செல்வ செழிப்பு இவற்றை தரிக்குமோ
அர்ஜுனா கர்ம பலன்களை விரும்புமோ
அவ்வுறுதி ராஜசம் பார்த்தா!

35. எதனால் கனவுலகு அச்சம் துயரம்
ஏக்கம் ஆணவம் இவற்றில் உழல்வது
ஒழிக்க இயலாதோ அந்த மூட
உறுதி தாமசம் பார்த்தா!

36. இன்பங்களின் மூன்று வகைகளை நான்
இப்போது சொல்கிறேன் கேள் பாரதக்
காளையே இதனைப் பயிலுவோன் துக்கம்
களைந்து இன்பம் எய்துவான்.

37. எது தொடக்கத்தில் விஷம் போலிருந்து
பின் அமிர்தம் போலாகுமோ அவ்வின்பமே
சாத்விகம் எனப்படும் அது தன்னைத்தான்
அறிந்த மதியில் பிறப்பது.

38. புலன்கள் அதன் உணர்வுகள் கலப்பதால்
முதலில் அமுது போலிருந்து முடிவில்
நஞ்சு போன்றதாய் மாறும் இன்பம்
ராஜசம் என்றுக் கருதப்படும்.

39. எந்த இன்பத்தால் ஆரம்பம் முதல்
இறுதி வரைத் தனக்கு மயக்கம்
உறக்கம் சோம்பல் மருட்சி தோன்றுமோ
அதுவே தாமசம் எனப்படும்.

40. எவருமிலர் இப்புவியில் அந்த வானுலகில்
தேவருமிலர் பிரகிருதியில் தோன்றும் இந்த
மூன்று குணங்களின் தன்மைகளின் தாக்கம்
இல்லாது அவற்றினின்று விடுபட்டோர்.

41. பிராம்மணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர்
இவர்களது தொழில்கள் பரந்தபா அவரவர்
இயல்பில் விளையும் குண வகைகளில்
இருந்து வகுக்கப் பெற்றன.

42. அக அமைதி தன்னைத்தான் அடக்குதல்
தவம் தூய்மை பொறுமை நேர்மை
மெய்யறிவு கல்வி ஆத்திகம் இவை
பிராம்மண சுபாவ கர்மங்கள்.

43. சூரத் தன்மை காந்தி உறுதி
திறன் போரில் புறங் காட்டாமை
ஈகை இறைமை இயல்பு இவைகள்
க்ஷத்திரிய சுபாவ கர்மங்கள்.

44. உழவு கால்நடை வளர்ப்பு வணிகம்
இவை வைசிய சுபாவ கர்மங்கள்
தொண்டு புரிதல் சூத்திரனுக்கு ஏற்பட்ட
அவன் சுபாவ கர்மம்.

45. ஒவ்வொருவனும் அவனவன் கர்ம வழி
நடக்க ஈடேற்றம் பெறுகிறான் தனக்குரிய
கர்மங்களில் ஈடுபட்டோன் எங்ஙனம் சித்தி
அடைவானென சொல்கிறேன் கேள்.

46. எதிலிருந்து உயிர்கள் எல்லாம் தோன்றுமோ
எதனால் இவ்வகிலம் முழுதும் நிரம்பப்
பெற்றதோ அந்த பரம்பொருளை தனக்குரிய
கர்மத்தால் பூஜிப்போன் ஈடேறுகிறான்.

47. நன்று தனக்குரிய தர்மத்தை குறைபடச்
செய்திடினும் பிறரின் தர்மத்தை நிறைவாகச்
செய்வதைவிட தனது சுபாவ கர்மத்தைச்
செய்வதால் எவனும் பாவமடையான்.

48. தனக்குரிய கர்மம் குந்தி மகனே
குறையுடையது எனிலும் அதை விடலாகாது
எல்லா முயற்ச்சிகளிலும் தீயைப் புகை
மூடுவதுபோல் குறைகள் சூழ்ந்திருக்கும்.

49. எதிலும் எங்கும் தளைப்படா மதியும்
தன்னை வென்று லௌகீகப் பற்றுகளைத்
தவிர்த்து மிக உயர்ந்த செயலிலா
சித்தியை துறவினால் எய்துவான்.

50. சித்தி அடைந்தவன் எங்ஙனம் பிரம்மத்தில்
கலக்கும் உயர்ந்த ஞான நிலை
எய்துவான் என்பதை குந்தி மகனே
நான் சொல்லப் புரிந்துகொள்.

51. அறிவில் தூய்மை உறுதியால் தன்னை
ஒழுங்குபடுத்தி ஒலி முதலிய புலன்
உணர்வுகளை துறந்து விருப்பு வெறுப்பு
இவைகளை தள்ளி வைத்தும்;

52. தனிமையில் இருந்து உண்டி சுருக்கி
வாக்கு உடல் மனம் அடக்கி
தியான யோகத்தில் நிதம் ஈடுபட்டு
பற்றின்மையில் அடைக்கலம் பூண்டு;

53. அகங்காரம் அதிகாரம் செருக்கு காமம்
சினம் பொருள் கொளல் இவற்றை
விட்டு மமகாரம் நீக்கி சாந்தநிலை
கொண்டவன் பிரம்மமாகத் தக்கவன்.

54. பிரம்மத்தில் கலந்தவன் ஆத்ம ஆனந்தம்
உடையோன் குறைபடான் விருப்பற்றான் எல்லா
உயிர்களும் சமமெனக் காண்போன் எனது
பக்தியில் ஆழ்ந்திடப் பெறுகிறான்.

55. ஆழ்ந்த பக்தியால் ஒருவன் எனது
அளவற்ற மகிமையறிந்து எனை உள்ளபடி
அறிகிறான் பின்னர் தத் எனும்
பிரம்மத்தில் அவன் புகுவான்.

56. எல்லா செயல்களையும் சதா செய்தபோதும்
என்னையே அடைக்கலம் என்று சார்ந்தோன்
என் அருளால் அழிவற்ற நித்திய
பதம் அடையப் பெறுகிறான்.

57. எல்லா செயல்களும் என்பால் செய்வதென
அறிவால் துறந்து எனது கருணையால்
புத்தி யோகத்தில் சார்புற்று எப்பொழுதும்
என்னை சிந்தையில் நிறுத்தியிரு.

58. என்னை சித்தத்தில் நிறுத்திட எல்லா
இன்னல்களும் எனதருளால் அகலப் பெறுவாய்
அன்றி அகங்காரத்தால் என்னைக் கேளாதான்
எனில் பெரும் நாசமடைவாய்.

59. அகங்காரத்தில் அகப்பட்டு நான் போர்
புரியேன் என்று நீ நினைத்தாலும்
உனது முடிவு பொய்யாகும் இயற்கை
உன்னைப் போரிடச் செய்யும்.

60. உனது சுபாவத்தால் குந்தி மகனே
உண்டான உனக்கான செயலால் கட்டுண்ட
நீ மயக்கத்தாலதை செய்ய விரும்பாவிடினும்
தானாக அதனைச் செய்யலாவாய்.

61. ஈஸ்வரன் எல்லா உயிர்களின் உள்ளத்திலும்
இருக்கிறான் அர்ஜுனா உயிர்களை எல்லாம்
யந்திரம் இயக்குவதுபோல் தன் மாயா
சக்தியால் நடத்திச் செல்கிறான்.

62. விரைந்து அவனையே முழுதாய் சரண்
புகுந்திடு பாரதா அவனது அருளாள்
பரம சாந்தியும் நித்திய ஸ்தானமும்
நீ அடையப் பெறுவாய்.

63. இங்ஙனம் உனக்கு இரகசியத்திலும் மிக
இரகசியமான ஞானத்தை நான் உரைத்தேன்
இவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து எப்படியுன்
இஷ்டமோ அப்படியே செய்.

64. மீண்டும் ஒருமுறை ஆழ்ந்த இரகசியமான
என் பரம உபதேசத்தைக் கேள்
எனக்கு நீ இனியன் என்பதால்
உன் நன்மைக்காகச் சொல்கிறேன்.

65. என்னையே நினைத்து என் பக்தனாகி
வழிபடு அனைத்தையும் எனக்கு அர்ப்பணி
என்னை எய்துவாய் இஃதுண்மை உனக்கென்
சபதமிது நீ எனதன்பன்.

66. தர்மங்களை எல்லாம் கைவிட்டு என்
ஒருவனில் மட்டும் சரண் புகுந்திடு
நான் உன்னை எல்லா பாவங்களிலிருந்தும்
விடுவிக்கிறேன் துயரம் விடு.

67. இதை நீ எப்போதும் விரத திடமில்லாதவன்
பக்தி இல்லாதவன் தொண்டு செய்யாதவன்
மேலும் நிச்சயமாக என்பால் பொறாமை
கொண்ட எவர்க்கும் சொல்லாதே.

68. யாவன் இப்பரம இரகசியத்தை என்
பக்தரிடை சொல்வானோ அதுவே என்பால்
அவனது ஆழ்ந்த பக்தி தொண்டாகி
என்னையே எய்துவான் ஐயமில்லை!

69. அவனினும் மானிடருள் எவனும் எனக்கு
இனியதான தொண்டு செய்வான் ஆகான்
அவனினும் உலகத்தில் வேறு எவனும்
எனக்கு உகந்தவன் ஆகான்.

70. யாவன் நம்முடைய இந்தத் தர்மமயமான
உரையாடலைப் படிப்பானோ அவன் எனக்கு
செய்யும் ஞான வேள்வி வழிபாடாகக்
கொள்வேன் இஃதென் கருத்து!

71. நம்பிக்கைக் கொண்டு வன்மம் இன்றி
இதனைக் கேட்கும் அந்த மனிதனும்
விடுதலைப் பெற்று அதனால் புண்ணியவான்
அடையும் நல்லுலகங்கள் எய்துவான்.

72. இப்பொழுது இவற்றை பார்த்தா முழுக்
கவன மனதாய் கேட்டு வந்தனையா?
இப்பொழுது உனது அஞ்ஞான மயக்கம்
நீங்கப் பெற்றதா தனஞ்சயா?

73. அர்ஜுனன் சொல்கிறான்: மயக்கம் நீங்கியது
நினைவு மீளப் பெற்றேன் நின் அருளால்
அச்சுதா ஐயம் எல்லாம் அகன்றது
உனது சொல்படி செய்கிறேன்.

74. சஞ்சயன் சொல்கிறான்: இப்படி நான்
வாசுதேவனும் மகாத்மா பார்த்தனும் நடத்திய
அற்புத உரையாடலைக் கேட்டேன் என்
உடல் புளகங் கொண்டது!

75. வியாசதேவன் அருளால் நான் இந்த
பரம இரகசியமான யோகத்தை யோக
நாயகன் கிருஷ்ணன் நேராகச் சொல்ல
நான் அதைக் கேட்டேன்.

76. அரசே கேசவன் அர்ஜுனனின் அற்புதமான
இந்த உரையாடலை நினைந்து நினைந்து
அதன் புண்ணிய பாடங்களால் நான்
மீண்டும் மீண்டும் பரவசமடைகிறேன்.

77. மகா ராஜனே ஹரியின் அந்த
மிக அற்புத ரூபத்தை நினைத்து
நினைத்து எனது அளவிலா வியப்பால்
மீண்டும் மீண்டும் களிப்படைகிறேன்.

78. யோகேஸ்வரன் கிருஷ்ணன் வில் ஏந்திய
பார்த்தன் எங்குளரோ அங்கு திருவும்
ஆக்கமும் வெற்றியும் உயர்ந்த நீதியும்
நிற்கும் இஃதென் நம்பிக்கை.

மோக்ஷ சந்நியாச யோகம் (துறவு விடுதலை எய்திய நிலை) எனும் பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

இந்த கடைசி அத்தியாயம் மற்றவற்றைக் காட்டிலும் 78 ஸ்லோகங்களுடன் மிக நீண்டதாகும். நிறைய இரகசியங்கள் இங்கு சொல்லப்பட்டதால் தொகுதிக் குறிப்பு உபயோகமாகும்.

ஸ்லோகம் 18:2-6 சந்நியாசம், தியாகம் என்பன யாதெனவும் அவற்றின் வேற்றுமை எவற்றை விடலாகாது என்று சொல்கிறது.

ஸ்லோகம் 18:7-9 முக்குண தியாகங்களை வகைப்படுத்துகிறது.

ஸ்லோகம் 18:10-12 தியாகிப்பதால் ஆவதை சொல்கிறது.

ஸ்லோகம் 18:13-15 செயல்களின் ஐவகை காரணங்கள் விவரிக்கப்படுகிறது. ஸ்லோகம் 18:16-17 இதை புரிந்த நிலை.

ஸ்லோகம் 18:18 செயல்களைத் தூண்டுவன கர்மங்களின் வகைகள் சொல்லப்படுகிறது.

ஸ்லோகம் 18:19-28 ஞானம், கர்மம், கர்த்தா இவற்றின் மும்முக் குண வகைகள் கூறப்பட்டது.

ஸ்லோகம் 18:29-39 புத்தி, மன உறுதி, இன்பம் இவற்றின் வகைகள் கூறப்பட்டது.

ஸ்லோகம் 18:41-44 வர்ண வகைகள் எப்படி குணங்கள் ஒத்து இருப்தெனக் கூறுகிறது.

ஸ்லோகம் 18:45-57 ஈடேற்றம் அடையும் வழிகள் கூறுவன.
ஸ்லோகம் 18:58-66 பகவான் உபதேசத்தை கடைபிடிக்க வலியுறுத்துவன.

ஸ்லோகம் 18:67-71 எவர்க்கு இந்த பரம இரகசியத்தை சொல்லலாம், சொல்வதால், கேட்பதால் ஆவது யாதெனக் கூறுகிறது.

ஏனையவை அர்ஜுனன் நினைவு பெறுதலும் சஞ்சயன் வியப்பும் கூறுவன.

ஸ்லோகம் 18:1 கேஷிதா- கேசினி எனும் குதிரை ரூப அரக்கனைக் கொன்றதால் கண்ணனுக்கு வந்த பெயர்.

ஸ்லோகம் 18:53 மமகாரம் என்பது உரிமை உடைமை எண்ணம் அல்லது தனதென்பது.

ஸ்லோகம் 18:59 இங்கு நான் என்பது அர்ஜுனனைக் குறிப்பதாகும்.

கண்ணன் அருளிய கீதை முற்றிற்று.